# புதிய ஏற்பாட்டின்

## 27 புத்தகங்களுக்கான
## ஓர் அறிமுகம்!




- மத்தேயு
- மாற்கு
- லூக்கா
- யோவான்
- அப்போஸ்தலர்
- ரோமர்
- I கொரிந்தியர்
- II கொரிந்தியர்
- கலாத்தியர்
- எபேசியர்
- பிலிப்பியர்
- கொலோசெயர்
- I தெசலோனிக்கேயர்
- II தெசலோனிக்கேயர்
- I தீமோத்தேயு
- II தீமோத்தேயு
- தீத்து
- பிலேமோன்
- எபிரெயர்
- யாக்கோபு
- I பேதுரு
- II பேதுரு
- I யோவான்
- II யோவான்
- III யோவான்
- யூதா
- வெளிப்படுத்தின விசேஷம்

# ***புதிய ஏற்பாட்டின்***
# ***27 புத்தகங்களுக்கான***
# ***ஓர் அறிமுகம்!***

*இந்தப் புத்தகம் புதியதொரு பாதையில் செல்பவருக்கு வழிகாட்டி போன்றது. கடலில் கப்பலோட்டிச் செல்லும் மாலுமிகளுக்கு திசைகாட்டி உதவுவதுபோல் வேதத்தை வாசிப்பவர்களுக்கு வேதத்திலுள்ள புத்தகங்களுக்கான அறிமுகப் பிரதிகள் உதவுகின்றன.*

*இந்தப் புத்தகத்தில்* ***புதிய ஏற்பாட்டின்*** *ஒவ்வொரு புத்தகங்களுக்கான முக்கிய குறிப்புகள், புள்ளிவிபரங்கள், பகுப்பாய்வு மற்றும் அதிகாரத்தலைப்புகள் கொடுக்கப்பட்டி ருக்கின்றன. இதில் எழுதப்பட்டிருக்கும் குறிப்புகளை உங்கள்வேதாகமத்தில் எழுதி வைத்துக்கொள்ளுங்கள். இதில் கொடுக்கப்பட்டிருக்கும் கால அட்டவணையின்படி புதிய ஏற்பாட்டின் புத்தகங்களை வாசியுங்கள்.*

*புதிய எற்பாட்டிலுள்ள, விளங்கிக்கொள்வதற்கு சற்றுகடினமாக காணப்படும் வார்த்தைகளுக்கான பொருள் விளக்கம் இப்புத்தகத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது.*

*இந்தப் புத்தகம் உங்களுக்கு பயனுள்ளதாயிருக்கிறதா? எப்படி பயனுள்ளதாயிருந்தது என்றுஎழுதுங்கள்.*

## ***புதிய ஏற்பாடு***

*கிரேக்கு மொழியில் எழுதப்பட்டது*




## ***பழைய ஏற்பாடு***

*எபிரேயு மொழியில் எழுதப்பட்டது*



# புதிய ஏற்பாட்டின்
# 27 புத்தகங்களுக்கான
# ஓர் அறிமுகம்

- மத்தேயு
- மாற்கு
- லூக்கா
- யோவான்
- அப்போஸ்தலருடைய நடபடிகள்
- ரோமர்
- I கொரிந்தியர்
- II கொரிந்தியர்
- கலாத்தியர்
- எபேசியர்
- பிலிப்பியர்
- கொலோசெயர்
- I தெசலோனிக்கேயர்
- II தெசலோனிக்கேயர்
- I தீமோத்தேயு
- II தீமோத்தேயு
- தீத்து
- பிலேமோன்
- எபிரெயர்
- யாக்கோபு
- I பேதுரு
- II பேதுரு
- I யோவான்
- II யோவான்
- III யோவான்
- யூதா
- வெளிப்படுத்தின விசேஷம்

| புதிய ஏற்பாட்டின் | அதிகாரங்கள் | பக்கங்கள் |
|---|---|---|
| 1. மத்தேயு | 28 | 44 1/2 |
| 2. மாற்கு | 16 | 28 1/2 |
| 3. லூாக்கா | 24 | 48 |
| 4. யோவான் | 21 | 36 3/4 |
| 5. அப்போஸ்தலர் நடபடிகள் | 28 | 46 1/4 |
| 6. ரோமர் | 16 | 19 1/2 |
| 7. 1கொரிந்தியர் | 16 | 18 1/2 |
| 8. 11 கொரிந்தியர் | 13 | 12 1/4 |
| 9. கலாத்தியர் | 6 | 6 1/2 |
| 10. எபேசியர் | 6 | 6 1/4 |
| 11. பிலிப்பியர் | 4 | 4 1/2 |
| 12. கொலோசெயர் | 4 | 4 1/2 |
| 13. 1தெசலோனிக்கேயர் | 5 | 4 1/4 |
| 14. 11தெசலோனிக்கேயர் | 3 | 2 1/2 |
| 15. 1 தீமோத்தேயு | 6 | 5 1/4 |
| 16. 11தீமோத்தேயு | 4 | 3 3/4 |
| 17. தீத்து | 3 | 2 1/4 |
| 18. பிலேமோன் | 1 | 1 1/4 |
| 19. எபிரெயர் | 13 | 14 |
| 20. யாக்கோபு | 5 | 4 3/4 |
| 21. 1 பேதுரு | 5 | 5 1/4 |
| 22. 11பேதுரு | 3 | 3 1/4 |
| 23. 1 யோவான் | 5 | 5 |
| 24. 11 யோவான் | 1 | 3/4 |
| 25. 111 யோவான் | 1 | 3/4 |
| 26. யூதா | 1 | 1 1/2 |
| 27. வெளிப்படுத்தின விசேஷம் | 22 | 22 1/4 |
| புத்தகம் 27 | மொத்தம் | 355 |

**மத்தேயு, மாற்கு, லூக்கா,யோவான்**

நாம் பலரையும் பார்க்கிறோம். ஒரு சிலரை பெயரளவில் மட்டும் அறிந்திருக்கிறோம். ஆனால் நம் நண்பர் ஒருவர் அவருக்கு அறிமுகமானவரை நமக்கு அறிமுகப்படுத்தி வைத்தால் அந்த சந்திப்பு நம் நினைவில் இருக்கிறது. அதையடுத்து அவரோடு நாம் தொடர்ந்து பழகுவதினால், ஒரு புதிய உறவே ஏற்படுகிறது.

நீங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றி கேள்விப்பட்டிருக்கலாம். அவரை தனிப்பட்ட விதத்தில், நெருங்கிப் பழகிய ஒருவர் அதுவும் அவரோடு கூட இருந்தவர் உங்களுக்கு அவரை அறிமுகப்படுத்தினால் அது எவ்வளவு நன்றாக இருக்கும்! மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் என்பவர்கள் 2000ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர்கள். அவர்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை நன்றாக அறிந்தவர்கள். மத்தேயுவும், யோவானும் ஆண்டவராகிய இயேசுவின் 12 சீடர்களில் இருவர். மாற்கு இயேசு கிறிஸ்துவின் சீடரான சீமோன் பேதுருவிற்கு மிகவும் நெருக்கமானவர். லூக்கா என்பவர் கிரேக்க நாட்டைச் சேர்ந்த மருத்துவர். சிறந்த ஒரு சரித்திர ஆசிரியர்.

மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் என்பவர்கள் இயேசுகிறிஸ்துவின் வரலாற்று நிகழ்ச்சிகளையும், போதனைகளையும் வெவ்வேறு கண்ணோட்டங்களில் சித்தரித்துள்ளனர். இயேசு கிறிஸ்துவைப் பற்றி அவர்கள் அவரவருக்கான தனிப் பாணியில் அழகாக விமர்சித்துள்ளனர். இவர்கள் 4 பேர்களும் எழுதிய சுவிசேஷங்களும் அவர்களது பெயர்களினாலேயே அழைக்கப்படுகின்றன.

சுவிசேஷம் என்றால் நற்செய்தி என்று பொருள் தேவனுடைய ஆவியானவர் இந்நால் வரையும் தமது கரத்தின் கருவியாகப் பயன்படுத்தி இயேசு கிறிஸ்துவைப் பற்றிய மாபெரும் அற்புதமான உண்மைகளை வெளிப்பாடாகக் கொடுத்திருக்கிறார்.

நான்கு சுவிசேஷங்களிலும் ஆச்சரியமான தொடர்ச்சியும், கோர்வையும், ஒற்றுமையும் தனிச்சிறப்பும் காணப்படுகிறது

**உங்களுக்குத் தெரியுமா?**

- மாற்கு சுவிசேஷம் தான் முதலில் எழுதப்பட்டது.
- லூக்கா சுவிசேஷம் தான் மிகவும் நீளமானது அல்லது பெரியது.
- மத்தேயு , மாற்கு , லூக்கா இந்த மூன்று சுவிசேஷங்களும் சேர்ந்து புதிய ஏற்பாட்டில் மூன்றில் ஒரு பங்காகிறது.
- சுவிசேஷ புத்தகங்களை அடிக்கடி நீங்கள் வாசிக்க வேண்டும்
- ஒவ்வொரு அதிகாரத்திலும் 2 அல்லது அதற்கு மேற்பட்ட பத்திகள் உண்டு.
- இந்திய வேதாகம சங்கம் வெளியிட்டுள்ள பக்தனின் பாதை, நற்கதிக்கு வழி, சமாதான நிலைக்கு வழி, நித்திய ஜீவ பாதை என்ற நான்கு சுவிசேஷ பிரதிகளிலும் பத்திப் பிரிவுகள் தலைப்புகளுடன் கொடுக்கப்பட்டிருக்கின்றன.
- நான்கு சுவிசேஷங்களிலும் மொத்தம் 89 அதிகாரங்கள் உள்ளன. அதில் 4 அதிகாரங்கள் அவருடைய முதல் 30 வருட வாழ்க்கையைப் பற்றியும்
- 85 அதிகாரங்கள் அவருடைய 3 வருட வாழ்க்கையைப் பற்றியும் கூறுகின்றன
- 28 அதிகாரங்கள் அவருடைய கடைசி 8 நாள் வாழ்க்கையைப் பற்றியும் எடுத்துரைக்கின்றன.
- மத்தேயு, மாற்கு, லூக்கா என்ற மூன்று சுவிசேஷங்களிலும் பல வசனங்கள் ஒன்றையொன்று ஒத்து காணப்படுவதால் அவைகள் ஒத்த சுவிசேஷங்கள் (Synoptic Gospels) என்று அழைக்கப்படுகின்றன. இந்த மூன்று புத்தகங்களும் ஒன்றாக சேர்த்து பார்க்க வேண்டிய புத்தகங்களாகும்.

மத்தேயு என்பவர் எழுதிய சுவிசேஷத்தை வாசிப்பதற்கு முன்பாக நீங்கள் இந்தக் கட்டுரையை படியுங்கள். இதில் எழுதப்பட்டிருப்பதை நீங்கள் நன்றாகத் தெரிந்து கொண்டால் மத்தேயு சுவிசேஷத்தின் செய்தியை நீங்கள் எளிதாக விளங்கிக் கொள்ள முடியும்.

பரிசுத்த வேதாகமத்தின் ஒரு பகுதியாகிய புதிய ஏற்பாட்டின் மத்தேயு என்பவர் எழுதிய முதல் புத்தகம் தான் மத்தேயு சுவிசேஷம். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து, மக்களுக்கு இவ்வுலகில் நல்வாழ்வையும், மறுமையில் மோட்ச பாக்கியத்தையும் அருள வந்தார். இந்த நல்ல செய்தியை எடுத்துரைக்கும் புதிய ஏற்பாட்டின் முதல் நான்கு புத்தகங்களும் "நற்செய்தி நூல்கள்" அல்லது "சுவிசேஷங்கள்" என்று அழைக்கப்படுகின்றன. இந்த நற்செய்தி நூல்களில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றில் நடந்த முக்கியமான நிகழ்ச்சிகளும், உரையாடல்களும், போதனைகளும் காணப்படுகின்றன.

## எழுதியவர்:

மத்தேயு என்பவர் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சீடர்களுள் ஒருவராவார். இவர் வரி வசூலிக்கும் துறையில் அதிகாரியாகப் பணியாற்றி வந்தார். யூத மக்களின் தாய் நாடான பாலஸ்தீன நாடு,ரோம அரசாட்சிக்குட்பட்டிருந்தது. மக்களிடமிருந்து வரிகளை வசூலிக்க ரோம அரசு சில யூதர்களை நியமித்திருந்தது. வரி வசூலுக்கு வந்த அதிகாரிகளை யூத மக்கள் வெறுத்தனர். இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஆண்டவராகிய இயேசு மத்தேயுவை சந்தித்தார்.

ஒரு நாள், ஆண்டவராகிய இயேசு மத்தேயு இருந்த இடத்திற்குச் சென்று "என்னைப் பின்பற்றி வா " என்று அழைத்தார். 'மத்தேயு' ஆண்டவருடைய சீடனாய் வாழ்ந்தார். 'மத்தேயு' என்ற பெயருக்கு 'தேவனுடைய ஈவு' என்று பொருள். இவருடைய மற்றொரு பெயர் 'லேவி' என்பதாகும். 'லேவி' என்றால் 'இணைப்பு' என்று பொருளாகும். இவர் எழுதிய சுவிசேஷம் அவருடைய பெயரினாலேயே அழைக்கப்படுகிறது.

## எழுதப்பட்ட காலம்:

இந்த நற்செய்தி நூல் கி.பி. 70 ஆம் ஆண்டிற்கு முன்னர் எழுதப்பட்டது. புத்தக வரிசையின்படி இந்த சுவிசேஷம் முதலாவது இடம் பெற்றிருந்தாலும் கால வரிசையின்படி மாற்கு என்பவர் எழுதின சுவிசேஷம் தான் முதலாவது எழுதப்பட்டதாகும்.

## பின்னணி :

இப்புத்தகத்தைக் கருத்துடன் நுட்பமாகப் படித்தால் மத்தேயு யூத மக்களுக்காக இதை எழுதினார் என்பது விளங்கும்.

இயேசு கிறிஸ்து பிறப்பதற்கு முன்னர் சுமார் 400 ஆண்டு காலம் யூத மக்களின் சரித்திரம் இருண்ட காலமாக இருந்தது. இஸ்ரவேல் நாட்டு மக்கள் 'யூதர்கள்' என்றழைக்கப்பட்டனர். தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட இவர்கள் தேவனது கட்டளைகளை மீறி வாழ்ந்தபடியால் நாட்டின் செழிப்பையும், சமாதானத்தையும் இழந்து, குழப்பமும் நம்பிக்கையற்றதுமான சூழ்நிலையில் வாழ்ந்து வந்தனர். இந்த இருண்ட, துயரம் நிறைந்த நிலையிலிருந்து அவர்களை விடுதலையாக்க "மேசியா" என்றதொரு இறைமகன் தோன்றுவார் என தீர்க்கதரிசிகள் முன்னுரைத்திருந்தனர்.

"மேசியா" என்ற வார்த்தைக்கு "அபிஷேகம் பண்ணப்பட் ட ராஜா" என்று பொருள். இந்த வார்த்தையின் கிரேக்கப் பதம் தான் 'கிறிஸ்து' என்பதாகும். பழைய ஏற்பாட்டு, தீர்க்கதரிசிகளின் முன் கூற்றின்படி மேசியா (அபிஷேகம் பண்ணப்பட்ட ராஜா) வந்து ஒரு புதிய அரசாட்சியை நிறுவுவார் என்று யூத மக்கள் எதிர்பார்த்து இருந்தார்கள்.
இந்த எதிர்பார்ப்புடன் இருந்த யூத மக்களின் கண்ணோட்டத்திற்கு ஏற்ப மத்தேயு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வரலாற்றையும், போதனைகளையும் எழுதியிருக்கிறார். 'நிறைவேறிற்று' நிறைவேறுதல் என்பதைத் தழுவிய வார்த்தைகள் இந்த சுவிசேஷத்தில் 16 இடங்களில் வருவதைக் கண்டுபிடியுங்கள்.

## இப்புத்தகத்தின் செய்தி:

ராஜாவாகிய இயேசு கிறிஸ்து!

இந்த சுவிசேஷத்தில் இயேசு கிறிஸ்து **ராஜாவாக** சித்தரித்துக் காட்டப்பட்டிருக்கிறார். மத்தேயு 2:2 இல் யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே? என்ற கேள்வியைப் பார்க்கிறோம். இக்கேள்விக்கான பதில் மத்தேயு 27:37 இல் கொடுக்கப் பட்டிருக்கிறது. இவன் யூதருடைய ராஜாவாகிய இயேசு என்று எழுதி அவருடைய சிரசுக்கு மேலாக வைத்தார்கள். பரலோக ராஜ்யம் என்ற வார்த்தை 32 தடவைகளும், ராஜ்யம் என்ற வார்த்தை 55 தடவைகளும் இந்தப் புத்தகத்தில் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. யூத மக்கள் அரசியல் ரீதியில் ஒரு புதிய அரசை எதிர்பார்த்திருந்தார்கள். ஆனால் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவோ இறை அரசை நிறுவவே வந்தார். இறை அரசு என்றால் கடவுள் உலக மக்கள் மீது செலுத்தும் அழியாத, நிலையான, அன்பின் அரசாட்சியைக் குறிக்கின்றது.

ஆண்டவராகிய இயேசுவை ராஜாவாக சித்தரிக்கும் மத்தேயு தமது சுவிசேஷத்தின் முதல் அதிகாரத்தில் ராஜ வம்ச வரலாற்றின் பட்டியலைக் கொடுத்திருக்கிறார்.

இன்றைய உலகில் பல்வேறு விதமான அரசாட்சிகள் நடத்தப்படுகின்றன. அரசாட்சிகள் கவிழ்க்கப்படுகின்றன, மாற்றப்படுகின்றன. ஆனால் முடிவில்லாத, சமாதானம் நிறைந்த நித்தியமான அரசாட்சியை நிறுவ ஆண்டவராகிய இயேசு இவ்வுலகத்திற்கு மீண்டும் வரப்போகிறார்.
ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உங்கள் வாழ்க்கையையும் ஆட்கொண்டு உங்களை ஆண்டு நடத்த விரும்புகின்றார். 'ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து என் ராஜா' என்று அவருடைய அன்பின் ஆளுகைக்குட் பட்டிருக்க நீங்கள் விரும்புகிறீர்களா?

## இந்த நற்செய்தி நூலில்:

மத்தேயு சுவிசேஷத்தில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து போதித்ததும், பேசியதும் அதிகமான அளவிற்கு தரப்பட்டுள்ளது. இயேசு கிறிஸ்து செய்த 28 அற்புதங்கள் இந்த சுவிசேஷத்தில் இடம் பெற்றுள்ளன. அதில் சுகமளித்த அற்புதங்கள் 15, மக்கள் திரளை குணமாக்கின அற்புதங்கள் 7, இயற்கைக்கு மேலான அற்புத செயல்கள் 6, தம்முடைய உபதேசங்களில் ஆண்டவராகிய இயேசு பயன்படுத்திய 24 உவமைகள் இச்சுவிசேஷத்தில் காணப்படுகின்றன.

## பகுப்பாய்வு

முன்னுரை, முடிவுரை நீங்கலாக மத்தேயு சுவிசேஷம் 5 பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஒவ்வொரு பகுதியிலும் இயேசு கிறிஸ்துவின் பிரசங்கம் (அருளுரை) காணப்படுகிறது.

**முன்னுரை:**

1. இயேசு கிறிஸ்துவின் பிறப்பு, இளமைப் பருவம். அதிகாரங்கள் 1, 2

**பகுதி I பரலோக ராஜ்யத்தைப் பற்றிய அறிவிப்பு**

a) நிகழ்ச்சிகள் அதிகாரங்கள் 3, 4

b) அருளுரை (மலைப்பிரசங்கம்) 5, 6, 7,

**பகுதி II பரலோக ராஜ்யத்தைப் பற்றிய போதனை**

a) நிகழ்ச்சிகள் அதிகாரங்கள் 8, 9

b) அருளுரை (சீடர்களுக்குக் கட்டளை) அதிகாரம் 10

**பகுதி III பரலோக ராஜ்யத்தின் தன்மை**

a) நிகழ்ச்சிகள் அதிகாரங்கள் 11, 12

b) அருளுரை (பரலோக ராஜ்யத்தைப் பற்றிய உவமைகள்) அதிகாரம் 13 :1-52

**பகுதி IV பரலோக ராஜ்யத்தின் அமைப்பு**

a) நிகழ்ச்சிகள் அதிகாரங்கள் 13: 53 -17

b) அருளுரை (இடறல், குற்றம் செய்தவனுக்கான ஒழுங்கு, ஜெபம், மன்னிப்பு பற்றிய உபதேசங்கள்) அதிகாரம் 18

**பகுதி V பரலோக ராஜ்யத்தின் வருகை**

a) நிகழ்ச்சிகள் அதிகாரங்கள் 19 -23

b) அருளுரை (இரண்டாம் வருகையைப் பற்றிய உபதேசங்கள்) அதிகாரங்கள் 24, 25

**முடிவுரை**

இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணமும் உயிர்த்தெழுதலும் அதிகாரங்கள் 26 -28





**முக்கிய அதிகாரங்கள் :**

5, 6, 7 மலைப்பிரசங்கம்

10 சீடர்களுக்குக் கட்டளை

12 யூத மதத்தலைவர்கள் இயேசுவை எதிர்த்தல், புறக்கணித்தல்

13 இறையரசை (பரலோக ராஜ்யம்) விளக்கும் உண்மைகள்

24 - 25 கடைசி காலத்தைப் பற்றியும், ஆண்டவராகிய இயேசுவின் வருகையைப் பற்றியுள்ள உபதேசங்கள்

**முக்கிய வசனங்கள்:**

கீழே கொடுக்கப்பட்டிருக்கும் வசனங்களை எடுத்து வாசியுங்கள். சிந்தியுங்கள்.

| | | பக்கம் |
|---|---|---|
| 1.நீங்கள் எப்படி வாழ வேண்டும்? | 3 : 8 | 5 |
| 2. உங்கள் அன்பு | 5 : 43,44 | 8 |
| 3.உங்களுடைய ஜெபம் | 6 : 6 ,7 | 9 |
| 4. உங்கள் பரம பிதா அருளிச் செய்வது | 7 : 11 | 10 |
| 5. நீங்கள் எதற்காக ஜெபிக்க வேண்டும்? | 9 : 37, 38 | 14 |
| 6. நீங்கள் எப்படிப் பட்டவர்கள்? | 10 : 31 | 15 |
| 7.உங்கள் மனம் சோர்ந்திருக்கும் போது | 11 : 28, 29 | 17 |
| 8. உங்கள் வார்த்தைகள்? | 12 : 36, 37 | 18 |
| 9. உங்களைக் கறைப்படுத்துகிறவைகள் | 15 :16 - 20 | 23 |
| 10. உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் கட்டளை, ஆசீர்வாதம் | 28 : 18-20 | 47 |

**நீங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை எப்படி பின்பற்ற வேண்டும்?**

10 : 24, 25, 32, 33, 37-39 ......... பக்கம் 15,16

16 : 24-26 ......... பக்கம் 25

19 : 27 -30 ......... பக்கம் 29, 30

**இப்புத்தகத்தை வாசிக்கும் முறை:**

மத்தேயு சுவிசேஷத்தில் 28 அதிகாரங்கள் (1071 வசனங்கள்) தமிழ் புதிய ஏற்பாட்டில் 47 பக்கங்களில் அடங்கி உள்ளன. பரிசுத்த வேதாகமத்தில் பெரிய பிரிவு 'அதிகாரம்' என்றும் சிறிய பிரிவு 'வசனம்' என்றும் அழைக்கப்படுகின்றன. ஆண்டவரே, இந்த சுவிசேஷத்தை நான் வாசிக்கும் போது நீர் என்னோடு பேசும் என்ற எதிர்பார்ப்போடும் ஜெபத்தோடும் படியுங்கள். ஒரு முறை மட்டும் ஏதோ மேலோட்டமாகவும், வேகமாகவும் வாசித்துவிட்டு வைத்து விடாதீர்கள். இப்புத்தகத்தின் முழு செய்தியையும் நீங்கள் விளங்கிக் கொள்ள முதல் அதிகாரத்தில் ஆரம்பித்து 28 ஆம் அதிகாரம் வரை தொடர்ச்சியாக ஒன்றிரண்டு முறை வாசியுங்கள். இந்த சுவிசேஷத்தை ஒரு முறை கருத்துடன் வாய்விட்டு வாசிப்பதற்கு 3 மணி நேரம் ஆகிறது. ஒவ்வொருநாளும் மாலையில் 4 அதிகாரங்கள் வாசிப்பீர்களானால் ஒரு வாரத்தில் மத்தேயு சுவிசேஷம் முழுவதையும் நீங்கள் வாசித்து முடித்து விடலாம். மாலையில் வாசிக்கும் போது உங்களைக் கவர்ந்த வசனங்களைக் குறித்துக் கொண்டு, மறுநாள் காலையில் அவைகளை யோசித்துப் பார்ப்பது அதிக பலனைக் கொடுக்கும். நாள் ஒன்றுக்கு ஒரு அதிகாரம் வீதமும் வாசிக்கலாம். அப்படி வாசிக்கும் போது குறைந்த பட்சம் 15 நிமிடங்களாவது செலவிட்டு அந்த அதிகாரத்தைக் கவனமாய் இரண்டு மூன்று முறை வாசிப்பது அதிக உதவியாக இருக்கும்.

ஒவ்வொரு அதிகாரத்தையும் வாசிக்கும் போது அதில் எத்தனை சம்பவங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று பகுத்துப் பிரித்து வாசிக்க வேண்டும். உரையாடல் பகுதியில் இயேசு கிறிஸ்து யாரோடு சம்பாஷித்தார் எதைப் பற்றி சம்பாஷித்தார் என்று கண்டறிந்து வாசியுங்கள். உபதேச பகுதிகளை வாசிக்கும்போது எந்தெந்த தலைப்புகளில் உபதேச சத்தியம் கொடுக்கப்பட்டிருக்கின்றது, அது இன்றைய வாழ்க்கை சூழ்நிலைகளுக்கு எப்படி பொருத்தமாக இருக்க முடியும் என்று யோசித்துப் பாருங்கள்.

**ஒவ்வொரு அதிகாரத்தின் உள்ளடக்கம்**

ஒவ்வொரு அதிகாரத்தின் தலைப்புகளையும் உங்கள் வேதாகமத்தில் எழுதிக் கொள்ளுங்கள். ஏன் இந்தத் தலைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கண்டுபிடியுங்கள்.

1. இயேசு கிறிஸ்துவின் வம்ச வரலாறு, பிறப்பின் வரலாறு.
2. இயேசு பாலனை சாஸ்திரிகள் பணிந்து கொள்ளுதல், ஏரோதுவின் எதிர்ப்பு, இயேசு எகிப்திற்கு எடுத்துச் செல்லப்படுதல், ஏரோதுவின் கொடுஞ்செயல், எகிப்திலிருந்து இயேசு நாசரேத்திற்குச் செல்லுதல்.
3. யோவான் ஸ்நானனின் ஊழியம். இயேசு ஞானஸ்நானம் பெறுதல்.
4. இயேசு வனாந்திரத்தில் சோதிக்கப் படுதல், கடலோரத்தில் பிரசங்கித்தல், சீடர்களை அழைத்தல், திரளான மக்களுக்கு நன்மை செய்தல்.
5. பாக்கிய வசனங்கள், பூமிக்கு உப்பு, உலகத்திற்கு வெளிச்சம், நியாயப்பிரமாணம், கோபம், விபச்சாரம், விவாகரத்து, ஆணையிடுதல், பழி வாங்குதல் பற்றிய போதனை, அன்புகாட்ட கட்டளை.

| மத்தேயு சுவிசேஷத்தை 14 நாட்களில் வாசித்து முடிக்க அட்டவணை | |
|---|---|
| நாள் | அதிகாரங்கள் |
| 1 | 1-2 |
| 2 | 3-4 |
| 3 | 5-6 |
| 4 | 7-8 |
| 5 | 9- 10 |
| 6 | 11- 12 |
| 7 | 13-14 |
| 8 | 15-16 |
| 9 | 17-18 |
| 10 | 19-20 |
| 11 | 21-22 |
| 12 | 23-24 |
| 13 | 25-26 |
| 14 | 27-28 |

6. தர்மம், ஜெபம், உபவாசம், பொக்கிஷம், ஊழியம், கவலை.

7. தீர்ப்பளித்தல், ஜெபம், பரிசுத்த ஆவியானவர், இரு வழிகள், மரமும் கனியும்,வசனத்தின் படி செயல்படுதல்.

8. குஷ்டரோகி சுகமடைதல், நூற்றுக்கு அதிபதியின் வேலைக்காரன் பேதுருவின் மாமி மற்றும் பலர் சுகம் பெறுதல், பிசாசு பிடித்திருந்தவர்கள் குணமடைதல்.

9. திமிர்வாதக்காரன் சுகமடைதல், மத்தேயுவை அழைத்தல், கேள்விக்குப் பதில், யவீருவின் மகள் உயிர் பெறுதல், பெரும்பாடுள்ள ஸ்திரீ சுகம் பெறுதல், குருடர் பார்வையடைதல், ஊமையன் பேசுதல்.

10. பன்னிரெண்டு அப்போஸ்தலர் தெரிந்தெடுக்கப்படுதல், அனுப்பப் படுதல், அவர்கள் பெற்ற கட்டளைகள்.



11. யோவான் ஸ்நானனைப் பற்றி இயேசுவின் வார்த்தைகள், மனந்திரும்பாத பட்டணங்களைக் கடிந்துகொள்ளுதல், இயேசுவின் அழைப்பு.

12. ஓய்வுநாளில் சீஷர் கதிர்களைக் கொய்தல், சூம்பின கையை உடைய மனிதன் சுகம் பெறுதல், பிசாசு பிடித்த குருடும் ஊமையுமானவன் குணமடைதல், பரிசேயர் வேதபாரகரின் எதிர்ப்பு, இயேசு அவர்களைக் கடிந்து கொள்ளுதல், இயேசுவின் தாயாரும் சகோதரரும்.

13. பரலோக ராஜ்யத்தின் உவமைகள்: விதைக்கிறவன், களைகள், கடுகு விதை, புளித்த மாவு, புதையல், முத்து, வலை, இயேசு புறக்கணிக்கப்படுதல்.

14. யோவான் ஸ்நானனின் மரணம். இயேசு ஐயாயிரம் பேர்களுக்கு உணவளித்தல், இயேசு கடலின் மேல் நடத்தல், கெனேசரேத்தில் இயேசு நோயாளிகளை சுகமாக்குதல்.

15. முன்னோரின் பாரம்பரியம். கானானிய ஸ்திரீயின் விசுவாசம், இயேசு பலரை சுகப்படுத்துதல், இயேசு நாலாயிரம் பேருக்கு உணவளித்தல்.

16. பரிசேயர், சதுசேயர் அடையாளம் கேட்டல்,புளித்த மாவைப் போலான உபதேசம், இயேசு பேதுருவுடன் உரையாடல், இயேசு தம் மரணத்தைக் குறித்து முன்னறிவித்தல், இடறுதலாய் இருக்கக் கூடாது என்பதைப் பற்றிய போதனை.

17. மறுரூபமலை தரிசனம், சந்திரரோகி சுகம் பெறுதல், இயேசு தன் மரணத்தைக் குறித்து மீண்டும் அறிவித்தல், மீனின் வாயில்வரிப்பணம்.

18. யார் பெரியவன்?, இடறல்களைப் பற்றிய எச்சரிப்பு, காணாமற்போன ஆட்டின் உவமை, குற்றவாளிக்கான தீர்ப்பு, ஒருமனப்பட்டு செய்யும் ஜெபம், இரக்கம் காட்டாத ஊழியக்காரனைப் பற்றிய உவமை.

19. விவாகரத்து பற்றி இயேசு கூறியது, இயேசு சிறு பிள்ளைகளை ஆசீர்வதித்தல், ஐசுவரியவானாகிய வாலிபனுக்கு இயேசு தந்த பதில், சீஷர்களுக்கும் பேதுருவுக்கும் இயேசு தந்த பதில்.

20. திராட்சத் தோட்டத்து வேலையாட் களைப் பற்றிய உவமை. இயேசு தம் மரணத்தைக் குறித்து மூன்றாம் முறை அறிவித்தல், யாக்கோபு யோவானின் வேண்டுகோள், குருடர்கள் பார்வை பெறுதல்.

21. இயேசு எருசலேமிற்கு பவனி வருதல், இயேசு தேவாலயத்தை சுத்திகரித்தல், அத்திமரம் சபிக்கப்படுதல், இயேசுவின் அதிகாரத்தைப் பற்றிய கேள்வி, 2 குமாரரின் உவமை பொல்லாத திராட்சத் தோட்டக்காரரின் உவமை.

22. கல்யாண விருந்தின் உவமை, வரி செலுத்துதல், உயிர்த்தெழுதல், பெரிய கற்பனை, தாவீதின் குமாரன் பற்றி பரிசேயர் சதுசேயரின் கேள்விகளுக்கு இயேசு பதில் அளித்தல்.

23. வேதபாரகரையும் , பரிசேயரையும் இயேசு கடிந்துகொள்ளுதல், இயேசு எருசலேமிற்காக வருந்துதல்.

24. ஒலிவமலை உபதேசம். இயேசு தேவாலயத்தின் அழிவைப் பற்றி முன்னறிவித்தல், முடிவு காலத்தின் உபத்திரவங்கள், மனுஷகுமாரரின் வருகை அத்திமரத்தின் உவமை. உண்மையும், உண்மையற்ற வர்களுமான ஊழியக்காரர்.

25. 10 கன்னிகைகளின் உவமை, தாலந்துகளின் உவமை, கடைசிக் காலத்தில் கொடுக்கப்படும் தீர்ப்பைப் பற்றிய உவமை.

26. இயேசுவிற்கு விரோதமான சதி ஆலோசனை, பெத்தானியாவில் மரியாள் தைலம் பூசுதல், யூதாஸின் துரோகச் செயல், இயேசு சீஷரோடு பஸ்கா புசித்தல், பேதுருவின் மறுதலிப்பு முன்னறிவிக்கப்படுதல், கெத்செமனேயில் இயேசு ஜெபம் செய்தல், இயேசு கைதாக்கப்படுதல், பிரதான ஆசாரியன் முன் இயேசு விசாரிக்கப்படுதல், பேதுரு இயேசுவை மறுதலித்தல்.

27. பிலாத்து இயேசுவை விசாரித்தல், யூதாஸின் மரணம், இயேசு சிலுவையில் அறையப்படுதல், இயேசுவின் மரணம், இயேசுவின் அடக்கம், கல்லறைக்கு காவல் வைத்தல்.

28. இயேசுவின் உயிர்த்தெழுதல், இயேசு சீடர்களுக்கு கொடுத்த கட்டளை.

### 4 சுவிசேஷங்கள்

‘பைபிள்’ என்று அழைக்கப்படும் பரிசுத்த வேதாகமத்தின் ஆசிரியர் பரிசுத்த ஆவியானவர் ஆவார். இதில் புதிய ஏற்பாடு என்ற பகுதியில் இயேசுகிறிஸ்துவின் வரலாற்று நிகழ்ச்சிகளும் அவரது போதனைகளும், இயேசு பரமேறிச் சென்ற பின் உருவான ஆதி கிறிஸ்தவ திருச்சபையின் வரலாறும், உலகத்தின் முடிவு காலத்தில் நடைபெறும் நிகழ்ச்சி களைப் பற்றிய தீர்க்கதரிசனங்களும் எழுதப்பட்டுள்ளன.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இயேசு கிறிஸ்து வாழ்ந்த காலத்தில் பாலஸ்தீன நாட்டில், யூதர், ரோமர், கிரேக்கர் என்ற மூன்று வகையான மக்கள் வாழ்ந்தனர். வெவ்வேறு விதமான கலாச்சாரத்தை சேர்ந்த இவர்கள் புரிந்துகொள்ளும் வகையில் முறையே மத்தேயு, மாற்கு, லூக்கா என்பவர்கள் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கைச் சம்பவங் களையும், போதனைகளையும் வெவ்வேறு கண்ணோட்டத்துடன் சித்தரித்துக் காட்டியிருக்கின்றனர். ஐம்பது ஆண்டு களுக்குப் பின்னர் யோவான் சுவிசேஷம் எழுதப்பட்டது.

**புள்ளி விபரங்கள்**

**நிறைவேறுதல் என்பதைத் தழுவிய வார்த்தைகள் 16முறை முறை**

| | | |
|---|---|---|
| ப.ஏ. மேற்கோள்கள் | **60** | ” |
| தாவீதின் குமாரன் | **10** | ” |
| இயேசுவின் போதனை | **60%** | ” |
| பரலோக ராஜ்யம் | **32** | ” |
| பரலோகம் | **25** | ” |
| ராஜ்யம் | **55** | ” |
| மனந்திரும்புதல் | **10** | ” |

**அற்புதங்கள் 28 முறை**

- திரளான மக்கள் சுகமாகுதல் 8
- சுகம் 9
- இயற்கையின் மேல் 6
- விடுதலை 5

| | | |
|---|---|---|
| உவமைகள் | 24 | **முறை** |
| ஜெபம் | 16 | ” |
| வேதபாரகர் | 24 | ” |
| பரிசேயர் | 30 | ” |
| சதுசேயர் | 7 | ” |
| மனதுருகி | 3 | ” |

**மன்னிப்பு**

**அதிகாரங்கள் :** 6, 9, 18

**10 கட்டளைகள்**

**அதிகாரங்கள்:** 5, 19, 22

**3 பிரசங்கங்கள்**

1. 5,6, 7, மலைப் பிரசங்கம்
2. யோா 13-17 இயேசு - சீஷர்கள் உரையாடல்,கடைசியாகப் பேசியது
3. மத்தேயு 24, மாற்கு 13, லூாக்கா 21 ஒலிவ மலைப் பிரசங்கம்

## முக்கிய வசனங்கள்

1 : 21
2 : 2
**3 : 8**
4 : 4, 17, 19
5 : 5, 8, 16, 44
6 : 6, 33
7 : 7, 13, 14
8 : 8 ,17
9 : 2, 9, 13, 36, 37, 38
10 : 10, 20, 37, 38 , 39,
11 : 28- 30
12 : 36 , 37
13 : 23
14 : 23
**15 : 16, 17, 18, 19**
**16 : 16, 17, 18, 19**
17 : 8
**18 : 18,** 19, 20
**19 : 16,17,18, 19**
20 : 28
21 : 21, 22, 28
22 : 36, 37, 38, 39- 40
23 : 12
24 : 44
25 : 21, 23
26 : 36, 41
27 : 54
28 : 18, 19, 20



### அற்புதங்கள் : அதிகாரம் 8

1. குஷ்டரோகியைச் சுத்தப்படுத்துதல்.
2. நூற்றுக்கு அதிபதியின் வேலைக்காரனை சுகமாக்குதல்.
3. பேதுருவின் மாமியை சுகமாக்குதல்.
4. காற்றையும் கடலையும் அமைதிப்படுத்துதல்.
5. பிசாசு பிடித்திருந்த இருவரை விடுதலையாக்குதல்.

### அதிகாரம் 9

6. திமிர்வாதக்காரனை குணமாக்குதல்
7. யவீருவின் மகளை உயிரோடு எழுப்புதல்.
8. பெரும்பாடுள்ள ஸ்திரீ குணமாகுதல்.
9. 2 குருடர்கள் பார்வை பெறுதல்.
10. பிசாசு பிடித்திருந்த ஊமையனைக் குணமாக்குதல்.
11. சூம்பின கையுடையவனைக் சொஸ்தமாக்குதல். **12** : 9 -13
12. பிசாசு பிடித்திருந்த குருடும் ஊமையுமானவனைக் குணமாக்குதல்.
13. 5000 பேரை போஷித்தல். **14** :13 -21
14. கடலின் மேல் நடத்தல் **14** : 25, 26
15. கானானிய ஸ்திரீயின் மகளைக் குணமாக்குதல். **15** : 22- 28
16. 4000 பேரை போஷித்தல். **15 :** 32- 36
17. அசுத்த ஆவி பிடித்திருந்த மகனை சொஸ்தமாக்குதல். **17:** 14-18
18. மீனின் வாயிலிருந்து வரிப்பணம் பெறச் செய்தல். **17** : 27
19. 2 குருடர் பார்வை பெறுதல். **20** : 30
20. அத்திமரம் பட்டுப்போகுதல். **21** : 18,19
21. குருடரும், சப்பாணிகளும் தேவாலயத்தில் சுகமாகுதல் **21** : 14

### திரளான மக்களை சுகமாக்குதல்

**1.** ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கிச் சொஸ்தமாக்கினார். **4** : 23

சகல பிணியாளிகளையும், பிசாசு பிடித்தவர்களையும் சந்திரரோகிகளையும், திமிர்வாதக்காரரையும் அவரிடத்தில் கொண்டு வந்தார்கள்; அவர்களை சொஸ்தமாக்கினார். **4** : 24

**2.** திரளான மக்களை சுகமாக்குதல். **8** : 16

**3.** ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கி,அவர்களைச் சொஸ்தமாக்கினார். **9** : 35

**4.** திரளான ஜனங்கள் அவருக்குப் பின்சென்றார்கள்; அவர்களெல்லாரையும் அவர் சொஸ்தமாக்கி, **12** : 15

**5.** இயேசு வந்து, திரளான ஜனங்களைக் கண்டு, அவர்கள்மேல் மனதுருகி, அவர்களில் வியாதியஸ்தர்களாயிருந்தவர்களைச் சொஸ்தமாக்கினார். **14** : 14

**6.** பிணியாளிகளெல்லாரையும் அவரிடத்தில் கொண்டுவந்து, **14** : 35 அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தையாகிலும் அவர்கள் தொடும்படி உத்தரவாகவேண்டுமென்று அவரை வேண்டிக்கொண்டார்கள்; தொட்ட யாவரும் சொஸ்தமானார்கள் . **14** : 36

**7.** அப்பொழுது , சப்பாணிகள், குருடர், ஊமையர், ஊனர், முதலிய அநேகரை, திரளான ஜனங்கள் கூட்டிக்கொண்டு இயேசுவினிடத்தில் வந்து, அவர்களை அவர் பாதத்திலே வைத்தார்கள்; அவர்களை அவர் சொஸ்தப்படுத்தினார். **15** : 30

ஊமையர் பேசுகிறதையும், ஊனர் சொஸ்தமடைகிறதையும் , சப்பாணிகள் நடக்கிறதையும், குருடர் பார்க்கிறதையும் ஜனங்கள் கண்டு, ஆச்சரியப்பட்டு, இஸ்ரவேலின் தேவனை மகிமைப் படுத்தினார்கள். **15** : 31

**8.** திரளான ஜனங்கள் அவருக்குப் பின்சென்றார்கள் ; அவ்விடத்தில் அவர்களைச் சொஸ்தமாக்கினார். **19** : 2

பரிசுத்த வேதாகமத்தின் ஒரு பகுதியாகிய புதிய ஏற்பாட்டில் முதல் நான்கு புத்தகங்களும் சுவிசேஷ புத்தகங்கள் அல்லது நற்செய்தி நூல்கள் என்று அழைக்கப்படுகின்றன. இந்த நான்கு சுவிசேஷங்களில் மாற்கு என்பவர் எழுதிய சுவிசேஷம் மாற்கு சுவிசேஷம் என்று அழைக்கப்படுகிறது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இயேசு கிறிஸ்து தெய்வத்தின் அவதாரமாக இவ்வுலகில் பிறந்தார். இயேசு கிறிஸ்து பிறந்து, வளர்ந்து, பணி செய்த நாடு பாலஸ்தீனம் என்று அழைக்கப்பட்டது. இப்போது இந்த நாடு இஸ்ரவேல் என்று அழைக்கப்படுகிறது. இந்த நாடு ரோம ஆட்சிக்குட்பட்டு இருந்தது. இந்த நாட்டில் யூதர், ரோமர், கிரேக்கர் என்று மூன்று வகையான மக்கள் வாழ்ந்து வந்தனர். இயேசு கிறிஸ்து யூத குலத்தில் தோன்றினார். மாற்கு சுவிசேஷத்தை எழுதிய மாற்கு என்பவரும் யூத குலத்தவராவார். இவர் ரோம மக்கள் புரிந்துகொள்ளும் வகையில் இந்த நற்செய்தி நூலை எழுதினார்.

**எழுதியவர்:**

இவருடைய முழுப்பெயர் யோவான் மாற்கு என்பதாகும். இயேசு கிறிஸ்து ஊழியம் செய்த காலத்தில் இவர் ஒரு வாலிபனாக இருந்தார். இவருடைய தாயார் பெயர் மரியாள். இவர் அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் சொல்லப்படுகின்ற பர்னபா என்பவருக்கு நெருங்கிய உறவினராக இருந்தார். மாபெரும் மிஷனெரி ஊழியரான அப்போஸ்தலனாகிய பவுலோடு இவர் சேர்ந்து ஊழியம் செய்தார். மாற்கு இந்த சுவிசேஷத்தை எழுதுவதற்கு இயேசு கிறிஸ்துவின் பன்னிரெண்டு சீடர்களுள் ஒருவராகிய அப்போஸ் தலனாகிய பேதுரு தான் முக்கிய காரணமாக இருந்தார் என்று தெரிகிறது.

**எழுதப்பட்ட காலம்:**

கி. பி. 55 இல் இருந்து 58 க்குள் இந்த நற்செய்தி நூல் தான் முதலாவது எழுதப்பட்ட சுவிசேஷப் புத்தகமாகும். இச்சுவிசேஷத்தில் எழுதப்பட்டிருக்கும் பல பகுதிகள் மற்ற மூன்று சுவிசேஷங்களிலும் காணப்படுகின்றன. மாற்கு ரோம் பட்டணத்திலிருந்த போது அங்கிருந்த மக்களுக்கு இந்த சுவிசேஷத்தை எழுதினார்.

**இப்புத்தகத்தின் செய்தி :**
**ஊழியக்காரரான இயேசு கிறிஸ்து:**

நான்கு சுவிசேஷங்களும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை நான்கு விதங்களில் சித்தரித்துக் காட்டுகின்றன. மாற்கு சுவிசேஷத்தில் இயேசு ஊழியக்காரராக சித்தரித்துக் காட்டப்பட்டிருக்கிறார். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் போதனையைக் காட்டிலும் அவர் செய்தவைகள் அதிகமாகத் தரப்பட்டுள்ளன. மத்தேயு சுவிசேஷத்தில் இயேசு கிறிஸ்துவின் போதனைகள் அதிகமாகக் காணப்படுவதைப் பார்க்கிறோம்.

மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் என்ற 4 சுவிசேஷங்களில் மாற்கு சுவிசேஷம் தான் குறைந்த அதிகாரங்களைக் கொண்டது. இந்த சுவிசேஷத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் நிகழ்ச்சிகள் பெரும்பாலும் கால வரிசைப்படி அமைந்து இருக்கின்றன.

மாற்கு இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுவதற்கு அப்போஸ்தலனாகிய பேதுருதான் காரணமாக இருந்தார். அவர் சொல்ல மாற்கு எழுதினார் என்று நம்பப்படுகிறது. ரோம மக்கள் சுறுசுறுப்பும், விறுவிறுப்பும் நிறைந்தவர்கள். அவர்களுடைய மனதைக் கவரும் வகையில் இயேசு கிறிஸ்து ஒரு செயல் வீரராக இச்சுவிசேஷத்தில் சித்தரித்துக் காட்டப்பட்டிருக்கிறார்.

இயேசு கிறிஸ்துவின் பிறப்பைப் பற்றியோ வளர்ப்பைப் பற்றியோ இச்சுவிசேஷத்தில் எழுதப்படவில்லை என்பது நாம் கவனிக்க வேண்டிய ஒரு முக்கிய குறிப்பாகும். மாற்கு1:1 ஆம் வசனத்தைக் கவனியுங்கள். தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் ஆரம்பம்.

இயேசு கிறிஸ்து செய்த 18 அற்புதங்கள் இச்சுவிசேஷத்தில் இடம் பெற்றிருக்கின்றன. தம்முடைய உபதேசங்களில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பயன்படுத்திய 9 உவமைகள் இப்புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கின்றன. இயேசு கிறிஸ்து பாலஸ்தீன நாட்டின் வடபகுதியிலிருந்த கலிலேயாப் பிரதேசத்தில் செய்த ஊழியங்கள் அதிக விளக்கமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 'உடனே' என்ற வார்த்தை 44 முறைகள் வருகின்றன.

**பகுப்பாய்வு:**

**1 to 10 அதிகாரங்கள்**

**இயேசு கிறிஸ்து மனிதருக்குப் பணி செய்தல்**

கலிலேயா, பெரோயா பகுதிகளில் ஊழியம்.

| | | |
|---|---|---|
| 1:1 - 2:12 | இயேசு கிறிஸ்து அறிமுகப்படுத்தப்படுதல் | 3 வருடங்கள் |
| 2:13 - 8 : 26 | இயேசு கிறிஸ்துவுக்கு வந்த எதிர்ப்புகள் | |
| 8:27 - 10: 52 | இயேசு கிறிஸ்துவின் உபதேசங்கள் | 6 மாதங்கள் |

**11 to 16 அதிகாரங்கள்:**

**இயேசு கிறிஸ்து மனிதருக்காய் பலியாதல்**

**யூதேயா எருசலேமில் ஊழியங்கள்**

| | | |
|---|---|---|
| 11:1 - 15 : 47 | புறக்கணிக்கப்படுதல் சிலுவையில் அறையப்படுதல் இயேசுவின் அடக்கம் | 8 நாட்கள் |
| 16:1- 16: 20 | இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் | |

**முக்கிய வசனம் 10 : 45**

அப்படியே மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படிவராமல் ஊழியஞ்செய்யவும் அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்.

**முக்கிய வார்த்தை:**

"உடனே" என்ற வார்த்தை எங்கெல்லாம் வருகிறது என்று பாருங்கள். வீடு, வீட்டை போன்ற வார்த்தைகள் எத்தனை முறை வருகின்றன என்று கவனியுங்கள்.

மாற்கு சுவிசேஷத்தை 8 நாட்களில் வாசித்து முடிக்க அட்டவணை

| நாள் | அதிகாரங்கள் |
|---|---|
| 1 | 1-2 |
| 2 | 3-4 |
| 3 | 5-6 |
| 4 | 7-8 |
| 5 | 9-10 |
| 6 | 11-12 |
| 7 | 13-14 |
| 8 | 15-16 |

**இப்புத்தகத்தை வாசிக்கும் முறை:**

மாற்கு சுவிசேஷத்தில் 16 அதிகாரங்கள் (678 வசனங்கள்) புதிய ஏற்பாட்டில் 29 பக்கங்களில் அடங்கியுள்ளன. பரிசுத்த வேதாகமத்தின் ஒவ்வொரு புத்தகத்திலும் பெரிய பிரிவு அதிகாரம் என்றும் சிறிய பிரிவு வசனம் என்றும் அழைக்கப்படுகின்றன.

இந்த சுவிசேஷத்தில் ஒவ்வொரு அதிகாரத்திலும் நான்கிற்கும் அதிகமான பத்திகள் வருவதைக் கவனியுங்கள். ஒவ்வொரு அதிகாரத்தையும் வாசிக்கும் போது பத்திப் பிரிவை கவனித்து வாசியுங்கள். மாற்கு சுவிசேஷம் மட்டும் தனிப்பிரதியாக கிடைக்கிறது. அந்த சுவிசேஷப் பிரதியில் கொடுக்கப்பட்டிருக்கும் பத்தி தலைப்புகளை கவனத்தில் கொண்டு வாசித்தால் புத்தகத்தின் செய்தியைத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

இந்த சுவிசேஷத்தை கருத்துடன் ஒரு முறை வாசிப்பதற்கு ஒன்றரை மணி நேரம் ஆகிறது. ஒவ்வொரு நாளும் மூன்று அதிகாரங்கள் வாசித்தால் 6 நாட்களுக்குள் இச்சுவிசேஷத்தை வாசித்து முடித்து விடலாம். நாள் ஒன்றுக்கு 1 அதிகாரம் வீதம் வாசிக்கலாம்.

**ஒவ்வொரு அதிகாரத்தின் உள்ளடக்கம்.**

1. யோவான் ஸ்நானனின் ஆயத்த ஊழியம், இயேசு ஞானஸ்நானம் பெறுதல், சோதிக்கப்படுதல், இயேசு கிறஸ்துவின் ஆரம்ப ஊழியம். பிரசங்கம், சீடர்களை அனுப்புதல், குணமாக்குதல், பிசாசுகளைத் துரத்துதல்.
2. திமிர்வாதக்காரனை சுகப்படுத்துதல், லேவியை அழைத்தல், கேள்விகளுக்குப் பதிலளித்தல்.
3. சூம்பின கையை உடைய மனிதனை குணமாக்குதல், மக்கள் திரளைக் குணமாக்குதல், 12 சீடர்களைத் தெரிந்துகொள்ளுதல், கேள்விகளுக்கு பதிலளித்தல், இயேசுவின் குடும்பத்தார்.
4. 4 உவமைகள், கடல் கொந்தளிப்பை அமர்த்துதல்.
5. அசுத்த ஆவி பிடித்த மனிதனைக் குணமாக்குதல், 12 வருட பெரும்பாடுள்ள பெண்ணைக் குணமாக்குதல், யவீருவின் மகளை உயிரோடு எழுப்புதல்.
6. நாசரேத்து ஊரார் இயேசுவைப் புறக்கணித்தல், 12 சீடர்கள் அனுப்பப்படுதல், யோவான் ஸ்நானன் சிரச்சேதம் பண்ணப்படுதல், இயேசு செய்த அற்புதங்கள்.



7. பாரம்பரியத்தைப் பற்றிய கேள்விகளுக்குப் பதிலளித்தல், தீட்டுப்படுத்துவதைப் பற்றிய உபதேசம், கிரேக்கப் பெண்ணின் மகளிடம் இருந்த பிசாசைத் துரத்துதல், கொன்னை வாயுடைய செவிடனைக் குணமாக்குதல்.
8. நாலாயிரம் பேரை போஷித்தல், பரிசேயரைக் கடிந்துகொள்ளுதல், சீஷரை எச்சரித்தல், குருடனுக்குப் பார்வை அளித்தல், பேதுருவின் அறிக்கை. இயேசு பாடுகளைக் குறித்து முன்னறிவித்தல் (1)
9. இயேசு மறுரூபமாகுதல், ஊமையான ஆவி பிடித்தவனைக் குணமாக்குதல், இயேசு பாடுகளைப் பற்றி முன்னறிவித்தல் (2) சீடர்களின் தர்க்கங்களுக்குப் பதிலளித்தல், இடறல் பற்றி இயேசுவின் உபதேசம்.
10. புருஷன் மனைவியைத் தள்ளிவிடுதல் பற்றிய உபதேசம், சிறுபிள்ளைகளை ஆசீர்வதித்தல், செல்வந்தனான மனிதன் இயேசுவை சந்தித்தல். இயேசு பாடுகளைக் குறித்து முன்னறிவித்தல் (3) யாக்கோபு, யோவானுடைய வேண்டுகோள். குருடனான பர்திமேயுவுக்கு இயேசு பார்வையளித்தல்.
11. எருசலேமிற்கு பவனி செல்லுதல், அத்திமரத்தைச் சபித்தல், தேவாலயத்தைச் சுத்திகரித்தல், ஜெபத்தைக் குறித்த உபதேசம். இயேசுவின் அதிகாரத்தைப் பற்றிய கேள்வி.
12. திராட்சத் தோட்ட வேலைக்காரனைப் பற்றிய உவமை, வரிசெலுத்துதல், உயிர்த்தெழுதல் பற்றிய கேள்விகள், பிரதான கற்பனை, மேசியாவப் பற்றிய கேள்வி, இயேசுவின் எச்சரிப்பு, விதவையின் காணிக்கை.

13. கடைசி கால சம்பவங்கள்.

14. பெத்தானியாவில் இயேசுவின் பாதங்களுக்கு மரியாள் தைலம் பூசுதல், சீடருடன் இயேசு கடைசி பந்தி அருந்துதல், கெத்செமனே ஜெபம், இயேசு கைது செய்யப்படுதல். இயேசுவின் விசாரணை, பேதுரு இயேசுவை மறுதலித்தல்.

15. பிலாத்து இயேசுவை விசாரித்தல், தீர்ப்பளித்தல், போர்ச்சேவகர்கள் இயேசுவைத் துன்புறுத்துதல், இயேசுவின் மரணம் அடக்கம்.

16. இயேசுவின் உயிர்த்தெழுதல், கடைசி வார்த்தைகள் இயேசு பரமேறிச் செல்லுதல்.

## சில முக்கிய குறிப்புகள்:

மாற்கு சுவிசேஷத்தில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையில் நடைபெற்ற அநேக நிகழ்ச்சிகள் எழுதப்பட்டிருக்கின்றன. இச்சுவிசேஷத்தை ஒரு கதைப் புத்தகத்தைப் படிப்பது போல ரசித்துப் படிக்கலாம். மாற்கு சுவிசேஷத்தை உதவியாகக் கொண்டுதான் மத்தேயு, லூக்கா சுவிசேஷங்கள் எழுதப்பட்டன. இந்தச் சுவிசேஷத்தில் 31 வசனங்களைத் தவிர மற்ற வசனங்கள் மத்தேயு, லூக்கா, யோவான் என்ற சுவிசேஷங்களில் சொல்லப்பட்டிருப்பதைக் கவனிக்க முடியும்.

பாலஸ்தீன நாட்டின் தென்பகுதி ‘யூதேயா’ என்றும், வடபகுதி ‘கலிலேயா’ என்றும் அழைக்கப்பட்டது. இவ்விரண்டு பகுதிகளுக்கும் இடையில் சமாரியா என்ற பகுதி இருந்தது. கலிலேயாவில் தான் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஊழியத்தை ஆரம்பித்தார். இப்பகுதியில் கப்பர்நகூம், நாசரேத், கெனசரேத், பெத்சாயிதா என்பவை முக்கிய பட்டணங்களாகும். இப்பகுதிக்கு வடக்கே தீரு, சீதோன், பிலிப்பு, செசரியா பட்டணங்களுக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சென்றார். தம்முடைய ஊழியத்தில் கடைசி சில மாதங்களை யூதேயாவில் செலவிட்டார். எருசலேம் , எரிகோ, பெத்தானியா, பெத்பகே, யூதேயா என்ற பகுதியில் உள்ள முக்கிய பட்டணங்களாகும். இயேசு கிறிஸ்து பாடுபட்ட வாரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் மாற்கு சுவிசேஷத்தில் அதிக அளவிற்கு இடம் பெற்றிருக்கின்றன.

## ஜெபம்

ஆண்டவராகிய இயேசுவே! இவ்வுலக மக்களுக்கு பணியாற்றவும் அவர்களுடைய பாவங்களுக்காக பிராயச்சித்தபலியாகவும் இவ்வுலகிற்கு வந்தீரே! எங்களுக்காக பலியாக உம்மையே ஒப்புக்கொடுத்தீரே! உமக்கு ஸ்தோத்திரம். உம்மை நான் ஏற்றுக்கொள்கிறேன். உம்மை என்றென்றும் பின்பற்றுவேன். உம்மைப் போல் பணி செய்ய என்னைப் பெலப்படுத்தும். ஆமென் !

## இயேசு ஊழியம் செய்த இடங்கள்

எருசலேம், பெத்லகேம், எரிகோ, சீகார், பெத்தானியா, தெக்கப்போலி, நாயீன் - நாசரேத், கானா, கப்பர்நகூம், கோராசீன், பெத்சாயிதா, கலிலேயா.

பரிசுத்த வேதாகமத்தின் ஒரு பகுதியாகிய புதிய ஏற்பாட்டில் முதல் நான்கு புத்தகங்களும் இயேசு கிறிஸ்துவைப் பற்றிய நல்ல செய்தியை அறிவிக்கின்றன. எனவே அவைகள் 'சுவிசேஷங்கள்' அல்லது 'நற்செய்தி நூல்கள்' என்று அழைக்கப்படுகின்றன. இந்த நான்கு சுவிசேஷங்களிலும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையில் நடந்த முக்கிய சம்பவங்களும் அவர் கொடுத்த உபதேசங்களும் எழுதப்பட்டிருக்கின்றன.

ஒவ்வொரு சுவிசேஷத்தை எழுதினவரும் வெவ்வேறு கண்ணோட்டத்துடன் இயேசு கிறிஸ்துவை சித்தரித்துக் காட்டியிருக்கிறார்கள். ஒவ்வொரு சுவிசேஷமும் அதை எழுதினவரின் பெயரிலேயே அழைக்கப்படுகிறது. லூக்கா என்பவர் எழுதின சுவிசேஷம் புதிய ஏற்பாட்டுப் புத்தக வரிசையில் மூன்றாவது புத்தகமாகும்.

### எழுதியவர்:

லூக்கா என்பவர் கிரேக்க நாட்டைச் சேர்ந்தவர். இவர் ஒரு மருத்துவர். சிறந்த அறிவாளியாக இருந்தார். இயேசு கிறிஸ்துவை இவர் பார்த்திரா விட்டாலும் அவரைக் குறித்து அதிக மாகக் கேள்விப்பட்டிருந்தார். இவர் இயேசு கிறிஸ்துவை பின்பற்றுகிறவராக வாழ்ந்தார். இயேசு கிறிஸ்துவின் காலத்தை அடுத்து வாழ்ந்த அப்போஸ் தலனாகிய பவுல் என்பவரோடு லூக்கா பலமுறை நற்செய்தி அறிவிப்பதற்காக பல நாடுகளுக்கு பிரயாணமாகச் சென்றார்.

- ❖ மாற்கு சுவிசேஷம் தான் முதலில் எழுதப்பட்டது.
- ❖ லூக்கா சுவிசேஷம் தான் மிகவும் நீளமானது அல்லது பெரியது.
- ❖ மத்தேயு, மாற்கு, லூக்கா இந்த மூன்று சுவிசேஷங்களும் சேர்ந்து புதிய ஏற்பாட்டில் மூன்றில் ஒரு பங்காகிறது.

### பின்னணி :

லூாக்கா, என்பவர் தேயோப்பிலு என்ற தன்னுடைய நண்பருக்கு எழுதின புத்தகத் தொகுப்பில் முதல் பகுதி தான் லூாக்கா சுவிசேஷம் ஆகும். தேயோப்பிலு என்ற வார்த்தையின் பொருள் தேவனுக்கு பிரியமானவன். 'லூாக்கா' என்ற வார்த்தையின் பொருள் பிரகாசம். தேயோப்பிலு என்பவர் கண்ணியமான உயர்மட்ட அதிகாரியாயிருந்தார். லூாக்கா என்பவர் லூாக்கா சுவிசேஷத்தையும், அப்போஸ்தலருடைய நடபடிகள் என்ற புத்தகத்தையும் எழுதினார். கிறிஸ்தவ திருச்சபையின் ஆரம்ப காலத்தில் இந்த இரண்டு புத்தகங்களும் ஒரேதொகுப்பாக இருந்தன.

கிரேக்க மக்கள் பண்பாடு நிறைந்தவர்கள். அறிவுத்திறன் பெற்றவர்கள். உயர்ந்த மனிதப் பண்புகள் பொருந்தியவர்கள். இவர்கள் சுவிசேஷத்தின் சத்தியத்தைப் புரிந்துகொள்ளும் வகையில் இயேசு கிறிஸ்துவைப் பற்றி மிகவும் தெளிவாக நுட்பமான குறிப்புகளுடன் லூாக்கா இந்த சுவிசேஷத்தை எழுதியிருக்கிறார். அவர் எப்படி இச்சுவிசேஷத்தை எழுதினார் என்பதை முதல் அதிகாரத்தின் முதல் நான்கு வசனங்களில் விளக்குகிறார். தயவு செய்து எடுத்துப் படித்துப்பாருங்கள்.

லூாக்காவைப் பற்றி .

கொலோசெயர் 4 :14

II தீமோத்தேயு 4 :11

பிலேமோன் 24-ஆம் வசனம்

- ❖ மத்தேயு, மாற்கு, லூாக்கா இந்த மூன்று சுவிசேஷங்களிலும் அநேக பகுதிகள் ஒன்றுபோல் காணப்படுகின்றன.

## இப்புத்தகத்தைப் பற்றி :

மத்தேயு, யூத மக்கள் புரிந்து கொள்ளும் வகையில் இயேசு கிறிஸ்துவை இராஜாவாக படம் பிடித்துக் காட்டியிருக்கிறார். மாற்கு இயேசு கிறிஸ்துவை ரோம மக்கள் விளங்கிக்கொள்ளும் வகையில் பணிசெய்யும் செயல் வீரராக சித்தரித்திருக்கிறார். லூக்கா இயேசு கிறிஸ்துவை மனதுருக்கம் நிறைந்த உலக இரட்சகராக வர்ணித்து எழுதியிருக்கிறார். இரக்கம், தயவு, கருணை, அன்பு போன்ற மனிதத் தன்மைகளை எப்படி இயேசு வெளிப்படுத்துகிறார் என்று இச்சுவிசேஷத்தில் நாம் பார்க்க முடியும்.

2000 ஆண்டுகளுக்கு முன்பாக மனித அவதாரமாக வந்த இயேசு கிறிஸ்து தெய்வத்தின் தன்மையும், மனிதத்தன்மையும் ஒருங்கே பொருந்தினவராக இவ்வுலகத்தில் வாழ்ந்தார். இயற்கையின் மீது இயேசு கொண்டிருந்த அதிகாரம் தெய்வத்தன்மைக்கு ஒரு எடுத்துக் காட்டாகும். நட்பு, பரிதாப உணர்ச்சி போன்ற மனிதத் தன்மை பொருந்தியவராகவும், இயேசு தம்மை வெளிப்படுத்தியதால், இயேசுகிறிஸ்து மனுஷகுமாரன் என்று அழைக்கப்படுகிறார். லூக்கா, இயேசு கிறிஸ்துவை உலக இரட்சகராகவும் மனுஷகுமாரனாகவும் சித்தரித்துக் காட்டியிருக்கிறார்.

## எழுதப்பட்ட காலம் :

கி.பி. 60 இல் இருந்து 70 க்குள்.

34 ஆண்டுகளின் வரலாறு

## இந்த நற்செய்தி நூலில்:

இயேசு கிறிஸ்து செய்த 22 அற்புதங்களும், அவர் சொன்ன 25 உவமைகளும் காணப்படுகின்றன. சிறந்த தெய்வீகப் போதகரான இயேசு கிறிஸ்து ஆன்மீக வாழ்க்கைக் குரிய சத்தியங்களை உபதேசித்த போது முக்கியமான 'உண்மைகளை விளக்குவதற்காக உவமைகளைப் பயன்படுத்தினார்.' உவமை என்றால் 'எடுத்துக்காட்டு' என்று பொருள் கொள்ளலாம். நடைமுறை வாழ்க்கையில் பொதுவாக மக்களுக்குத் தெரிந்திருந்த சம்பவங்கள், நிலைமைகளை எடுத்துக்காட்டாகச் சொல்லி தெய்வீக உண்மைகளை இயேசு விளக்குகிறார்.

## பகுப்பாய்வு:

| | |
|---|---|
| 1.1 - 4:13 | மனுஷகுமாரன் அறிமுகப்படுத்தப்படுதல் |
| 4.14 - 9:50 | மனுஷகுமாரனின் ஊழியம் (கலிலேயாவில்) |
| 9:51 - 19:27 | மனுஷகுமாரன் புறக்கணிக் கப்படுதல் ( யூதேயாவில்) |
| 19:28 - 24:53 | மனுஷகுமாரன் சிலுவையில் அறையப்படுதல் உயிர்த்தெழுதல் (எருசலேமில்) |

## முக்கிய அதிகாரங்கள்:

சீஷத்துவம் 9 ஆம் அதிகாரம்

**3 உவமைகள் 15 ஆம் அதிகாரம்**

காணாமற்போன ஆடு
காணாமற்போன வெள்ளிக்காசு
காணாமற்போன இளையமகன்

## முக்கிய வசனம்:

19:10 இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார் என்றார்.

## முக்கிய வார்த்தைகள் :

| | |
|---|---|
| மனுஷகுமாரன் | 27 |
| தேவனுடைய குமாரன் | 6 |
| சந்தோஷம் | 23 |
| ஆச்சரியப்பட்டார்கள் | 17 |
| ஜெபம் ( தழுவிய வார்த்தைகள்) | 20 |

லூக்கா சுவிசேஷத்தைப் படிக்கும் போது இந்த வார்த்தை எங்கெல்லாம் வருகிறது என்று குறித்துப் படித்துப் பாருங்கள்.

## இப்புத்தகத்தை வாசிக்கும் முறை:

லூக்கா சுவிசேஷத்தில் 24 அதிகாரங்கள் (1151 வசனங்கள்) தமிழ் புதிய ஏற்பாட்டில் 48 பக்கங்களில் அடங்கி உள்ளன. இந்த சுவிசேஷத்தில் ஒவ்வொரு அதிகாரத்திலும் நான்கிற்கும் அதிகமான பத்திகள் வருவதைக் கவனியுங்கள். ஒவ்வொரு அதிகாரத்தையும் வாசிக்கும் போது பத்திப்பிரிவை கவனித்து வாசியுங்கள்.

லூக்கா சுவிசேஷத்தை 13 நாட்களில் வாசித்து முடிக்க அட்டவணை

| நாள் | அதிகாரங்கள் |
|---|---|
| 1 | 1 |
| 2 | 2-3 |
| 3 | 4-5 |
| 4 | 6-7 |
| 5 | 8-9 |
| 6 | 10-11 |
| 7 | 12-13 |
| 8 | 14-15 |
| 9 | 16-17 |
| 10 | 18-19 |
| 11 | 20-21 |
| 12 | 22 |
| 13 | 23-24 |

ஒவ்வொரு அதிகாரத்தின் உள்ளடக்கம் என்ற பகுதியில் கொடுக்கப்பட்டிருக்கும் தலைப்புகளை மனதில் கொண்டு வாய்விட்டு ஒவ்வொரு அதிகாரத்தையும் கருத்துடன் வாசியுங்கள்.

இந்த சுவிசேஷத்தை கருத்துடன் ஒருமுறை வாய்விட்டு வாசிப்பதற்கு 2 மணி நேரம் 15 நிமிடங்கள் மட்டுமே ஆகிறது. ஒவ்வொருநாளும் 3 அதிகாரங்கள் வீதம் வாசித்தால் 8 நாட்களில் வாசித்துவிடலாம்.

## ஒவ்வொரு அதிகாரங்களின் உள்ளடக்கம்

1. முன்னுரை, யோவான் ஸ்நானனின் பிறப்பு முன்னறிவிக்கப்படல், சகரியா கண்ட தரிசனம், தூதன் மரியாளிடத்தில் இயேசுவின் பிறப்பை முன்னறிவித்தல், மரியாள், எலிசபெத்தை சந்தித்தல், மரியாளின் பாடல், யோவான் ஸ்நானனின் பிறப்பு, சகரியாவின் பாடல்.
2. இயேசுவின் பிறப்பு, தூதர்களின் தரிசனம் பெற்ற மேய்ப்பர்கள் இயேசு பாலனைப் பணிந்து கொள்ளுதல். எருசலேம் தேவாலயத்துக்கு இயேசு பாலன் எடுத்துச் செல்லப்படுதல், சிமியோன், அன்னாள் இயேசு பாலனைப் போற்றுதல், 12 வயதில் இயேசு எருசலேமிற்குச் செல்லுதல்.
3. யோவான் ஸ்நானனின் ஊழியம், இயேசு ஞானஸ்நானம் பெறுதல், இயேசுவின் வம்ச வரலாறு.
4. இயேசு பிசாசினால் சோதிக்கப் படுதல், நாசரேத்தில் இயேசு புறக்கணிக்கப்படுதல், அசுத்த ஆவி பிடித்த மனிதன் இயேசுவினால் விடுதலை அடைதல், பேதுருவின் மாமியார் சுகமடைதல், கலிலேயாவில் இயேசுவின் சுகமாக்கும் ஊழியம்.
5. சீடர்களை அழைத்தல், குஷ்டரோகி சுகமாக்கப்படுதல், திமிர்வாதக்காரன் குணமடைதல், லேவியை இயேசு அழைத்தல், கேள்விகளுக்கு இயேசு பதிலளித்தல்.
6. ஓய்வுநாள் ஆசரிப்புப் பற்றி இயேசு விளக்கம் கொடுத்தல், சூம்பின கையையுடைய மனிதனை இயேசு குணமாக்குதல், 12 சீடரை இயேசு தெரிந்துகொள்ளுதல், மக்கள் திரளை இயேசு குணமாக்குதல், சீடர்களுக்கு இயேசு அருளின போதனை.

7. நூற்றுக்குஅதிபதியின் வேலைக்காரனை குணமாக்குதல், நாயீன் ஊர் விதவையின் மகன் உயிரோடு எழுப்பப்படுதல், யோவான் ஸ்நானனுடைய சீடர்களின் கேள்விகளுக்கு இயேசு பதிலளித்தல், யோவான்ஸ் நானனைப் பாராட்டி இயேசு சொன்னது, சீமோன் வீட்டில் பாவியான பெண் பரிமள தைலம் பூசுதல்.
8. விதைக்கிறவன் பற்றிய உவமை, அதற்கான விளக்கம், இயேசு கடல் கொந்தளிப்பை அமர்த்துதல், பிசாசு பிடித்தவனை இயேசு விடுவித்தல், 12 வருடம் பெரும்பாடுள்ள ஸ்திரீ சுகமாகுதல், யவீருவின் மகள் உயிரோடு எழுப்பப்படுதல்.
9. சீடர்களுக்கு கட்டளை, 5000 பேரை போஷித்தல், இயேசு கிறிஸ்து யார்? இயேசு மறுரூபமாதல், இயேசுவின் சீடராவதற்கான தகுதிகள், அசுத்த ஆவியின் பிடியில் இருந்த வாலிபனை இயேசு விடுதலையாக்குதல், இயேசுவின் சீடராவதற்கான தகுதிகள்.
10. ஊழியத்திற்கென்று 70 பேர் அனுப்பப்படுதல், நல்ல சமாரியனைப் பற்றிய உவமை, மார்த்தாள், மரியாள் வீட்டில் இயேசு.
11. பரமண்டல ஜெபம், இயேசுவின் போதனைகள், தன்னைக் குற்றப் படுத்தியவர்களை இயேசு கடிந்து கொள்ளுதல்.
12. இயேசுவின் போதனைகள்.
13. கேள்விகளுக்குப் பதிலளித்தல், 18 வருடம் கூனியாயிருந்த பெண்ணை இயேசு சுகமாக்குதல், இயேசுவின் போதனைகள்,
14. இயேசுவின் போதனைகள், இயேசுவின் சீடர்களாவதற்கான தகுதிகள்.
15. 3 உவமைகள்.
16. இயேசுவின் போதனைகள்.
17. இயேசு சீடர்களுடன் உரையாடுதல், 10 குஷ்டரோகிகளை சுத்தப்படுத்துதல், கடைசிக்கால சம்பவங்களைப் பற்றிய இயேசுவின் போதனை.
18. இயேசுவின் போதனைகள், குழந்தைகளைஆசீர்வதித்தல், தலைவன் ஒருவனுடன் இயேசு உரையாடுதல், சிலுவைப் பாடுகளைப் பற்றி முன்னறிவித்தல், எரிகோ அருகே குருடன் பார்வை அடைதல்.
19. இயேசு சகேயுவைச் சந்தித்தல், 10 ராத்தல்களைப் பற்றிய உவமை, இயேசு எருசலேமிற்குப் பவனி வருதல், எருசலேமிற்காக கண்ணீர் விடுதல்.
20. இயேசு கேள்விகளுக்கு பதிலளித்தல்.
21. இரண்டு காசு காணிக்கை செலுத்திய ஏழை விதவையை இயேசு பாராட்டுதல், கடைசிக்கால சம்பவங்களைப் பற்றிய இயேசுவின் போதனை.
22. இயேசு சீடர்களுடன் பஸ்காவை ஆசரித்தல், கெத்செமனே தோட்டத்தில் இயேசு ஜெபித்தல், இயேசு கைதாக்கப்படுதல், பேதுரு இயேசுவை மறுதலித்தல், இயேசு துன்புறுத்தப்படுதல்.
23. பிலாத்துவும் ஏரோதும், இயேசுவை விசாரித்தல், இயேசு சிலுவையில் அறையப்படுதல், இயேசுவின் மரணமும் அடக்கமும்.
24. இயேசுவின் உயிர்த்தெழுதல், எம்மாவூரின் இரண்டு சீடர்களுக்கு தன்னை வெளிப்படுத்துதல், எருசலேமில் சீடர்களுக்கு இயேசு தரிசனமாகுதல், பரமேறிச் செல்லுவதற்கு முன் இயேசு சொன்ன கடைசி வார்த்தைகள்.

பரிசுத்த வேதாகமத்தின் ஒரு பகுதியாகிய புதிய ஏற்பாட்டில் முதல் நான்கு புத்தகங்களும் ‘சுவிசேஷ நூல்கள்’ அல்லது ‘நற்செய்தி நூல்கள்’ என்று அழைக்கப்படுகின்றன. இந்த நான்கு சுவிசேஷங்களில் யோவான் என்பவர் எழுதிய சுவிசேஷம் யோவான் சுவிசேஷம் என்று அழைக்கப்படுகிறது.

### எழுதியவர்

யோவான் என்பவர் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சீடர்களுள் ஒருவராவார். 2000 ஆண்டுகளுக்கு முன் இயேசு கிறிஸ்து வாழ்ந்த நாடாகிய பாலஸ்தீனத்தின் வடபகுதி ‘கலிலேயா’ என்று அழைக்கப்பட்டது. இப்பகுதியில் வாழ்ந்து வந்த யோவானும் அவர் சகோதரர் யாக்கோபும் மீன்பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்தனர். செபெதேயு என்பவர் இவர்களுடைய தகப்பன் ஆவார். ஆண்டவராகிய இயேசுவின் ஊழியத்தின் ஆரம்ப நாட்களில் இவர்கள் இருவரும் தங்கள் மீன் பிடிக்கும் தொழிலை விட்டு ஆண்டவராகிய இயேசுவின் சீடர்களானார்கள்.

மூர்க்கமும், வைராக்கியமும், வேகமும் கொண்டிருந்த யோவான், இயேசுவின் அன்பினால் கவரப்பட்டு, தன் குணத்திலும் மாறுதலைப் பெற்றார். ‘இடி முழக்கத்தின் மகன்’என்று பெயர் பெற்றிருந்த இவர் பின்னர் ‘அன்பின் சீடன்’ என்று அழைக்கப்பட்டார். இயேசுவோடு மிகவும் நெருங்கிப் பழகின இவர் பல தெய்வீக இரகசியங்களை தமது நற்செய்தி நூலில் எழுதியிருக்கிறார். யோவான் என்ற வார்த்தையின் பொருள் ‘தேவன் கிருபையுள்ளவராயிருக்கிறார்’ என்பதாகும். இயேசு கிறிஸ்து பரலோகத்திற்கு ஏறிச் சென்ற பின்னர் சுமார் 50 வருடங்கள் உயிரோடு இருந்தவர் இவரே. இயேசு கிறிஸ்துவுக்கு இவர் சாட்சியாக வாழ்ந்ததினால், ‘பத்மு’ என்ற தீவுக்கு நாடு கடத்தப்பட்டார். தனது முதிர்ந்த வயதிலே இவர் இந்தசுவிசேஷப் புத்தகத்தையும்,மூன்று நிருபங்களையும், ‘வெளிப்படுத்தின விசேஷம்’ என்ற தீர்க்கதரிசன புத்தகத்தையும் எழுதினார்.

### எழுதப்பட்டகாலம்

கி.பி. 80 ஆம் ஆண்டிற்குப் பின்னர்.

### இப்புத்தகத்தின் செய்தி

தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்து

நான்கு சுவிசேஷங்களும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை நான்கு விதங்களில் சித்தரித்துக் காட்டுகின்றன. யோவான் சுவிசேஷத்தில் இயேசு தேவ குமாரனாக சித்தரித்துக் காட்டப்பட்டிருக்கிறார். ‘பிதா’ என்ற வார்த்தை இச்சுவிசேஷத்தில் பலமுறை வருவதைக் கவனியுங்கள். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு பல திருப்பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில்‘தேவனுடைய குமாரன்’ என்பதும் ஒன்றாகும். தேவனுடைய குமாரன் (தேவ குமாரன்) என்ற வார்த்தை இயேசு கிறிஸ்து பிதாவாகிய தேவனை வெளிப்படுத்துபவராக வந்தார். தெய்வீக அதிகாரம் உடையவராக இருக்கிறார் என்பதை உணர்த்துகிறது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் தெய்வீகத்துவம் இந்த சுவிசேஷத்தில் விளக்கப்பட்டிருக்கிறது.

முதல் மூன்று சுவிசேஷங்களுக்கும், யோவான் சுவிசேஷத்திற்கும் பல வித்தியாசங்கள் உண்டு. முதல் மூன்று சுவிசேஷங்களிலும் தரப்பட்டிராத சம்பவங்களும், குறிப்புகளும் யோவான் சுவிசேஷத்தில் எழுதப்பட்டிருக்கின்றன.

1 முதல் 12 அதிகாரங்களில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூன்று ஆண்டு ஊழிய காலத்தில் **இருபது** நாட்களில் நடைபெற்ற, சம்பவங்கள், உரையாடல்கள், நிகழ்த்திய அருளுரைகள் எழுதப்பட்டிருக்கின்றன.

13 முதல் 21 வரை உள்ள 9 அதிகாரங்களும் **ஒரு வார கால** அளவில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் உரையாடல்கள், உபதேசங்களைக் கொண்டிருக்கின்றன.

## இந்த நற்செய்தி நூலில்

- ❖ பிதா, உலகம், அன்பு , ஜீவன், சாட்சி, ஒளி, விசுவாசம், ஆகிய வார்த்தைகள் அடிக்கடி பயன்படுத்தப்பட்டு இருக்கின்றன. இவைகளில் விசுவாசம் என்ற வார்த்தை தான் இந்தப் புத்தகத்தின் செய்திக்கு ஆதாரமான வார்த்தையாக இருக்கிறது. இந்த வார்த்தை இந்தப் புத்தகத்தில் மட்டும் சுமார் 100 தடவை வருகிறது
- ❖ இயேசு கிறிஸ்து செய்த எட்டு அற்புதங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவைகளில் ஒன்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின் செய்த அற்புதமாகும். இவைகளில் இயேசுவின் தெய்வீகத் துவத்தை நிரூபிக்கும் அடையாளங்களாக விளங்குகின்றன.
- ❖ 'புதிய பிறப்பு', "ஜீவத்தண்ணீர்" "உலகத்திற்கு ஒளி", நானே நல்ல மேய்ப்பன் என்ற தலைப்பின் கீழான இயேசுவின் அருளுரைகள் இடம் பெற்றிருக்கின்றன.
- ❖ ஆண்டவராகிய இயேசு சிலுவையில் பாடுபடுவதற்கு முன் தம் சீடர்களிடம் பகிர்ந்துகொண்ட கடைசி அருளுரை கொடுக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது *(14, 15, 16 ஆம் அதிகாரங்கள்).*
- ❖ ஆண்டவராகிய இயேசு 'நானே' என்று ஏழு இடங்களில் தன்னைப் பற்றி விளக்கத்தை தந்திருக்கிறார். இவைகள் நாம் அவரைப் பற்றி அறிந்து கொள்வதற்கு சிறந்த வெளிப்பாடுகளாக விளங்குகின்றன.

1. நானே 'ஜீவ அப்பம்'(யோவான் 6 : 35, 41, 48, 51)
2. நானே 'உலகத்திற்கு ஒளியாக இருக்கிறேன் ' *(8 : 12, 9 : 5)*
3. நானே 'வாசல்' *(10 : 7,9)*
4. நானே 'நல்ல மேய்ப்பன்' *(10 : 11,14 )*
5. நானே 'உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்' *(11 : 25)*
6. நானே 'வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்' *(14 : 6)*
7. நானே 'மெய்யான திராட்சச்செடி' *(15 : 1,5)*

## பகுப்பாய்வு

1. தேவகுமாரனாகிய இயேசு அவதரித்தல் 1 :1-18
2. தேவகுமாரனாகிய இயேசு தன்னை வெளிப்படுத்துதல் 1 :19-4 : 54
3. தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்துவை யூதர்கள் எதிர்த்தல், புறக்கணித்தல் 5 :1-12 : 50
4. தேவகுமாரனாகிய இயேசு சீடர்களை ஆயத்தப்படுத்துதல் 13 :1-17 : 26
5. தேவகுமாரனாகிய இயேசு சிலுவையில் அறையப்படுதல் உயிர்த்தெழுதல் 18 :1 - 20 : 31
6. உயிர்த்தெழுந்த பின் தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்து தமது சீடர்களுடன் உரையாடுதல் 21 :1 - 25

## முக்கிய அதிகாரங்கள்

3. மறுபிறப்பைப் பற்றி ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நிக்கொதேமுடன் செய்த உரையாடல்.

17. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சீடர்களுக்காக ஏறெடுத்த ஜெபம்.

## முக்கிய வார்த்தைகள்

| | | |
|---|---|---|
| *பிதா* | *124* | *முறை* |
| *சாட்சி* | *42* | " |
| *ஒளி* | *19* | " |
| *சீஷர்* | *79* | " |
| *மெய்யாகவே* | *24* | " |
| *உலகம்* | *75* | " |
| *இயேசு* | *251* | " |
| *மெய்யாகவே மெய்யாகவே* | *25* | " |
| *அவருடைய சீஷர்கள்* | *28* | " |
| *தேவ/தேவனுடைய குமாரன்* | *10* | " |
| *மனுஷ குமாரன்* | *12* | " |
| *குமாரன்* | *18* | " |
| *ஒரேபேறான குமாரன்* | *3* | " |
| *யூதர்கள்* | *71* | " |
| *பண்டிகை* | *22* | " |

**திறவுகோல் வசனம்**

20 : 31 "இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும் படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும் படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது."

இந்த வசனம் தான் இப்புத்தகத்தின் திறவுகோல் வசனமாக இருக்கிறது இந்த வசனத்தைக் கருத்துடன் தியானியுங்கள்.

யோவான் சுவிசேஷத்தை 10 நாட்களில் வாசித்து முடிக்க அட்டவணை

| நாள் | அதிகாரங்கள் |
|---|---|
| 1 | 1-2 |
| 2 | 3-4 |
| 3 | 5-6 |
| 4 | 7-8 |
| 5 | 9-10 |
| 6 | 11-12 |
| 7 | 13-15 |
| 8 | 16-17 |
| 9 | 18-19 |
| 10 | 20- 21 |

**இப்புத்தகத்தை வாசிக்கும் முறை**

யோவான் சுவிசேஷத்தில் 21 அதிகாரங்கள் (879 வசனங்கள்) 36 பக்கங்களில் அடங்கி உள்ளன. இப்புத்தகத்தின் முழு செய்தியையும் நீங்கள் விளங்கிக்கொள்ள வேண்டுமானால் முதல் அதிகாரத்தில் ஆரம்பித்து 21 ஆம் அதிகாரம் வரை தொடர்ச்சியாக ஒன்றிரண்டு முறை வாசியுங்கள். இந்த சுவிசேஷம் முழுவதையும் ஒரு முறை கருத்துடன் வாய்விட்டு வாசிப்பதற்கு 2 மணி நேரம் ஆகிறது. ஒவ்வொருநாளும் மாலையில் 3அதிகாரங்கள் வாசிப்பீர்களானால் ஒரு வாரத்தில் யோவான் சுவிசேஷம் முழுவதையும் நீங்கள் வாசித்து முடித்து விடலாம். மாலையில் வாசிக்கும் போது உங்களைக் கவர்ந்த வசனங்களைக் குறித்துக் கொண்டு, மறுநாள் காலையில் அவைகளை யோசித்துப் பார்ப்பது அதிக பலனைக் கொடுக்கும். நாள் ஒன்றுக்கு ஒரு அதிகாரம் வீதமும் வாசிக்கலாம். அப்படி வாசிக்கும்போது குறைந்தபட்சம் 15 - 20 நிமிடங்களாவது செலவிட்டு அந்த அதிகாரத்தைக் கவனமாக இரண்டு அல்லது மூன்று முறை வாசிப்பது அதிக உதவியாக இருக்கும்.

ஒவ்வொரு அதிகாரத்தையும் வாசிக்கும் போது அதை எத்தனை பகுதிகளாகப் பிரிக்க முடியும் என்று பகுத்துப் பிரித்து வாசியுங்கள். அப்போஸ்தலனாகிய யோவான் இந்த சுவிசேஷத்தை எழுதும் போது பல முக்கியமான வார்த்தைகளைப் பயன்படுத்தி எழுதியிருக்கிறார். அந்த வார்த்தைகள் வரும் இடங்களை, பொருளை கவனித்து வாசியுங்கள்.

**ஒவ்வொரு அதிகாரத்தின் உள்ளடக்கம்**

1. மனித அவதாரமாக வந்த இயேசு கிறிஸ்து(மாம்சமாக வந்த தேவனுடைய வார்த்தை) யோவான் ஸ்நானனின் ஊழியம். இயேசு கிறிஸ்துவை முதலில் பின்பற்றிய சீடர்கள்.
2. தண்ணீரை திராட்ச ரசமாக மாற்றிய அற்புதச் செயல், ஆலய சுத்திகரிப்பு.
3. நிக்கொதேமு இயேசு கிறிஸ்துவை சந்தித்தல், இயேசு கிறிஸ்துவைப் பற்றி யோவான் ஸ்நானன் கொடுத்த சாட்சி.
4. சமாரியா நாட்டுப் பெண் இயேசு கிறிஸ்துவை சந்தித்தல், கப்பர்நகூமில் வியாதியாயிருந்த ஒருவன் அற்புதமாக சுகம் பெறுதல்.
5. 38 வருடம் வியாதியாயிருந்த மனிதன் குணமடைதல். ஆண்டவராகிய இயேசு தன்னைப் பற்றி கொடுத்த சாட்சி.
6. திரளான மக்களை போஷித்த இயேசுவின் அற்புதச் செயல். இயேசு கடலின்மேல் நடந்த அற்புதம்.
   'ஜீவ அப்பம் நானே' என்ற தலைப்பில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அருளுரை.
7. யூதர்கள் - இயேசுவிடம் தர்க்கம் செய்தல்.
8. விபச்சாரத்தில் பிடிபட்ட பெண் ஆண்டவராகிய இயேசுவை சந்தித்தல், இயேசு - யூதர்கள் உரையாடல்
9. பிறவிக் குருடனுக்கு இயேசு பார்வையளித்தல்.

10. ‘நானே நல்ல மேய்ப்பன்’ என்ற தலைப்பில் இயேசுவின் அருளுரை, இயேசு - யூதர்கள் உரையாடல்.



11. லாசருவை இயேசு உயிரோடு எழுப்புதல்.



12. பெத்தானியாவிலே இயேசு, எருசலேமுக்கு பவனி வருதல். இயேசு - யூதர்கள் உரையாடல்.

13. இயேசு தம்முடைய சீடர்களுடன் கடைசி இராப்போஜனம் அருந்துதல். சீடர்களுடன் உரையாடுதல்.



14 பரிசுத்த ஆவியானவரைக் குறித்த இயேசுவின் போதனை.

15. நிலைத்திருத்தல், உலகத்தில் இருந்து வரும் எதிர்ப்பு பற்றிய இயேசுவின் போதனை.

16. ஆண்டவராகிய இயேசு சீடருடன் கலந்துரையாடுதல்.

17. சீடர்களுக்காக ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஏறெடுத்த விண்ணப்பம்.



18. கெத்செமனே தோட்டத்தில் இயேசு கைதாக்கப்படுதல். பிரதான ஆசாரியன் அரண்மனையில் விசாரணை, பிலாத்துவின் விசாரணை.



19. பிலாத்து தீர்ப்பளித்தல், இயேசு சிலுவையில் அறையப்படுதல், இயேசுவின் மரணம், அடக்கம்.



20. உயிர்த்தெழுந்த இயேசுவை, மரியாளும், சீடர்களும் சந்தித்தல், தோமாவின் சந்தேகம் தீருதல்.

21. உயிர்த்தெழுந்த இயேசு செய்த அற்புதச் செயல், சீடருடன் உரையாடுதல்.



### சுவிசேஷங்களில்

**சுவிசேஷங்களை நீங்கள் வாசிக்கும் போது .....**

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றி அறிந்துகொள்ள விரும்புகிற ஒவ்வொருவரும் இச்சுவிசேஷப் புத்தகங்களை அடிக்கடி வாசிக்க வேண்டும். அப்படி வாசிக்கும் போது சுவிசேஷங்களில் கொடுக்கப்பட்டிருக்கும் செய்தியை விளங்கிக் கொள்ள ஒரு எளிதான முறை கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன் படி வாசிப்பது மிகவும் நல்லது.

சுவிசேஷங்களில் எந்தப்பகுதியை நீங்கள் வாசித்தாலும் நீங்கள் வாசிக்கும் பகுதி கீழ்க்காணும் மூன்று தலைப்புகளில் எந்தத் தலைப்பின் கீழ் வருகிறது என்று கவனிக்க வேண்டும்.

1. சம்பவம் (அற்புதம் அல்லது நிகழ்ச்சிகள்)
2. சம்பாஷணை(உரையாடல்)
3. சத்தியம் ( உபதேசம் )

**1. சம்பவம் (அற்புதம் அல்லது நிகழ்ச்சிகள்)**

நான்கு சுவிசேஷங்களிலும் 179 நிகழ்ச்சிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதில் 37 நிகழ்ச்சிகள் ஆண்டவராகிய இயேசுவின் தெய்வீக வல்லமை வெளிப்படுத்தப்பட்ட அற்புதங்களாகும். உதாரணமாக மத்தேயு 14 ஆம் அதிகாரத்தில் 22 முதல் 33 வசனங்கள் வரை கொடுக்கப்பட்டிருக்கும் சம்பவம் ஆண்டவராகிய இயேசு கடலின் மேல் நடந்த அற்புதத்தைப் பற்றியதாகும். எடுத்துக்காட்டாக மத்தேயு 2 ஆம் அதிகாரத்தில் சாஸ்திரிகள் இயேசு பாலகனை ஆராதித்த நிகழ்ச்சிகள் எழுதப்பட்டிருக்கின்றன.

Cell: 89030 11350,
E-mail : selwynde@gmail.com

**2. சம்பாஷணை (உரையாடல் )**

ஆண்டவராகிய இயேசு இவ்வுலகில் வாழ்ந்த நாட்களில் பலருடன் தனித்து பேச நேரம் செலவிட்டார். அவர் வெவ்வேறு மனிதர்களுடன் பேசிக் கொண்டிருந்த விபரங்கள் சுவிசேஷங்களில் இடம் பெற்றுள்ளன. யோவான் 3:1 முதல் 21 வரை உள்ள பகுதி ஆண்டவராகிய இயேசு நிக்கொதேமு என்பவருடன் பேசிக் கொண்டிருந்த உரையாடலுக்கு எடுத்துக்காட்டாகும்.

**3. சத்தியம் ( உபதேசம் )**

ஆண்டவராகிய இயேசு தெய்வீக சத்தியங்களை மக்களுக்கு எடுத்துரைத்தார். இவைகள் தான் மக்களை நித்தியத்திற்கு நேராய் நல்வழிப்படுத்தும் உபதேசங்களாக அமைந்திருக்கின்றன. பரலோக உண்மைகளைப் பாமர மக்களும் எளிதாகப் புரிந்துகொள்ளும் வகையில் உவமைகள் மூலம் ஆண்டவர் விளக்கிக் காட்டினார். பரலோக உண்மைகளை எளிய முறையில் விளக்கிக்காட்டும் எடுத்துக்காட்டுகள் 'உவமைகள்'என்று அழைக்கப்படுகின்றன. 4 சுவிசேஷங்களிலும் 38 உவமைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. உதாரணம் மாற்கு 4:1-20 வசனங்கள் 4 வகை நிலங்களைப் பற்றிய உவமை. ஒவ்வொரு முறையும் நீங்கள் சுவிசேஷப் பகுதியை வாசிக்கும் போது சம்பவம், சம்பாஷணை, சத்தியம் என்ற மூன்று வார்த்தைகளையும் நினைவில் கொண்டு வாசியுங்கள். நீங்கள் வாசிக்கும் பகுதி எந்தத் தலைப்பின் கீழ் அமையும் என்பதைக் கண்டுபிடியுங்கள்.

**சுவிசேஷங்களின் ஒவ்வொரு அதிகாரத்தையும் வாசிக்கும் போது கீழே உள்ள கேள்விகளுக்குப் பதில்களைக் கண்டுபிடிக்க முயற்சி செய்யுங்கள்.**

1. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றி என்ன கற்றுக் கொள்கிறேன்?
2. இயேசுவினிடத்தில் வந்தவர்கள் யார்? அவர்கள் ஏன் வந்தார்கள்? எப்படித் திரும்பிச் சென்றார்கள்?
3. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சீடர்களைப் பற்றி நான் அறிந்து கொள்வது என்ன?
4. இந்த அதிகாரத்தில் எனக்கு மிகவும் பிடித்தமான வார்த்தை / வசனம் / வாக்கியம் / கருத்து எது?
5. எனக்கு புரியாதது என்ன?

பரிசுத்த வேதாகமம் தேவன் மனிதனுக்குக் கொடுத்திருக்கும் ஓர் அற்புதமான அன்பளிப்பாகும். 66 புத்தகங்களைக் கொண்ட பரிசுத்த வேதாகமம் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என்று 2 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. புதிய ஏற்பாட்டில் உள்ள 27 புத்தகங்களில் முதல் நான்கு புத்தகங்களும் “ சுவிசேஷங்கள்'' என்று அழைக்கப் படுகின்றன. அதையடுத்துள்ள அப்போஸ்தலருடைய நடபடிகள் சரித்திர சம்பவங்களை எடுத்துரைக்கும் ஒரு புத்தகமாகும். இப்புத்தகத்தை அடுத்துள்ள 13 புத்தகங்களும், அப்போஸ்தலனாகிய பவுல் எழுதின நிருபங்களாகும்.

பரிசுத்த வேதாகமத்தின் ஆக்கியோன் பரிசுத்த ஆவியானவராவார். புதிய ஏற்பாட்டின் 27 புத்தகங்களை எழுதுவதற்கு 9 பேரை ஆவியானவர் ஆட்கொண்டு பயன்படுத்தினார். புதிய ஏற்பாட்டில் அதிகமான புத்தகங்களை, அதாவது 13 புத்தகங் களை எழுதியவர் அப்போஸ்தலனாகிய பவுல் என்பவர். அப்போஸ்தலருடைய நடபடிகள் என்ற புத்தகத்தை எழுதிய லூக்கா என்பவர் பவுல் அப்போஸ்தலனோடு இணைந்து ஊழியம் செய்தவர்.

**அப்போஸ்தலருடைய நடபடிகள்.**

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை அடுத்து 40 நாட்களுக்கு அவர் பலருக்கும் தரிசனமானார். அவர் பரமேறிச் செல்வதற்கு முன்னர் தம்முடைய சீடர்களுக்கு முக்கிய கட்டளைகளைக் கொடுத்தார். பரிசுத்த ஆவியானவர் பொழிந்தருளப்படுவதைப் பற்றிய வாக்குத்தத்தத்தையும் கொடுத்தார். அவருடைய வார்த்தையின்படியே அவருடைய அடியவர்கள் 120 பேர் எருசலேமில் 10 நாட்கள் காத்திருந்தனர்.

ஆண்டவராகிய இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பின் ஐம்பதாம் நாள் பரிசுத்த ஆவியானவர் வந்திறங்கினார். இந்த மாபெரும் நிகழ்ச்சி ‘பெந்தெகொஸ்தே ’ என்று அழைக்கப்படுகிறது. பெந்தெகொஸ்தே என்றால் “ ஐம்பது” என்று பொருளாகும். இது யூதருடைய பண்டிகை நாளாக இருந்தது. பெந்தெகொஸ்தே நிகழ்ச்சி தான் கிறிஸ்தவ திருச்சபையின் பிறந்த நாள் ஆகும். அதை அடுத்து 30 ஆண்டுகளில் கிறிஸ்தவ திருச்சபை வெகு வேகமாக வளர்ந்தது. கடும் எதிர்ப்புகள், போராட்டங்கள் மத்தியிலும் தீவிரமாக பரவினது, பெருகிற்று.

ஆயிரக்கணக்கானோர்ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அடியவர்களாக மாறினர். ஏராளமான அற்புதங்களும், அடையாளங்களும் நடைபெற்றன. பல பட்டணங்களிலும், பகுதிகளிலும், நாடுகளிலும், தேசங்களிலும் கிறிஸ்தவ திருச்சபைகள் நாட்டப்பட்டன.

நடபடிகள் என்ற வார்த்தையின் பொருள் ‘செயல்கள்’ என்பதாகும். அப்போஸ்தலருடைய நடபடிகள் என்ற புத்தகத்தில் அப்போஸ்தலர்கள் மூலமாக பரிசுத்த ஆவியானவர் நிகழ்த்திய அரும் பெருஞ்செயல்கள் எழுதப்பட்டிருக்கின்றன.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றி அப்போஸ்தலர்கள் வல்லமையாக பிரசங்கித்தனர். அவருடைய நாமத்தில் அற்புதங்களும், அடையாளங்களும் நடைபெற்றன. மரித்தோர் கூட உயிரோடு எழுந்தனர். கொடியவர்கள் பரிசுத்தவான்களாக மாற்றப்பட்டனர்.

அப்போஸ்தலனாகிய பேதுரு, பவுல் என்பவர்கள் மூலமாக நடைபெற்ற பல அருஞ்செயல்கள் இப்புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கின்றன. யூத மக்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சீடர்களாக மாறுவதற்கு அப்போஸ்தலனாகிய பேதுருவை பரிசுத்த ஆவியானவர் கருவியாகப் பயன்படுத்தினார். யூதரல்லாத பல்வேறு வகையான கோத்திரத்தார் அதாவது புறஜாதியார் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அடியவர்களாக மாற அப்போஸ்தலனாகிய பவுலை ஆவியானவர் கருவியாகப் பயன் படுத்தினார்.



இப்புத்தகம் ஒரு சரித்திரப் புத்தகத்தைப் போன்றது. தொடர்ச்சியாக பல்வேறு நிகழ்ச்சிகளையும் கவனித்துக்கொண்டே வாசிக்கலாம். முக்கிய கதாபாத்திரங்களைக் கவனித்தும் இப்புத்தகத்தை வாசிக்கலாம் ஒவ்வொரு உண்மைக் கிறிஸ்தவரும் கிறிஸ்தவ சபை தோன்றி வளர்ந்த வரலாற்றை இப்புத்தகத்தில் படித்து இயேசு கிறிஸ்துவுக்கு சாட்சிகளாக வாழ வேண்டும்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் என்ற புத்தகத்தையும் அப்போஸ்தலனாகிய பவுல் எழுதின நிருபங்களையும் தொடர்ச்சியாக வாசியுங்கள். அடிக்கடி வாசித்துப் பாருங்கள். நீங்கள் வாசிக்கும் போது ஏதாவது விளக்கம் தேவையானால் எங்களுக்கு எழுதுங்கள்.



**அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தை அடிக்கடி வாசித்தால்**

எழுப்புதல் அனுபவத்தைப் பெற்றுக் கொள்ளலாம். சுவிசேஷ ஊழியம் செய்வதற்கான அணுகுமுறைகளைத் தெரிந்து கொள்ளலாம். ஆத்தும ஆதாய கிருபையில் வளர்ச்சியடையலாம். மிஷனெரி ஊழியத்தின் தரிசனத்தை பெற்றுக்கொள்ளலாம். திருச்சபை வளர்ச்சியின் இரகசியங்களைக் கற்றுக்கொள்ளலாம் .

புதிய ஏற்பாட்டின் புத்தக வரிசையில் 5 ஆவது புத்தகமாகிய இப்புத்தகம் ஒரு சரித்திரப் புத்தகம் ஆகும். 'அப்போஸ்தலர்' என்றால் அனுப்பப்பட்டவர் என்று பொருள். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றி இவர்கள் மக்களுக்கு எடுத்துரைத்தார்கள். இறைவனால் தெரிந்துகொள்ளப்பட்ட இவர்கள் இந்த அருட்பணிக்காக பல நாடுகளுக்கும் நற்செய்தியை அறிவிக்க ஆண்டவரால் அனுப்பப்பட்டார்கள். 'நடபடிகள்' என்ற வார்த்தையின் பொருள் 'செயல்கள்' அல்லது 'செயல்பாடுகள்' என்பதாகும்.

**பின்னணி:**

இப்புத்தகம் லூக்கா என்பவரால் எழுதப்பட்டது. இவர் கிரேக்க நாட்டைச் சேர்ந்த ஒரு மருத்துவர். இவர் புதிய ஏற்பாட்டில் மூன்றாவது புத்தகமாகிய லூக்கா சுவிசேஷத்தையும் (நற்செய்தி நூல்) அப்போஸ்தலர் நடபடிகள் என்ற இப்புத்தகத்தையும் எழுதினார். கிரேக்க நாட்டைச் சேர்ந்த தேயோப்பிலு என்பவர் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து கிறிஸ்தவராக மாறினார். லூக்கா ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றி தேயோப்பிலுவிற்கு விளக்கமாக எழுதிய புத்தகத் தொகுதியின் இரண்டாம் பகுதிதான் "அப்போஸ்தலர்" என்ற இப்புத்தகமாகும். லூக்கா சுவிசேஷத்தின் முதல் அதிகாரம், முதல் வசனத்தையும், அப்போஸ்தலர் நடபடிகள் என்ற புத்தகத்தின் முதல் அதிகாரம் முதல் வசனத்தையும் கவனமாக ஒப்பிட்டுப் பாருங்கள்.

**இப்புத்தகம் எழுதப்பட்ட காலம் :**
கி.பி. 62 ற்குப் பின்.

**அதிகாரங்கள்:** அதிகாரங்கள் 28, வசனங்கள் 1107.

**இப்புத்தகத்திற்கு கொடுக்கப்பட்டிருக்கும் வெவ்வேறு தலைப்புகள்.**

1. பரிசுத்த ஆவியானவரால் நிகழ்த்தப் பட்ட சம்பவங்கள்.
2. உயிர்த்தெழுந்து, உயர்த்தப்பட்ட ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் செயல்பாடுகள் .
3. ஆண்டவராகிய இயேசுவின் அடியவர்கள் சாட்சியாக வாழ்ந்த வரலாறு.
4. நற்செய்திப் பணிக்குத் தேவன் கொடுத்திருக்கும் திட்டம்.

**பகுப்பாய்வு:**

**1 ஆம் அதிகாரம் முதல் 8:3 வரை:**
எருசலேமில் யூதர்களுக்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றி அறிவித்தல். திருச்சபை வல்லமை பெறுதல், திருச்சபை வளர்ச்சி அடைதல், யூத மக்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து கிறிஸ்தவராக மாறுதல். அப்போஸ்தலனாகிய பேதுருவின் ஊழியம் கி.பி. 33 முதல் 35 வரை (3 வருடங்கள்)
மையமான பட்டணம்: எருசலேம்.

**8 : 4 முதல் 12 ஆம் அதிகாரம் வரை:**
யூதேயா சமாரியாவில் கிறிஸ்துவைப் பற்றி அறிவித்தல், யூதேயா சமாரியாவில் பிலிப்புவின் ஊழியம் சபையின் ஊழியம் விரிவடைதல். சமாரியர்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து கிறிஸ்தவர்களாக மாறுதல். சமாரியாவில் ஊழியம் கி.பி.35 முதல் 48 வரை யூதேயா (13 வருடங்கள்) மையமான பட்டணம் : அந்தியோகியா.

**13 ஆம் அதிகாரம் முதல் 28 :31 வரை:**
உலகின் கடைசி வரை உள்ள மக்களுக்கு ஆண்டவராகிய இயேசுவைப் பற்றி அறிவித்தல். புறவினத்தார் மத்தியில் ஊழியம், அப்போஸ்தலனாகிய பவுல் இயேசுவிற்கு சாட்சியாக வாழ்ந்ததினால், நற்செய்திப் பணி செய்ததினால் வந்த விளைவுகள், விசாரணைகள், மையமான பட்டணம்: ரோமாபுரி.

**முக்கியச் செய்தி :**

சுமார் 30 ஆண்டு காலத்தில் கிறிஸ்தவ திருச்சபை பிறந்த, வளர்ந்த , பரவிய வரலாறு, அப்போஸ்தலனாகிய பேதுரு, ஸ்தேவான், நற்செய்தி பணியாளனாகிய பிலிப்பு, அப்போஸ்தலனாகிய பவுல் என்பவர்களுடைய நற்செய்திப் பணிகள் இடம் பெற்றுள்ளன. அப்போஸ்தலனாகிய பவுலின் மிஷனெரிப் பயணங்கள் இப்புத்தகத்தின் சிறப்பு அம்சமாகும். பல்வேறு மொழியினருக்கும், நாட்டினருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை அறிவிக்க வேண்டுமென்று அப்போஸ்தலனாகிய பவுல் பிரயாணங்களை மேற்கொண்டார். ஓரிடத்தில் அல்லது ஒரு பகுதியில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றி அறிவித்து, அவரை ஏற்றுக் கொண்டவர்களை சீஷர்களாக்கி, அவர்களை ஒன்றுபடுத்தி கிறிஸ்தவ திருச்சபைகளை நாட்டுவதே இப்பிரயாணங்களின் முக்கிய நோக்கமாயிருந்தது.

**முக்கிய அதிகாரங்கள்:**

2- பரிசுத்த ஆவியானவர்அருளப்படுதல்

10 - கொர்நேலியுவின் மனமாற்றம்.

**முக்கிய வார்த்தைகள்:**

ஒவ்வொரு வார்த்தையையும் அடுத்து கொடுக்கப்பட்டிருக்கும் எண், அந்த வார்த்தை இப்புத்தகத்தில் எத்தனை முறைகள் வருகின்றன என்ற எண்ணிக்கையைக் குறிக்கிறது. இந்த வார்த்தைகள் எங்கெல்லாம் வருகின்றன என்று கவனமாக கண்டுபிடித்து கருத்துடன் வாசியுங்கள், குறித்துக் கொள்ளுங்கள்.

சாட்சி27, சபை 22, சகோதரர்கள் 56, சீஷர்கள்31, சீஷி1, ஜெபம் 20, பரிசுத்த ஆவியானவர் 56, இயேசுவின் நாமம் 30, தேவ ஆலயம் 22, ஜெப ஆலயம் 17 ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் 10, இப்புத்தகத்தில் 11 பிரசங்கங்களும், மனந்திரும்பிய 11 பேர்களின் வரலாறும் எழுதப்பட்டுள்ளது. சாட்சி என்ற வார்த்தை இப்புத்தகத்தின் முக்கியமான வார்த்தையாகும். புறவினத்தார் (புறஜாதியார்) என்பது யூதரல்லாத மற்ற எந்த நாட்டைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களைக் குறிக்கும்.

இப்புத்தகத்தை நன்றாக விளங்கிக் கொள்ள வேண்டுமென்றால் கால வரிசைக் கிரமத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை நன்றாகப் படிக்க வேண்டும். அதற்கான குறிப்புகள் இப்பிரதியில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைப் பலமுறை படியுங்கள். பாலஸ்தீன தேச வரைபடத்தின் உதவியுடன் எந்தெந்த பகுதிகளுக் கெல்லாம் பவுல் சென்றார் என்று பார்த்துப் படிக்கவும். பரிசுத்த வேதாகமத்தில் இப்புத்தகம் தான் முடிவு பெறாத புத்தகம். அப்போஸ்தலர் ருடைய நடபடிகள் 28 :30, 31 வசனங்களை படித்துப் பாருங்கள்.

**முக்கிய வசனம்:** அப்போஸ்தலர் 1:8

**அப்போஸ்தலனாகிய பவுலின் மிஷனெரிப் பயண விபரங்கள்.**

முதல் மிஷனெரிப் பயணம்
13:1 - 14: 28 வரை

எருசலேமில் மிஷனெரி சங்கக் கூட்ட ம்
15:1 - 15: 29 வரை

இரண்டாவது மிஷனெரிப் பயணம்
15:30 - 18:22 வரை

மூன்றாவது மிஷனெரிப் பயணம்
18: 23 - 21:17 வரை

பவுல் ரோமாபுரி சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு, பின்பு கைது செய்யப்பட்டார். ரோமாபுரிக்கு மறுபடியும் கொண்டு போகப்பட்டு 4 வருடங்களுக்குப் பின் இரத்த சாட்சியாக மரித்தார்

**இப்புத்தகத்தை வாசிப்பதற்கான சில ஆலோசனைகள்:**

இப்புத்தகத்தில் 28 அதிகாரங்கள் தமிழ் புதிய ஏற்பாட்டில் 47பக்கங்களில் இடம் பெற்றிருக்கின்றன. ஒரு நாளுக்கு சராசரியாக மூன்று அதிகாரங்கள் வாசித்தால் (அல்லது 5 பக்கங்கள்) 10நாட்களுக்குள் இப்புத்தகத்தை வாசித்து முடித்து விடலாம். ஒருஅதிகாரத்தை வாசிக்க 10 நிமிடங்களாவது எடுத்துக் கொள்ளவேண்டும்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் 15 நாட்களில் வாசித்து முடிக்க அட்டவணை

| நாள் | அதிகாரங்கள் |
|---|---|
| 1 | 1 - 2 |
| 2 | 3 - 4 |
| 3 | 5 - 6 |
| 4 | 7 |
| 5 | 8 - 9 |
| 6 | 10 |
| 7 | 11-12 |
| 8 | 13 -14 |
| 9 | 15 - 16 |
| 10 | 17 - 18 |
| 11 | 19 - 20 |
| 12 | 21 - 22 |
| 13 | 23 - 24 |
| 14 | 25 - 26 |
| 15 | 27 - 28 |

சாதாரண வேகத்தில் வாய் விட்டு வாசித்தால் 3 மணி நேரத்தில் இப்புத்தகம் முழுவதையும் தொடர்ச்சியாக ஒரு முறை வாசித்து முடித்து விடலாம். ஒருநாளைக்கு 4 அதிகாரங்கள் வாசித்தால் 1 வாரத்தில் (7 நாட்களில்) அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தை ஒரு முறை வாசித்து முடித்து விடலாம். ஒவ்வொரு அதிகாரத்தையும் வாசிக்கும் போது அந்த அதிகாரத்தில் கொடுக்கப்பட்டிருக்கும், விவரங்களை விளங்கி வாசிக்க வேண்டும்.

கீழே கொடுக்கப்பட்டிருக்கும் அதிகார தலைப்புகளை உங்கள் வேதாகமத்தில் அந்தத் தலைப்பு ஏன் கொடுக்கப்பட்டிருக்கிறதென்று யோசித்துப் பார்த்து வாசியுங்கள்.

**ஒவ்வொரு அதிகாரத்தின் உள்ளடக்கம்:**

1. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுதல். யூதாஸக்குப் பதிலாக மத்தியா 12 ஆவது அப்போஸ்தலராக நியமிக்கப்படுதல்.
2. பரிசுத்த ஆவியானவர் அருளப் படுதல், பேதுருவின் பிரசங்கம் ஆதி கிறிஸ்தவர்கள் வாழ்ந்த விதம்.
3. சப்பாணி சுகமடைதல், பேதுருவின் பிரசங்கம்.
4. பேதுருவும், யோவானும் காவலில் வைக்கப்படுதல், ஆலோசனை சங்கத்தாரால் மிரட்டப்படுதல், விசுவாசிகளின் வல்லமையான ஜெபம்.
5. அனனியா, சப்பீராள் வஞ்சித்தல் , மரணம், அற்புத அடையாளங்கள். அப்போஸ்தலர் துன்புறுத்தப்படுதல்.
6. உதவிப் பணிக்காக 7 பேர் நியமிக்கப்படுதல், ஸ்தேவான் கைதாக்கப்படுதல்.
7. ஸ்தேவானின் பிரசங்கமும், ஸ்தேவான் இரத்த சாட்சியாக மரித்தலும்.
8. சமாரியாவில் பிலிப்புவின் ஊழியம். மாய வித்தைக்காரனாகிய சீமோன், எத்தியோப்பிய மந்திரிஆண்டவராகிய இயேசுவின் அடியவராகுதல்.
9. சவுல் பவுலாக மாறுதல். பேதுரு செய்த 2 அற்புதங்கள்.
10. கொர்நேலியு, பேதுரு கண்ட தரிசனங்களும் சந்திப்பும்.

11. எருசலேமில் பேதுரு- அந்தியோகியாவில் ஊழியம்.

12. பேதுரு அற்புதமாக சிறையிலிருந்து தப்புதல் ஏரோதின் மரணம்.

13. பவுல், பர்னபா ஊழியத்திற்காகப் பிரித்தெடுக்கப்படுதல், சீப்புரு தீவில் ஊழியம், அந்தியோகியா பட்டணத்தை மையமாகக் கொண்டு மிஷனெரிப் பணி ஆரம்பித்தல்.

14. இக்கோனியா, லீஸ்திரா, அந்தியோகியா பட்டணங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்படுதல்.

15. மிஷனெரி சங்கக் கூட்டம், புறஜாதியாருக்கு சங்கத்தார் அனுப்பிய கடிதம், பவுல் பர்னபா பிரிதல்.

16. பிலிப்பி பட்டணத்தில் சுவிசேஷம் அறிவித்தல். லீதியாளின் மனமாற்றம். பவுல், சீலா சிறையில் அடைக்கப் படுதல், சிறைச்சாலைக்காரனின் மனமாற்றம்.

17. தெசலோனிக்கே, பெரோயா, அத்தேனே பட்டணங்களில் ஊழியம்.

18. கொரிந்து பட்டணத்தில் ஊழியம். எருசலேம், அந்தியோகியா பட்டணத்திற்குத் திரும்புதல். ஆக்கில்லா, பிரிஸ்கில்லாள், அப்பொல்லோ.

19. எபேசு பட்டணத்தில் ஊழியம், கலகம்.

20. மக்கெதோனியாவில் ஊழியம், மிலேத்துவில், எபேசு பட்டண மூப்பர்களுக்கு அப்போஸ்தலனாகிய பவுல் ஆலோசனை கூறுதல்.

**அப்போஸ்தலனாகிய பவுல் சாட்சி பகர்தல்**

21. எருசலேமில் அப்போஸ்தலனாகிய பவுலின் சாட்சி, கைதாகுதல்

22. யூதர்களுக்கு முன்பாக சாட்சி கொடுத்தல்.

23. ஆலோசனை சங்கத்தாருக்கு முன்பாக சாட்சி கொடுத்தல்.

24. தேசாதிபதி பேலிக்ஸ் முன்பாக சாட்சி பகர்தல்

25. தேசாதிபதி பெஸ்து முன்பாக சாட்சி பகர்தல்

26. அகிரிப்பா ராஜாவிற்கு முன்பாக சாட்சி பகர்தல்.

27. ரோமாபுரிக்குச் செல்லும் வழியில் கப்பற்சேதம், கரைசேருதல்.

28. மெலித்தா தீவில், ரோமாபுரியில் சாட்சி பகர்தல்.

**அப்போஸ்தலருடைய நடபடிகள் காலவரிசை:**

| நிகழ்ச்சிகள் | அதிகாரம் | ஆண்டு (கி.பி.) |
|---|---|---|
| எருசலேமில் சபை ஸ்தாபிக்கப்பட்டது | 3 | 30 |
| ஸ்தேவான் கல்லெறியப்படுதல் சபை சிதறடிக்கப்படுதல் | 7,8 | 31 |
| சவுல் குணப்படுதல், குணப்பட்ட பின் | 9 | 32 |
| எருசலேமுக்கு முதல் தரம் செல்லுதல் | 9 | 34 |
| கொர்நேலியு குணப்படுதல் | 10 | 35 |
| அந்தியோகியாவில் ஊழியம் | 11 | சுமார் 42 |
| பவுல் 2 ஆம் முறை எருசலேமிற்கு கலாத்தியர் 2:1 அப்போஸ்தலர் | 11:27 -30 | |
| பவுலின் மிஷனெரிப் பயணம் I | 13-14 | 45-48 |
| கலாத்தியா , எருசலேமில் கூடிய ஆலோசனைக் கூட்டம் | 15 | சுமார் 50 |

**நிகழ்ச்சிகள் அதிகாரம் ஆண்டு (கி.பி.)**

**பவுலின் மிஷனெரிப் பயணம் II**

**கிரேக்கு** 16 -18 50-53

ஜூன் மாதத்தில் பவுல் எருசலேமிற்குச் செல்லுதல் மக்கெதோனியாவில் பவுல் I கொரிந்தியர் (வசந்த கால ம் கோடைக்காலம்) 16 : 5-8

**பவுலின் மிஷனெரிப் பயணம் III**

18 - 21

| | | |
|---|---|---|
| கொரிந்துவில் 3 மாதங்கள் (மாரிகாலம்) | 20: 2,3 | 53-57 |
| ஏப்ரல் மாதம் பவுல் பிலிப்பியை விட்டார் | 20 -6 | 58 |
| ஜூன் மாதம் பவுல் எருசலேம் செல்லுதல் | | |
| கைதாக்கப்படுதல் | 20 :16 | 58 |

**பவுலின் இறுதிப் பயணம்**

எருசலேமிலிருந்து ரோமிற்கு

| | | |
|---|---|---|
| செசரியாவில் பவுல் (58 கோடை, 60 வசந்தம்) | 24 -26 | 58-60 |
| ரோமிற்கு கப்பல் பயணம் (மாரிகாலம்) | 27 -28 | 60-61 |
| ரோமில் பவுல் 2 வருடம் | 28 | 61- 63 |

இக்குறிப்புகள் எம்மாவு தபால் பாடமுறை ‘அப்போஸ்தலருடைய நடபடிகள்’ என்ற புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது. (நன்றி)

**அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்திலிருந்து தேவனைத் துதிப்பதற்காகத் தெரிந்தெடுக்கப் பட்ட வசனங்கள்.**

இந்த வசனங்களை உங்கள் வேதாகமத்தில் குறித்துக் கொள்ளுங்கள். இப்புத்தகத்தை வாசிக்கும் நாட்களில் இந்த வசனங்களை வாயாரச் சொல்லி தேவனைத் துதியுங்கள்.

1:24 எல்லாருடைய இருதயங்களையும் அறிந்திருக்கிற கர்த்தாவே

3:13 ஆபிரகாம்,ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களுடையதேவனாகிய நம்முடைய பிதாக்களின் தேவன் தம்முடைய பிள்ளையாகிய இயேசுவை மகிமைப்படுத்தினார்.

3:14 பரிசுத்தமும் நீதியும் உள்ளவரே.

3:15 ஜீவாதிபதியே

4:10 நசரேயனாகிய இயேசு கிறிஸ்து.

4:12 நாங்கள் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர் களுக்குள்ளே உம்முடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை.

4:24 கர்த்தாவே நீர் வானத்தையும், பூமியையும்,சமுத்திரத்தையும், அதிலுள்ள யாவற்றையும், உண்டாக்கிய தேவன்.

4:30 உம்முடைய பரிசுத்த பிள்ளையாகிய இயேசுவுக்கு ஸ்தோத்திரம்.

5:31 இஸ்ரவேலுக்கு மனந்திரும்புதலையும் பாவ மன்னிப்பையும் அருளுகிற தற்காக அதிபதியாகவும் இரட்ச கராகவும் தேவனால் உயர்த்தப் பட்டவரே.

7:48 உன்னதமானவரே, கைகளினால் செய்யப்பட்ட ஆலயங்களில் வாசமாயிராதவரே!

7:49 வானம் எனக்குச் சிங்காசனமும், பூமி எனக்கு பாதபடியுமாயிருக்கிறது. நீங்கள் எப்படிப்பட்ட வீட்டைக் கட்டுவீர்கள்?

7:50 நான் தங்கியிருக்கத்தக்க ஸ்தலம் எது? இவைகள் எல்லாவற்றையும் என் கரம் உண்டாக்கவில்லையா என்றுரைத்த தேவனே!

7:56 தேவனுடைய வலது பாரிசத்தில் நிற்கிற மனுஷகுமாரனே !

*10:36* எல்லோருக்கும் கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்துவே.

*10:42* உயிரோடிருக்கிறவர்களுக்கும், மரித்தவர்களுக்கும் தேவனால் ஏற்படுத்தப்பட்ட நியாயாதிபதியே!

*13:23* இஸ்ரவேலரின் இரட்சகரே.

*13:30* மரித்தோரிலிருந்து எழுப்புகின்ற தேவனே!

*13:33* இயேசுவை எழுப்பினதினாலே தேவன் நம்முடைய பிதாக்களுக்கு அருளிச் செய்த வாக்குத்தத்தத்தை அவர்களுடைய பிள்ளைகளாகிய நமக்கு நிறைவேற்றினார்.

*13:37* தேவனால் எழுப்பப்பட்டவரோ அழிவைக் காணவில்லை என்றபடியினால்

*13:47* நீர் பூமியின் கடைசி பரியந்தமும், இரட்சிப்பாயிருக்கும்படி ஜாதிகளுக்கு ஒளியாக வைக்கப் பட்டிருக்கிறவரே.

*14:17* நீர் நன்மை செய்து வந்து, வானத்திலிருந்து மழைகளையும், செழிப்புள்ள காலங்களையும் எங்களுக்குத் தந்து ஆகாரத்தினாலும் சந்தோஷத்தினாலும், எங்கள் இருதயங்களை நிரப்புகிறபடியினால்.

*15:8* இருதயங்களை அறிந்திருக்கிற தேவனாகிய நீர் எங்களுக்கு பரிசுத்த ஆவியைத் தந்தபடியால்.

*17:24* உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர் நீர் வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராயிருக்கிற படியால்.

*17:25* எல்லாருக்கும் ஜீவனையும், சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற தேவனே.

*17:26* மனுஷஜாதியான சகல ஜாதிகளையும் நீர் ஒரே இரத்தத்தினால் தோன்றப் பண்ணினபடியினால்.

*17:31* நீர் தாம் நியமித்த மனுஷரைக் கொண்டு பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்க்கிறபடியால்.

*20:32* பரிசுத்தமாக்கப்பட்ட அனைவருக்குள்ளும் எங்களுக்குச் சுதந்திரத்தைக் கொடுக்க வல்லவராய் இருக்கிற தேவனே!

*27:23* என்னை ஆட்கொண்டவரும் நான் சேவிக்கிறவருமான தேவனே!



## பவுல் எழுதின 13 நிருபங்களையும் 30 நாட்களில் வாசித்து முடிக்க ஓர் அட்டவணை

| நாள் | அதிகாரங்கள் |
|---|---|
| | ரோமர் |
| 1 | 1-2 |
| 2 | 3-4 |
| 3 | 5-7 |
| 4 | 8-9 |
| 5 | 10-11 |
| 6 | 12-14 |
| 7 | 15-16 |
| | I கொரிந்தியர் |
| 8 | 1-2 |
| 9 | 3-5 |
| 10 | 6-7 |
| 11 | 8-9 |
| 12 | 10-11 |
| 13 | 12-14 |
| 14 | 15-16 |

| நாள் | அதிகாரங்கள் |
|---|---|
| | II கொரிந்தியர் |
| 15 | 1-2 |
| 16 | 3-5 |
| 17 | 6-8 |
| 18 | 9 -11 |
| 19 | 12 - 13 |
| | கலாத்தியர் |
| 20 | 1-3 |
| 21 | 4-6 |
| | எபேசியர் |
| 22 | 1-3 |
| 23 | 4-6 |
| | பிலிப்பியர் |
| 24 | 1-4 |

| நாள் | அதிகாரங்கள் |
|---|---|
| | கொலோசெயர் |
| 25 | 1- 4 |
| | I தெசலோனிக்கேயர் |
| 26 | 1 - 5 |
| | II தெசலோனிக்கேயர் |
| 27 | 1 - 3 |
| | I தீமோத்தேயு |
| 28 | 1 - 6 |
| | II தீமோத்தேயு |
| 29 | 1- 4 |
| | தீத்து பிலேமோன் |
| 30 | 3+ 1 |

## அப்போஸ்தலனாகிய பவுல் எழுதின நிருபங்கள்

கிறிஸ்தவ திருச்சபை தோன்றிய காலத்தில் அப்போஸ்தலனாகிய பவுல் தலைசிறந்த ஓர் ஊழியக்காரனாக பணியாற்றினார். தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டு, நியமிக்கப்பட்டவர்கள் "அப்போஸ்தலர்கள்" என்று அழைக்கப் பட்டார்கள். "அப்போஸ்தலர்கள்" என்ற வார்த்தைக்கு 'அனுப்பப் பட்டவர்கள்' என்று பொருள். அப்போஸ்தலனாகிய பவுல் சிறந்த சுவிசேஷகராகவும், போதகராகவும் திருச்சபைகளை நாட்டினவராகவும், மிஷனெரியாகவும் திகழ்ந்தார். அவர் **மூன்று** மிஷனெரிப் பயணங்களை மேற்கொண்டார். அவர் திருச் சபைகளுக்கும் திருச்சபைத் தலைவர் களுக்கும் ஆவிக்குரிய செய்திகள் அடங்கிய கடிதங்களை அனுப்பினார். இக்கடிதங்கள் "நிருபங்கள்" என்று அழைக்கப்படுகின்றன.

அப்போஸ்தலனாகிய பவுல் 13 நிருபங்களை எழுதினார். அதில் 9 நிருபங்கள் 7 கிறிஸ்தவ திருச்சபை களுக்கு எழுதப்பட்டவை. 4 நிருபங்கள் தனி நபர்களுக்கு எழுதப்பட்டவை அப்போஸ்தலனாகிய பவுல் சுவிசேஷத்திற்காக சிறையில் அடைக்கப்பட்டிருந்த போது எழுதின நிருபங்கள் "சிறைச்சாலை நிருபங்கள்" என்று அழைக்கப்படுகின்றன. எபேசியர், பிலிப்பியர், கொலோசெயர், II தீமோத்தேயு, பிலேமோன் என்ற 5 நிருபங்கள் **சிறைச்சாலை** நிருபங்களாகும்.

### நிருபங்களின் பெயர்கள்:

ரோமர், I கொரிந்தியர், II கொரிந்தியர் கலாத்தியர், எபேசியர், பிலிப்பியர், கொலோசெயர், I தெசலோனிக்கேயர், II தெசலோனிக்கேயர், I தீமோத்தேயு, II தீமோத்தேயு, தீத்து, பிலேமோன்.

**கிறிஸ்தவ திருச்சபைகள் இருந்த பட்டணங்களின் பெயர்கள்.**

ரோம், கொரிந்து, கலாத்தியா, எபேசு, பிலிப்பி, கொலோசெ, தெசலோனிக்கே. இந்தப் பட்டணங்களில் வாழ்ந்த விசுவாசிகளுக்கு எழுதப்பட்டதால் இந்நிருபங்கள் முறையே ரோமர், கொரிந்தியர் என அழைக்கப்பட்ட ன.

நிருபங்கள், பவுலின் ஊழியத்திற்கு சிறந்த பின்தொடர்பணி கருவிகளாக விளங்கின. ஆவிக்குரிய சத்தியங்கள் பற்றிய போதனைகள் ‘ உபதேசங்கள்’ என்று அழைக்கப்படுகின்றன. பவுல் அப்போஸ்தலன் தனது நிருபங்களில் உபதேசங்களையும் கிறிஸ்தவ வாழ்க்கைக்கான போதனைகளையும், நடைமுறை ஆலோசனைகளையும், எச்சரிப்பான செய்திகளையும் எழுதியிருக்கிறார். இடைக்கிடையே அவரது ஆவிக்குரிய அனுபவங்களைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்.

**மேய்ப்பத்துவ நிருபங்கள்** என்று அழைக்கப்படுகிற I&IIதீமோத்தேயு, தீத்து நிருபங்களில் சபை ஊழியர்களுக்கான தகுதிகளும் , கட்டளைகளும் பொறுப்புகளும் எழுதப்பட்டிருக்கின்றன.

‘நிருபம்’ என்றால் கடிதம் என்று பொருள். ஆரம்பத்தில் யார் யாருக்கு எழுதப்பட்டிருக்கிறது என்றும் முடிவில் வாழ்த்துக்கள், ஆசீர்வாதம் என்றும் இருப்பதையும் நீங்கள் கவனிக்கலாம். உங்களுக்கு நண்பர் ஒருவர் கடிதம் எழுதினால் நீங்கள் அந்தக் கடிதத்தைப் பெற்ற பின் அதை எப்படி வாசிப்பீர்கள்? முதலில் தொடங்கி கடைசி வரை தொடர்ச்சியாக வாசித்து முடித்து விட்டுத்தானே வைப்பீர்கள்? அதைப் போல நிருபங்களைப் படித்துப் பாருங்கள்.

ரோமர், Iகொரிந்தியர், II கொரிந்தியர் என்ற பெரிய நிருபங்களைத் தவிர, மற்ற 10 நிருபங்கள் ஒவ்வொன்றையும் 15 நிமிடத்திற்குள் ஒரு முறை வாசித்து விடலாம். அந்த விதமாக வாசித்துப் பாருங்கள்.

நிருபங்களில் ஒவ்வொரு அதிகாரத்தையும் வாசிக்கும் போது கீழ்க்காணும் 3 கேள்விகளை மனதில் கொண்டு மிகவும் கவனமாக வாசியுங்கள்.

1) இந்த அதிகாரத்தில் ஆண்டவராகிய இயேசுவைப் பற்றி நான் அறிந்து கொள்வது என்ன?
2) இந்த அதிகாரத்தில் அப்போஸ்தலனாகிய பவுலைப் பற்றி நான் கற்றுக்கொள்வது என்ன?
3) இந்த அதிகாரத்தில் திருச்சபை மக்களது ஆவிக்குரிய வாழ்க்கை / நிலைமை பற்றி நான் அறிந்து கொள்வது என்ன?

நிருபங்களில் ஒரு சில வசனங்களைக் கொண்ட கருத்தாழம் நிறைந்த பகுதிகளை நீங்கள் தெரிந்து கொண்டு அப்பகுதிகளை அடிக்கடி வாசித்து ஆராயலாம்.

### 13 நிருபங்கள்

| | |
|---|---|
| ரோமர் 5 :1-11 | I தெசலோ 2:1-3 |
| I கொரி 3 :10-15 | II தெசலோ 2:13-17 |
| IIகொரிந்தியர்1:3 10 | I தீமோத்தேயு 2: 1-6 |
| கலாத்தியர் 5:16-25 | II தீமோத்தேயு 2:1-7 |
| எபேசியர் 1:15-23 | தீத்து 2: 12-14 |
| பிலிப்பியர் 2: 5-11 | பிலேமோன் 14-21 |
| கொலோசெயர் 3:12-17 | |

பவுலின் நிருபங்களில் ஒவ்வொரு நிருபத்திலும் கடைசியில் ஆமென் என்ற வார்த்தையில் முடிவதை பார்க்கலாம்.

அப்போஸ்தலனாகிய பவுல் எழுதின 13 நிருபங்களில் இந்த நிருபம் (கடிதம்) ஒரு உபதேச விளக்க நிருபமாகும். இந்த நிருபத்தில் 'இரட்சிப்பு' என்ற ஆவிக்குரிய அனுபவத்தைப் பற்றி 'நீதிமானாக்கப்படுதல்' என்ற தலைப்பின் கீழ் பவுல் அப்போஸ்தலன் தெளிவாக விளக்கி எழுதியிருக்கிறார். புதிய ஏற்பாட்டு புத்தக வரிசையில் 6 ஆவது புத்தகமாக இடம் பெற்றிருக்கும் இந்நிருபம் கால வரிசையில் முதலில் எழுதப்பட்ட நிருபம் அல்ல.

**பின்னணி :**

**ரோம் பட்டணத்து திருச்சபை:**

ஆதி அப்போஸ்தலர்களால் இயேசு கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தி தீவிரமாகப் பிரசங்கிக்கப்பட்டது. ஒவ்வொரு இடத்திலும் சுவிசேஷத்தை விசுவாசித்து, இயேசு கிறிஸ்துவின் சீடர்களாக மாறினவர்கள் ஒன்று சேர்க்கப்பட்டு கிறிஸ்தவ திருச்சபை நாட்டப்பட்டது. அப்போஸ்தலனாகிய பவுல் பரவலாகப் பயணம் செய்து அதிகமான திருச்சபைகளை நாட்டினார். ஆனால் ரோம் பட்டணத்தில் இருந்த திருச்சபை பவுல் அப்போஸ்தலனால் நாட்டப்பட்ட திருச்சபை அல்ல. பெந்தெகொஸ்தே என்ற நாளன்று பரிசுத்த ஆவியானவரால் ஆட்கொள்ளப்பட்ட விசுவாசிகள் ரோம் பட்டண சபை தோன்றுவதற்கு காரணமாக இருந்தார்கள். அப்போஸ்தலர் 2;10 ஆம் வசனத்தை எடுத்துப் பார்க்கவும். ரோமர் 16 ஆம் அதிகாரத்தை படிக்கும் போது அப்போஸ்தலனாகிய பவுலோடு சேர்ந்து ஊழியம் செய்த பலரும் ரோம் பட்டணத்து சபையில் முக்கிய அங்கம் வகித்தார்கள் என்று தெரிகிறது.

அக்காலத்தில் ரோம் பட்டணம் மிகவும் முக்கியமான பட்டணமாக இருந்தது. இப்பட்டணத்தில் வாழ்ந்த விசுவாசிகள் பெரும்பான்மையினர் யூதர் அல்லாத புற ஜாதியினராக இருந்தார்கள். யூத விசுவாசிகளும் அங்கு இருந்தார்கள். விசுவாசிகள் இரட்சிப்பின் அனுபவத்தைக் குறித்த போதனையை தெளிவாக அறிந்திருக்க வேண்டுமென்று பவுல் ஆழ்ந்த சிந்தனையுடன் இந்த நிருபத்தை எழுதியிருக்கிறார்.

**எழுதப்பட்ட காலம்:**

சுவிசேஷத்தை அறிவிக்கவும், திருச்சபைகளை நாட்டவும் பவுல் அப்போஸ்தலன் மிஷனெரிப் பயணங்களை மேற்கொண்டார். பவுல் தனது மூன்றாவது மிஷனெரிப் பயணத்தின் போது கொரிந்து பட்டணத்தில் இருந்து இந்நிருபத்தை எழுதினார். அங்கிருந்து தமக்கு அறிமுகமான ஒருவரிடம் கடிதத்தைக் கொடுத்து அனுப்பினார். கி.பி. 58 இல் இந்நிருபம் எழுதப்பட்டதென்று கணிக்கப்படுகிறது. கொரிந்து பட்டணத்திலிருந்து எருசலேமிற்கு பிரயாணப்பட்டு, பின் அங்கிருந்து ரோமிற்கு செல்ல வேண்டும் என்பது பவுலின் திட்டமாய் இருந்தது.ரோம் பட்டணத்தில் உள்ள விசுவாசிகளை சந்திக்கவும், அங்கு ஊழியம் செய்யவும் பின் அங்கு இருந்து ஸ்பெயின் தேசத்திற்குச் செல்லவும் பவுல் விரும்பினார். ரோம் பட்டணத்தில் நீ என்னைப் பற்றி சாட்சி கொடுக்க வேண்டும் என்று ஆண்டவர் ஒரு தரிசனத்தின் மூலம் பவுலிற்கு வெளிப்படுத்தி இருந்தார். அப்போஸ்தலர் 19:21, 23:11 வசனங்களை வாசித்துப் பாருங்கள்.

**ரோமர் 1 : 12, 15 : 24** வசனங்களில் ரோம் பட்டணத்திற்கு பவுல் செல்ல விரும்பினதைப் பற்றி எழுதியிருக்கிறார். இந்நிருபத்தை எழுதி 3 ஆண்டுகளுக்குப் பின்னர் சுவிசேஷத்திற்காக கைது செய்யப்பட்டவராய் விசாரணைக்கென்று பவுல் ரோம் பட்டணத்திற்கு கொண்டு செல்லப்பட்டார். 8 ஆண்டுகளுக்குப் பின்னர் ரோம் பட்டணத்திலேயே இரத்த சாட்சியாக மரித்தார்.

## முக்கியச் செய்தி:

'நீதிமானாக்கப்படுதல்' என்ற தலைப்பில் இரட்சிப்பின் அனுபவம் இந்நிருபத்தில் தெளிவாக விளக்கப் பட்டிருக்கிறது.

தேவன் நீதியுள்ளவர். ஆதாமின் பாவத்தினால் பாதிக்கப்பட்டு பாவிகளாய் இருக்கும் மனிதர் தேவனை விட்டுப் பிரிந்து அவரைக் கிட்டிச் சேரக்கூடாத நிலையில் இருக்கிறார்கள். பாவத்தின் காரணமாக நித்திய ஆக்கினையின் தீர்ப்பிற்குள்ளாகி இருக்கிறார்கள். பரிசுத்தமுள்ள தேவனுக்கு முன்பாக எல்லா மனிதரும் பாவிகளாய் இருக்கிறார்கள். தெரிந்து கொள்ளப்பட்ட யூதரானாலும் சன்மார்க்கரானாலும், புறஜாதியா ரானாலும் எல்லோருமே பாவிகளாய் தீர்க்கப்பட்டு இருக்கிறார்கள். எனவே, எல்லோருக்குமே இரட்சிப்பு தேவை.

பாவத்திற்குரிய தீர்ப்பாகிய நரக ஆக்கினையிலிருந்தும் பாவத்தின் வல்லமையிலிருந்தும் விடுதலை அளிக்கவே இயேசு கிறிஸ்து தம்முடைய ஜீவனைக் கொடுத்தார். இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கி றவர்களுக்கு இரட்சிப்பு கிடைக்கிறது. தேவனுடைய பார்வையில் பாவிகள் என்ற நிலையில் இருந்தவர்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டதன் காரணமாக நீதிமான்களாக்கப்படுகிறார்கள். அதாவது இயேசு கிறிஸ்துவின் நிமித்தமாக தேவன் அவர்கள் பாவத்தைக் கணக்கில் கொள்வதில்லை. சரியான வாழ்க்கை வாழ்வதற்கான கிருபையும் வல்லமையும் கொடுக்கிறார்.

தேவன் அருளும், இரட்சிப்பின் கிருபை எல்லோருக்கும் தேவை. இக்கிருபையைப் பெற விசுவாசம் தேவை. மனித முயற்சியினாலோ மத சடங்காச் சாரங்களினாலோ இக்கிருபையைப் பெற்றுக்கொள்ள முடியாது. இதைத் தான் 'விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்' என்று ரோமர் 1:17 இல் வாசிக்கிறோம். கலாத்தியருக்கு எழுதின நிருபத்திலும் இதே செய்தியைத் தான் பவுல் விளக்குகிறார் .

## பகுப்பாய்வு:

### அதிகாரங்கள்

1-8 தேவ நீதியைப் பற்றிய வெளிப்பாடு

09-11 இஸ்ரவேலரைப் பற்றிய தேவனுடைய திட்டம்.

12-15 விசுவாசிகள் நீதியுள்ளவர்களாக வாழ்வதற்கான நடைமுறை ஆலோசனைகள்.

16- வாழ்த்துக்கள்

## முக்கிய அதிகாரம்:

8, பரிசுத்த ஆவியானவர் மூலம் கிடைக்கும் வெற்றி.

## முக்கிய வசனங்கள்:

ரோமர் 1:16,17



## முக்கிய வார்த்தைகள்:

| | தடவைகள் |
|---|---|
| விசுவாசம் | 50 |
| நீதிமானாக்கப்படுதல் | 12 |
| விருத்தசேதனம் | 26 |
| நியாயப்பிரமாணம் | 65 |
| யூதர் (இஸ்ரவேலர்) | 14 |
| பாவம் | 58 |

புறஜாதியார், எழுதியிருக்கிறதே என்ற வார்த்தைகள் ஒவ்வொன்றும் எத்தனை தடவைகள் வருகின்றன என்று கண்டுபிடியுங்கள். இதிலிருந்து நீங்கள் விளங்கிக்கொள்ளும் உண்மை என்ன?

## விருத்தசேதனம் என்ற வார்த்தையின்பொருள்:

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தேவன் மக்களோடு செய்த உடன் படிக்கைக்கு 'விருத்தசேதனம்' என்ற அடையாளச் செய்கையைக் கட்டளையிட்டார். யூத ஆண்மக்கள், தங்கள் ஆண் உறுப்பின் நுனித்தோலை வெட்டிவிட வேண்டும் என்பதே விருத்தசேதனமாகும். இன்றைக்கும் முஸ்லீம்கள் இம்முறையைக் கையாளுகிறார்கள் என்பது யாவருக்கும் தெரிந்ததே. புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இப்படிப்பட்ட சரீரப்பிரகாரமான செயல்கள் அவசியமில்லை என்பதையே பவுல் அப்போஸ்தலன் முக்கியமாக வலியுறுத்தினார்.

## இப்புத்தகத்தை வாசிக்கும் முறை :

இந்நிருபம் 20 பக்கங்களைக் கொண்டு உள்ளது. மொத்தம் 433 வசனங்களை உள்ளடக்கியுள்ளது. இந்நிருபம் முழுவதையும் ஒரு முறை தொடர்ச்சியாக வாய்விட்டு வாசிப்பதற்கு ஒரு மணி, பதினைந்து நிமிடம் ஆகிறது. அந்த விதமாக நீங்கள் வாசித்துப் பார்ப்பது மிகவும் நல்லது.

## அதிகாரங்களின் உள்ளடக்கம்:

1. முன்னுரை, பாவத்திற்குட்பட்டிருந்த மனுக்குலத்தின் மீது தேவன் கொண்டிருந்த கோபம்.
2. சன்மார்க்கரும் தேவனைப் பிரியப்படுத்த இயலாத நிலை, யூதரும் நியாயப்பிரமாணமும்.
3. எல்லோரும் பாவம் செய்தவர்கள். விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல்.
4. விசுவாசத்தினால் நீதிமானாக்கப் படுதல் - ஆபிரகாம் ஓர் உதாரணம்.
5. நீதிமானாக்கப்பட்டவர்களுக்குக் கிடைக்கும் ஆசீர்வாதங்கள்.
6. பாவத்திற்கு மரித்து, கிறிஸ்துவுக்குள் பிழைத்திருத்தல். நீதிக்கு அடிமையாகுதல்.
7. நியாயப்பிரமாணத்தின் காரணமாக பாவத்தோடு உள்ள போராட்டம்.
8. பரிசுத்த ஆவியானவரால் கிடைக்கும் வெற்றி.
9. இஸ்ரவேலர் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்.தேவனுடைய கோபமும், இரக்கமும்.
10. இஸ்ரவேலரைக் குறித்து பவுலின் கரிசனை, எல்லோரும் இரட்சிக்கப்பட வேண்டும்.
11. இஸ்ரவேலர் மீது தேவன்கொண்டிருந்த கரிசனை.
12. கிறிஸ்தவர்களின் கடமைகள்.
13. அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிதல், அன்புகூருதல்.
14. பலவீனரும், பலமுள்ளவர்களும்.
15. புறஜாதியார்களுக்குப் பவுலின் ஊழியம்.
16. வாழ்த்துக்கள்.

Cell: 89030 11350,
E-mail : selwynde@gmail.com

பவுல் அப்போஸ்தலன் எழுதின 13 நிருபங்களில் 2 நிருபங்கள் கொரிந்து பட்டணத்தில் வாழ்ந்த விசுவாசிகளுக்கு எழுதப்பட்டவைகளாகும். I கொரிந்தியர், II கொரிந்தியர், என்ற இந்த நிருபங்கள் புதிய ஏற்பாட்டுப் புத்தக வரிசையில் ஏழாவது, எட்டாவது புத்தகங்களாக இடம் பெற்றிருக்கின்றன.

**பின்னணி :**

20 நூற்றாண்டுகளுக்கு முன்னர் கொரிந்து பட்டணம் முக்கியமான ஒரு பட்டணமாக இருந்தது. கிரேக்க நாட்டைச் சேர்ந்த இப்பட்டணம் அகாயா என்ற பகுதியில் ரோம் ஆட்சிக்குக் கீழ் கட்டுப்பட்டிருந்தது. மத்தியதரைக் கடலின் வடபகுதியில் இருந்த இந்த துறைமுகப் பட்டணம் செல்வம் கொழிக்கும் ஒரு வியாபார மையமாக விளங்கியது.

கொரிந்து பட்டணத்து மக்கள் பல நாட்டவரைச் சேர்ந்தவர்களும் பல மதத்தவர்களாகவும் இருந்தனர். இவர்கள் பொழுது போக்கிற்கும் உல்லாச வாழ்விற்கும் பெரும் முக்கியத்துவம் கொடுத்து வந்தார்கள். அந்த நாட்களில் கொரிந்து பட்டணத்தில் 4 இலட்சம் அடிமைகள் இருந்தார்கள் என்று சொல்லப் படுகிறது. மக்கள் தொகை 7 இலட்சம்.

கொரிந்து பட்டணத்தில் அநேக ஆலயங்களும், தொழுகை ஸ்தலங்களும் காணப்பட்டன. கொரிந்தியர்கள் தேவதைகளை வழிபட்டு வந்தார்கள். 1000 தேவதாசிகள் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. முறை கேடான அநேக பழக்கங்கள் கொரிந்து பட்டணத்தில் இருந்ததால் தவறான செயல்களைச் செய்தவர்களுக்கு ‘கொரிந்தியன்’ என்ற வழக்கச் சொல் வழங்கி வந்தது.

அப்போஸ்தலனாகிய பவுல் தனது இரண்டாவது மிஷனெரிப் பயணத்தில் கொரிந்து பட்டணத்திற்குச் சென்றார். 18 மாதங்கள் அங்கு தங்கி ஊழியம் செய்தார். அநேக யூதர்களும், புறவினத்தார்களும் சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டு விசுவாசிகளாக மாறினர். பவுல், ஆக்கில்லா, பிரிஸ்கில்லாள் என்பவர்களோடு சேர்ந்து திருச்சபையை நாட்டினார். இந்த விபரங்களையெல்லாம் அப்போஸ்தலர் 18 ஆம் அதிகாரத்தில் படிக்கிறோம். தயவு செய்து இந்த அதிகாரத்தை எடுத்துப் படித்துப் பாருங்கள்.

**எழுதப்பட்ட காலம்:**

அப்போஸ்தலனாகிய பவுல் மூன்றாவது மிஷனெரிப் பயணத்தில் எபேசுப் பட்டணத்திலிருந்து ஒரு நிருபத்தை எழுதினார். கொரிந்து சபையில் இருந்த பாவமான நிலையைப் பற்றி கேள்விப்பட்ட பவுல் அந்நிருபத்தை எழுதினார். இதைப் பற்றித்தான் I கொரிந்தியர் 5:9 இல் குறிப்பிடுகிறார். இந்த நிருபம் தவறி விட்டது என்று சொல்லப்படுகிறது. இதற்குப் பிறகு கொரிந்து பட்டணத்திலிருந்து ஒரு கடிதத்தைப் பெற்றார். I கொரிந்தியர் 7 :1 என்ற வசனத்தைப் படித்துப் பாருங்கள். அக்கடிதத்தில் அவர்கள் கொரிந்து சபையில் இருந்த சில பிரச்சனைகளைப் பற்றியும் சபை நடத்தை, விசுவாசிகளின் நடத்தை பற்றிய சில கேள்விகளையும் எழுதியிருக்கிறார்கள். இதற்குப் பதிலாகத் தான் I கொரிந்தியர் என்ற நிருபத்தை பவுல் எழுதினார். கி.பி. 56 இல் இந்நிருபம் எழுதப்பட்டது.

**முக்கியச் செய்தி :**

கிறிஸ்தவ திருச்சபையோ,விசுவாசியோ ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் ஆளுகைக்குள் அடங்கி இருக்க வேண்டும். இந்த அடிப்படையில் தவறினால் பிரிவினையும், பாவமும், பிரச்சனையும், பாதிப்பும் சபையில் ஏற்படும். கிறிஸ்தவர்கள் ஆவிக்குரியவர்களாக வாழ வேண்டும். மாம்சத்திற்குரிய நடத்தைகள் மாற வேண்டும். விசுவாசிகள் மாம்சத்திற்கு இடம் கொடுத்தால் ஆவிக்குரிய வளர்ச்சியையும், வல்லமையையும் இழக்க நேரிடும் என்பதே இந்நிருபத்தில் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய ஓர் எச்சரிப்பின் செய்தியாகும். சபை ஆராதனையின் ஒழுங்கு முறைகள், சபை வாழ்வில் விசுவாசிகளின் நடத்தை, சமூக வாழ்வில் விசுவாகளின் நடத்தை இவைகளைப் பற்றிய தெளிவான போதனைகள் இந்நிருபத்தில் எழுதப்பட்டிருக்கின்றன.

**சுவிசேஷ செய்தி:**

கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து...... தரிசனமானார். I கொரிந்தியர்15: 3-5

**பகுப்பாய்வு:**

I சபையில் பிரிவினை இருக்கிறது என்ற பிரச்சனைக்குப் பதில் **1:1 - 4 :21**

II சபையில் விபச்சாரப் பழக்கம் இருக்கிறது என்ற பிரச்சனைக்குப் பதில் **5:1 - 6:20**

III பல கேள்விகளுக்கு கொடுக்கப்பட்ட ஆலோசனைகள்

1) திருமண (விவாகம்) வாழ்க்கைக்கான ஆலோசனைகள் **7 : 1- 40**
2) விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டதை புசிக்கலாமா என்பதைப் பற்றிய ஆலோசனைகள் **8:1 - 11:1**
3) ஆராதனை முறை பற்றிய ஆலோசனைகள் **11: 2- 14: 40**
4) உயிர்த்தெழுதலைப் பற்றிய போதனை **15 :1- 58**
5) எருசலேமுக்கு எடுத்துச் செல்லப்பட வேண்டிய தர்மப் பணத்தைப் பற்றிய ஆலோசனைகள். **16 :1 - 4**

முடிவுரை **16 : 5 - 24**

**முக்கிய அதிகாரங்கள்:**

13 அன்பே பெரியது.

15 உயிர்த்தெழுதல்

**முக்கிய வசனங்கள்:**

I கொரிந்தியர் 6 :19 - 20, 10: 12- 13

**முக்கிய வார்த்தை:**

‘கர்த்தர்’ என்ற வார்த்தை எங்கெல்லாம் வருகிறதென்று கோடிட்டு வாசித்துப் பாருங்கள்.

**இப்புத்தகத்தை வாசிக்கும் முறை:**

இந்நிருபத்தின் 16 அதிகாரங்களில் 427 வசனங்கள் இருக்கின்றன. 19 பக்கங்களைக் கொண்டுள்ள இந்நிருபத்தை 1 மணி நேரம் 15 நிமிடங்களுக்குள் ஒரு முறை தொடர்ச்சியாக வாய்விட்டு வாசித்து விடலாம். அந்த விதமாக ஒரு முறையாவது வாசிக்க முயற்சி செய்யுங்கள்.

**அதிகாரங்களின் உள்ளடக்கம்:**

ஒவ்வொரு அதிகாரத்திற்கும் கொடுக்கப்பட்டிருக்கும் தலைப்புகளை அந்தந்த அதிகாரங்களுக்கு மேல் உங்கள் வேதாகமத்திலேயே எழுதிக் கொள்ளுங்கள்.

1. வாழ்த்து, நன்றியின் ஜெபம், பிரிவினை,தேவஞானமும், அழைப்பும்.
2. பிரசங்க ஊழியம், ஆவியானவரும், ஆவிக்குரியவர்களும்.
3. பிரிவினை மனப்பான்மை - குழந்தைத் தன்மை, கிறிஸ்துவின் மேல் கட்டுகின்ற ஊழியம்.
4. ஊழியக்காரர் கணக்குக் கொடுக்க வேண்டிய அவசியம், பவுலின் ஊழியம் எப்படிப்பட்டதாயிருந்தது?
5. விபச்சாரக்காரனைப் பற்றிய சபை ஒழுங்கு.
6. விசுவாசிகளின் வழக்கு விசாரிக்கப் படும் விதம், பாலுறவு பாவங்களைப் பற்றிய எச்சரிப்பு, சரீரத்தின் மதிப்பு.
7. விவாக வாழ்க்கைக்கான ஆலோசனைகள், தேவனுடைய அழைப்பில் நிலைத்திருக்க வேண்டிய அவசியம், விவாகம் பண்ணாதவர்களுக்கான ஆலோசனைகள்.



8. விக்கிரகங்களுக்குப் படைக்கப் பட்டதைப் புசிப்பது பற்றிய கேள்விகளுக்குப் பதில்.
9. ஊழியக்காரனுடைய உரிமைகள், உரிமைகளை விட்டுக் கொடுக்கும் சிறந்த ஊழியக்காரன்.



10. விக்கிரக ஆராதனை, பழைய ஏற்பாட்டிலிருந்து எச்சரிப்பு, புதிய ஏற்பாட்டு உபதேசம்.
11. பொது இடங்களில் ஜெபிப்பது பற்றிய ஆலோசனைகள், முக்காடிடுதல், ஆண்டவருடைய பந்தியை சரியான விதத்தில் ஆசரித்தல்.
12. ஆவிக்குரிய வரங்கள், சரீரமும் அவயவங்களும்.
13. அன்பே சிறந்தது, உயர்ந்தது.
14. ஆவிக்குரிய வரங்களை பயன் படுத்துதல், அந்நிய பாஷையில் பேசுதல்.
15. உயிர்த்தெழுதல்.
16. பவுலின் திட்டங்கள், நண்பர்களுக்கு வாழ்த்துக்கள்.

I கொரிந்தியர் என்ற நிருபத்தை எழுதின பின்னர் அவசரமாகப் பவுல் கொரிந்து பட்டணத்திற்குச் சென்றார். ஆனால் அவர் சென்றிருந்த போது அந்த சந்திப்பு அவரை புண்படுத்தும் அனுபவமாக இருந்தது. பவுலின் கருத்துக்களை ஒரு சிலர் ஏற்றுக் கொண்டாலும் அவருக்கு விரோதமாக ஒரு சாரார் எழும்பியிருந்தார்கள்.

அப்போஸ்தலர் என்று அழைக்கப்பட்ட ஒரு சிலர் பவுல் அப்போஸ்தலனுக்கு விரோதமாக சபையினரைத் தூண்டி விட்டனர். பவுலின் மேல் பல குற்றங்களைச் சாட்டினர். பவுலின் அப்போஸ்தல அழைப்பைப் பற்றி கேள்விகளை எழுப்பினர். பவுலின் மனம் புண்படும்படி பேசினர். பவுல் தம்முடைய திட்டத்தை மாற்றி மீண்டும் தம்முடைய மிஷனெரிப் பயணத்தைத் தொடர்ந்தார். IIகொரிந்தியர்1:15,16 வசனங்களை வாசிக்கவும்.

பவுல் எபேசு பட்டணத்திலிருந்து தம்முடைய ஊழியக்காரராகிய தீத்துவை கொரிந்து சபையினரை சந்திக்கும்படி அனுப்பியிருந்தார். தீத்துவின் கையில் ஒரு நிருபத்தை கொடுத்து அனுப்பினார். இந்நிருபமும் காணாமல் போய்விட்டது. இந்நிருபம் காரசாரமாக எழுதப்பட்டிருந்தது. IIகொரிந்தியர் 10-13 அதிகாரங்கள் இந்நிருபத்தைச் சார்ந்தது என்று சில வேத அறிஞர்கள் கருதுகிறார்கள். எபேசு பட்டணத்திலிருந்து துரோவா பட்டணத்திற்கு பவுல் சென்று தீத்துவைக் காணும் பொருட்டு காத்திருந்தார். தீத்து வர அதிக தாமதம் ஏற்பட்டதால் மக்கெதோனியாவிற்கு புறப்பட்டுச் சென்றார். அங்கு தீத்து வந்து பவுலை சந்தித்து கொரிந்து சபையில் நடைபெற்றிருந்தவைகளை எடுத்துரைத்தார். இதற்குப் பின் IIகொரிந்தியர் என்ற நிருபம் எழுதப்பட்டது.

பவுல் கொரிந்து சபையை மூன்று முறை சந்தித்தார் என்றும் நான்கு நிருபங்களை எழுதினார் என்றும் தெரிகிறது. அதில் முதலாம், மூன்றாம் நிருபங்கள் தவறிவிட்டன. புதிய ஏற்பாட்டில் இருக்கும் I கொரிந்தியர், II கொரிந்தியர் என்ற நிருபங்கள் இரண்டாம், நான்காம் நிருபங்களாகும். I கொரிந்தியர் நிருபத்தை எழுதிய ஒரு வருடத்திற்குள்ளே II கொரிந்தியர் நிருபத்தை எழுதினார்.

**எழுதப்பட்ட காலம்:**

கி.பி.57. மக்கெதோனியாவிலிருந்து பவுல் இந்நிருபத்தை எழுதினார்.

**இப்புத்தகத்தின் செய்தி:**

இந்த நிருபம் பவுலின் சுயசரித்திரம் போல் எழுதப்பட்டிருக்கிறது. மற்ற நிருபங்களில் இல்லாத தன்னுடைய தனிப்பட்ட வாழ்க்கையைப் பற்றிய பல குறிப்புகளை பவுல் இந்த நிருபத்தில் எழுதியிருக்கிறார். தனிப்பட்ட விதத்தில் உரிமை பாராட்டி எழுதியிருப்பதாகத் தெரிகிறது. மனம் புண்பட்டவராய் ஆத்திரத்துடனும் வைராக்கியத்துடனும் இந்நிருபத்தை எழுதியிருக்கிறார். இதற்குத் தக்க காரணங்கள் உண்டு. போலி அப்போஸ் தலர்கள் சபையில் பெரும் குழப்பத்தை விளைவித்தனர். இவர்களுக்கு பதிலடி கொடுக்கும்படி எழுதியிருக்கிறார்.

**பவுல் ஏன் இந்த நிருபத்தை எழுதினார்?**

Iகொரிந்தியர் என்ற நிருபத்தில் எழுதப்பட்டவைகளை ஒரு சிலர் ஏற்றுக்கொண்டார்கள். அதற்காக பவுல் அவர்களைப் பாராட்டுகிறார். இடறல் உண்டாக்கினவனை மிகவும் தண்டித்து விடக்கூடாது என்ற கரிசனையை பவுல் இந்நிருபத்தில் தெரிவித்திருக்கிறார். கொரிந்து சபையை சந்திக்க வருவதில் தாமதம் ஏற்பட்டதைக் குறித்து எழும்பின புரளிகளுக்கு விளக்கம் கொடுத்திருக்கிறார்.

ஊழியத்தின் மேன்மையையும் உக்கிராணத்துவத்தையும் பற்றி தெளிவாக எழுதியிருக்கிறார். எருசலேமிலுள்ள பரிசுத்தவான்களுக்கு உதவிப்பணம் கொடுக்கும்படி கொரிந்து சபையினரை உற்சாகப் படுத்தி எழுதியிருக்கிறார். போலி அப்போஸ்தலருக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் காரசாரமாக எழுதி இருப்பதை 10-12 அதிகாரங்களில் கவனிக்கலாம்.

**பகுப்பாய்வு:**

1. பவுலின் ஊழியத்தைப் பற்றிய விளக்கங்கள். 1:1 - 7 :16
2. பரிசுத்தவான்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய உதவிப் பணத்தைப் பற்றிய வேண்டுகோள். 8:1 - 9 :15
3. பவுலுக்கு ஆண்டவர் கொடுத்திருந்த அப்போஸ்தல ஊழியத்தைப் பற்றிய விளக்கங்கள் 10 - 13

**முக்கியச் செய்தி:**

கிறிஸ்துவுக்கென்றே செய்யப்படும் ஊழியம் மேன்மையானது. ஊழியத்தில் போராட்டங்களும், வேதனைகளும் இருந்தாலும் ஆண்டவர் ஆறுதல் படுத்துகிறார்.

**முக்கிய அதிகாரங்கள்:**

8, 9 கிறிஸ்தவ ஈகை (கொடுத்தல்)

**முக்கிய வசனங்கள்:**

நாங்கள் எங்களையே பிரசங்கியாமல், கிறிஸ்து இயேசுவைக் கர்த்தரென்றும், எங்களையோ இயேசுவினிமித்தம் உங்கள் ஊழியக்காரரென்றும் பிரசங்கிக்கிறோம். II கொரிந்தியர் 4 : 5

இந்த ஊழியம் குற்றப்படாதபடிக்கு, நாங்கள் யாதொன்றிலும் இடறல் உண்டாக்காமல், எவ்விதத்தினாலேயும், எங்களைத் தேவ ஊழியக்காரராக விளங்கப்பண்ணுகிறோம்.

II கொரிந்தியர் 6: 3

**முக்கிய வார்த்தைகள்:**

ஊழியம் - 22 துக்கம் - 17

ஆறுதல் - 16

மேன்மை பாராட்டுதல் - 19

இந்த வார்த்தைகள் எங்கெல்லாம் வருகிறதென்று கவனமாக படித்துப் பாருங்கள்.

**இப்புத்தகத்தை வாசிக்கும் முறை:**

13 அதிகாரங்களையும் 257 வசனங்களையும் கொண்டுள்ள இப்புத்தகம் 12 பக்கங்களில் காணப்படுகிறது. இந்நிருபம் முழுவதையும் ஒரு முறை தொடர்ச்சியாக வாய்விட்டு வாசிப்பதற்கு 45 நிமிடங்கள் தான் ஆகிறது. அந்த விதமாக நீங்கள் வாசித்துப் பாருங்கள்.

கீழ்க்காணும் வசனங்களில் உள்ள வாக்கியங்களை தேவனைத் துதிப்பதற்கு பயன்படுத்துங்கள். ஆமென்.

1:3, 4, 9, 21, 22
4:6,14, 5:5, 21, 7:6, 8:9
9;8,10,15, 11:31, 13:11

**அதிகாரங்களின் உள்ளடக்கம்:**

1. தேவன் அருளும் ஆறுதல், பவுலின் திட்டங்கள்.
2. முந்தின கடிதத்தைப் பற்றிய விளக்கம். குற்றவாளியை மன்னிக்கும்படி கேட்டுக்கொள்ளுதல் .
3. ஊழியத்தின் மேன்மை, முக்காடு நீங்குதலும் மகிமையும்.
4. கிறிஸ்துவே ஊழியத்தின் மைய செய்தி, பாடுகள் நிறைந்த ஊழியம்.
5. ஊழியத்திற்கான தூண்டுதல்கள்: நித்திய வாழ்வு, பிரதிபலன். கிறிஸ்துவின் அன்பு, ஒப்புரவாக்குதலின் செய்தி.



6. இடறலற்ற ஊழியம். ஊழியத்தில் பவுலுக்கு வந்த இன்னல்கள், பிரித்தெடுக்கப்பட்ட வாழ்விற்கு அழைப்பு.
7. பவுலும் தீத்துவும், பவுலுக்கு கிடைத்த ஆறுதலும் மகிழ்ச்சியும்.



8. மக்கெதோனியர் தேவனுக்குக் கொடுத்த விதம், தீத்துவிற்கு கொடுக்கப்பட்ட ஊழியம்.



9. தேவனுக்கு தாராளமாய்க் கொடுக்க சவால், கொடுப்பவர்களுக்குக் கிடைக்கும் பலன்.
10. போலி அப்போஸ்தலர்களுக்குப் பவுலின் பதில்.



11. பவுலின் நடத்தை, பவுலின் பாடுகள்



12. பவுலின் வேதனை, தரிசனம், பவுல் கொண்டிருந்த கரிசனை.



13. எச்சரிப்புகளும் வாழ்த்துக்களும்.

அப்போஸ்தலனாகிய பவுல் இயேசு கிறிஸ்துவைப் பற்றிய சுவிசேஷத்தை அறிவித்து, விசுவாசிகளை சீஷராக்கி, கிறிஸ்தவ திருச்சபைகளை நாட்டினார். அவர் எழுதிய 13 நிருபங்களில் 9 நிருபங்கள் கிறிஸ்தவ திருச்சபைகளுக்கு எழுதப்பட்ட நிருபங்கள் ஆகும். புத்தக வரிசையில் இது 9 ஆவது புத்தகமாகும்.

### யாருக்கு எழுதியது?

கலாத்தியா என்பது ஒரு பிரதேசம் அல்லது பகுதியின் பெயராகும். இந்தப் பகுதி ‘ சிறிய ஆசியா’ என்றும் அழைக்கப்பட்டது. மத்தியதரைக் கடலுக்கு வடபகுதியில் இருந்த கலாத்தியாவில் தெர்பை, அந்தியோகியா, இக்கோனியா, லீஸ்திரா என்பவைகள் முக்கியமான நகரங்களாகும். அப்போஸ்தலர் 14 ஆம் அதிகாரத்தை வாசித்துப் பாருங்கள். பவுல் அப்போஸ்தலன் தனது முதலாவது மிஷனெரிப் பயணத்தில் இப்பகுதி களுக்குச் சென்று சுவிசேஷத்தை அறிவித்து விசுவாசிகளைச் சீஷராக்கி சபைகளை நாட்டினார். இதையடுத் து யூத மதத்தைச் சேர்ந்தவர்கள் இப்பகுதிகளுக்குச் சென்று வேறுபட்ட உபதேசங்களைப் போதித்து, குழப்பங்களை ஏற்படுத்தினார்கள். இந்தப் புதிய உபதேசத்தைக் கேட்டு கலாத்தியா விசுவாசிகளில் சிலர் பின்மாற்றம் அடைந்தனர். சரியான உபதேசத்தை வலியுறுத்தி எழுதின பவுல் வைராக்கியத்துடன் காரசாரமாக எழுதியிருப்பதை இந்நிருபத்தில் நீங்கள் காணலாம். எச்சரிப்பின் தொனியோடு கூடிய இந்நிருபத்தில் நடைமுறை வாழ்க்கைக்கான ஆலோசனைகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன.

### வரலாற்றுப் பின்னணி:

யூத மக்கள் நியாயப்பிரமாணத்திற்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்து வந்தார்கள். பழைய ஏற்பாட்டில் முதல் ஐந்து புத்தகங்களும் ‘நியாயப்பிரமாணத்தின் புத்தகம்’ என்று அழைக்கப்படுகிறது. நியாயப் பிரமாணப் புத்தகத்தில் மத, சமூக, அரசியல் சட்ட திட்டங்கள் மிகவும் தெளிவாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. யூத மக்கள் நியாயப்பிரமாணத்தின் படி வாழ்வதில் மிகுந்த வைராக்கியம் கொண்டவர்கள்.பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தேவன், தமது மக்களுக்கு நியாயப்பிரமாணக் கட்டளைகளையும், வாக்குத்தத்தங்களையும் கொடுத்திருந்தார். ஆனால் நியாயப் பிரமாணத்தை முற்றிலும் ஒருவராலும் கடைப்பிடிக்க முடியாததால் அது ஒரு நிறைவான அமைப்பாக இருக்க முடியவில்லை.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த உலகிற்கு வந்த போது நியாயப்பிரமாணத்தின் குறைவுகளை நிறைவாக்கினார். கட்டளைகளுக்கு கீழ்ப்படிய வேண்டிய அவசியத்தை உணர்ந்தும், கீழ்ப்படிய முடியாது தவிக்கும் மனிதனை கிருபை திருத்துகிறது, தாங்குகிறது. இரட்சிப்பை பொறுத்தவரையில் புதிய ஏற்பாட்டின் போதனை ‘நம்முடைய கிரியையினால் அல்ல தேவனுடைய கிருபையினாலே இரட்சிக்கப்படுகிறோம்’ என்பதாகும். இந்தப் போதனை தான் ‘நீதிமானாக்கப்படுதல்’ என்று அழைக்கப்படுகிறது. முக்கியமாக ரோமர், கலாத்தியர் என்ற இரு நிருபங்களில் இந்த உண்மை தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது.

**இப்புத்தகத்தின் செய்தி:**

ஆதித்திருச்சபைக் காலத்தில் யூத மக்கள் விசுவாசிகளாயினர். புற ஜாதியார் (புறவினத்தார் அல்லது யூதரல்லாத மக்கள்) பலரும் விசுவாசிகளானார்கள். யூதர்கள் நியாயப்பிரமாண சட்டதிட்டங்களைக் கைக்கொண்டு வந்தார்கள். உதாரணமாக யூத ஆண் மக்கள் விருத்தசேதனம் செய்யப்பட்டு இருந்தார்கள். இரட்சிக்கப்பட்ட புறஜாதியாரும் விருத்தசேதனம் செய்யப்படுவது அவசியம் என்று சில யூத விசுவாசிகள் கட்டாயப் படுத்தினார்கள். விருத்தசேதனம் செய்யப்படாத புறஜாதியாரான விசுவாசிகளை சற்று தாழ்வாகக் கருதினார்கள். கலாத்தியாவில் அப்போஸ்தலனாகிய பவுல் திருச்சபை நாட்டிய சில காலத்திற்குப் பின் இப்படிப்பட்ட போதனைகள் புகுந்ததால் விசுவாசிகள் பலர் பின் மாறிப்போயினர். இதைத் திருத்தத் தான் பவுல் அப்போஸ்தலன் இந்நிருபத்தை எழுதினார். தவறான உபதேசத்தைப் போதித்தவர்கள், பவுல் அப்போஸ்தலன் உண்மையான அப்போஸ்தலன் அல்ல என்று கூறியதால், இந்நிருபத்தில் பவுல் தான் பெற்றிருந்த அப்போஸ்தல ஊழிய அழைப்பிற்கான சான்றுகளை எடுத்துக் காட்டுகிறார். இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள் நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்பட்டவர்கள்அல்ல. கிருபையினால் விடுதலையாக்கப்பட்டவர்கள் என்று பவுல் விளக்குகிறார்.

ஆனால் ஆண்டவர் கொடுத்திருக்கும் இந்த விடுதலையை சரியான விதத்தில் கையாள வேண்டும் என்றும் பவுல் இந்நிருபத்தில் விளக்கி உள்ளார். நடைமுறை கிறிஸ்தவ நல்வாழ்விற்கான ஆலோசனைகளை இந்த நிருபத்தின் கடைசியில் அவர் எழுதி இருக்கிறார். விருத்தசேதனம் என்பது பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தேவன் ஆபிரகாமோடு செய்த உடன்படிக்கையில் உள்ள ஒரு அடையாளச் செயலாகும். இதன்படி யூத ஆண்மக்கள் தங்கள் ஆண் உறுப்பின் நுனித்தோலை வெட்டி விடுவார்கள். இன்றும் அப்படிப் பட்ட பழக்கம் முஸ்லீம்களுக்கு உண்டு என்பதை நாம் அறிவோம். புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு அவரை, விசுவாசிப்பவர்களுக்கு இப்படிப் பட்ட நிபந்தனைகள் தேவையில்லை என்பதே இந்நிருபத்தின் போதனையாகும்.

**எழுதப்பட்ட காலம் :**

கி.பி.53. எபேசு பட்டணத்திலிருந்து பவுல் இந்நிருபத்தை எழுதியிருக்கலாம் என்று தெரிகிறது.

**முக்கியச் செய்தி :**

விசுவாசத்தினால் நீதிமானாக்கப் படுகிறோம். கிருபையினால் நியாயப் பிரமாணத்தின் கட்டுகளிலிருந்து விடுதலையாக்கப்பட்டு இருக்கிறோம். கிருபையைப் பெற்றுக்கொண்டவர்கள் நியாயப்பிரமாணத்தின் அடிமைத் தனத்திற்குள் இருக்கத் தேவையில்லை. ஆண்டவர் கொடுத்திருக்கும் விடுதலை வாழ்வை சரியான முறையில் வாழ வேண்டும்.

**முக்கிய அதிகாரம் :** 3, 5

**முக்கிய வசனங்கள் :**

*கலாத்தியர் 2 : 20, 21, 5 : 1*

### முக்கிய வார்த்தைகள்:

நியாயப்பிரமாணம், வாக்குத்தத்தம், விசுவாசம், நீதிமான், சுவிசேஷம், கிருபை, சிலுவை.

### பகுப்பாய்வு :

அதிகாரம் 1:1 - 2:21 அப்போஸ்தல ஊழியத்தைப் பற்றிய விளக்கம்.

அதிகாரம் 3:1 - 4:31 விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுவதைப் பற்றிய விளக்கம்.

அதிகாரம் 5:1 - 6:18 விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டவர்கள் வாழவேண்டிய விதம்.

### இப்புத்தகத்தை வாசிக்கும் முறை:

இந்த நிருபத்தில் 6 அதிகாரங்கள் (149 வசனங்கள்) தமிழ் வேதாகமத்தில் சுமார் 7 பக்கங்களில் அடங்கியுள்ளன. இந்நிருபம் முழுவதையும் தொடர்ச்சியாக வாய்விட்டு வாசித்து முடிக்க 25 நிமிடங்கள் மட்டுமே ஆகிறது. இந்த நிருபமும் ரோமருக்கு எழுதிய நிருபமும் பல இடங்களில் ஒன்று போல காணப்படுகின்றன.

### அதிகாரங்களின் உள்ளடக்கம்:

1. முன்னுரையும் வாழ்த்தும், பவுலின் அப்போஸ்தல ஊழியம்.
2. எருசலேமில் அப்போஸ்தலருடன் பவுல்(அப்போஸ்தலர் 15 ஆம் அதிகாரத்தை பார்க்கவும்) அந்தியோகியாவில் பவுல் பேதுருவைக் கண்டித்து திருத்துதல், விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதலின் சத்தியம்.
3. பவுல் கலாத்தியரைக் கடிந்து கொள்ளுதல், விசுவாசிகள் ஆபிரகாமின் பிள்ளைகள், நியாயப் பிரமாணமும் வாக்குத்தத்தமும், நியாயப்பிரமாணத்தின் நோக்கம்.
4. தேவனுடைய பிள்ளைகளுக்குக் கிடைக்கும் விடுதலை, கலாத்தியரைக் குறித்து பவுல் கொண்டிருந்த கரிசனை, பழைய ஏற்பாட்டிலிருந்து உதாரணம்: ஈசாக்கு, இஸ்மவேல்.
5. விடுதலை அனுபவிக்கும் விசுவாசிகளுக்கு விருத்தசேதனம் தேவையில்லை. ஆவியும், மாம்சமும் போராடும் அனுபவம்.
6. நடைமுறை வாழ்க்கைக்கான ஆலோசனைகள், பவுலின் தனிப்பட்ட அனுபவம், முடிவான வார்த்தைகள் .





Cell: 89030 11350, E-mail : selwynde@gmail.com

புதிய ஏற்பாட்டு புத்தக வரிசைகளில் இந்நிருபம் 10 ஆவது புத்தகமாகும்.

### யாருக்கு எழுதியது?

மத்தியதரைக்கடலுக்கு வட பகுதியிலிருந்த ஆசிய நாட்டில் எபேசு பட்டணம் ஒரு முக்கியமான துறைமுகப் பட்டணமாக இருந்தது. பவுல் அப்போஸ்தலன் தனது இரண்டாவது மிஷனெரிப் பயணத்தில் எபேசு பட்டணத்தில் மூன்று ஆண்டுகள் தங்கி ஊழியம் செய்து சபையை நிறுவினார். அப்போஸ்தலர் 19 ஆம் அதிகாரத்தைப் படித்துப் பாருங்கள். எபேசு பட்டணத்து மூப்பர்களுக்கு அவர் கொடுத்த ஆலோசனைகளை அப்போஸ்தலர் 20 ஆம் அதிகாரத்தில் படிக்கிறோம்.

எபேசு பட்டணத்தில் ' தியானாள்' என்ற தேவதைக்கு விக்கிரக ஆராதனை வணக்கம் நடைபெற்று வந்தது. இங்கு வாழ்ந்த யூதரல்லாத மனிதர்கள் சுவிசேஷத்தைக் கேட்டு விசுவாசிகளாக மாறினார்கள். ஆதிகாலத் திருச்சபையில் எபேசு சபை மிகவும் முக்கியமான சபையாக இருந்தது.
அப்போஸ்தலனாகிய யோவான் தனது வயோதிக காலத்தில் எபேசு பட்டணத்தில் வாழ்ந்தார். இப்பொழுதுள்ள துருக்கி நாட்டில் தான் அன்றைய காலத்தில் எபேசு பட்டணம் அமைந்திருந்தது. எபேசு சபைக்கு தேவன் கொடுத்த செய்தியைப் பற்றி வெளிப்படுத்தின விசேஷம் 2 ஆம் அதிகாரத்தில் பார்க்கிறோம்.



### இப்புத்தகத்தின் செய்தி:

பவுல் முக்கியமாக திருச்சபையைப் பற்றி இந்நிருபத்தில் எழுதி இருக்கிறார். கிறிஸ்தவ திருச்சபை, கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபை என்பதை விளக்கியிருக்கிறார். கொலோசெயர் நிருபத்திற்கும், எபேசியர் நிருபத்திற்கும் அநேக பொருத்தங்கள் உண்டு. இந்த இரண்டு நிருபங்களிலும் 55 வசனங்கள் ஒன்று போல் காணப்படுகின்றன. கொலோசெயர் நிருபத்தில் சரீரமாகிய திருச்சபைக்கு கிறிஸ்து தலையாயிருக்கிறார் என்ற பொருளில் எழுதியிருக்கிறார். இந்நிருபத்தில் மூன்று அதிகாரங்களில் உபதேசம், 4,5,6 ஆம் அதிகாரங்களில் ஆவிக்குரிய வாழ்க்கைக்கான ஆலோசனைகளும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

### எப்பொழுது எழுதினார்?

ரோம் பட்டணத்து சிறையில் பவுல் இருக்கும் போது இந்நிருபத்தை எழுதினார். எபேசியர், கொலோசெயர், பிலேமோன் இம்மூன்று நிருபங்களும் ஒரே கால கட்டத்தில் எழுதப்பட்டன. இந்த நிருபம் ஒரு சுற்றுக் கடிதமாக அனுப்பப்பட்டது. பலருக்கும் கொடுத்து வாசிப்பதற்காக சுற்றுக் கடிதங்கள் எழுதப்பட்டன. தீகிக்கு என்பவர் மூலமாக இந்நிருபம் கொடுத்து அனுப்பப்பட்டது என்று எழுதப்பட்டிருக்கிறது. எபேசியர் 6:21,22 வசனங்களைப் பார்க்கவும். இந்நிருபம் கி.பி. 60.ல் எழுதப்பட்டது.



**இப்புத்தகத்தைப் பற்றி:**

இந்நிருபம் மலைகளுக்கிடையில் ஒரு உயர்ந்த சிகரம் போல் காணப்படுகிறது. உன்னதமான சத்தியங்களை எடுத்துரைக்கிறது. கிறிஸ்துவுக்குள் எல்லாம் 'ஒன்று' என்பதே இந்நிருபத்தின் மையச் செய்தியாகும்.'கிறிஸ்துவுக்குள்' என்ற கருத்து அடிக்கடி இந்நிருபத்தில் வலியுறுத்தப்படுகிறது. ஒருமைப்பாடு, யூதரல்லாதவர்க்கு ஆண்டவர் கொடுத்திருக்கும் புதிய தகுதி போன்ற சத்தியங்கள் தெளிவாக விளக்கப்பட்டிருக்கின்றன.பொதுவாக மற்ற நிருபங்களில் வருவதைப் போல் பலருடைய பெயர்களும் இடம் பெறவில்லை.

பவுல் அப்போஸ்தலனுடைய இரண்டு ஜெபங்கள் இந்நிருபத்தில் எழுதப்பட்டிருக்கின்றன. ஆவிக்குரிய போராட்டத்தின் தெளிவான விளக்கம் 6 ஆம் அதிகாரத்தில் எழுதப் பட்டிருக்கிறது.

**முக்கிய அதிகாரம்: 4**

**முக்கிய வசனங்கள்:**

2:8 -10, 4: 1-3

**பகுப்பாய்வு:**

கிறிஸ்துவுக்குள் கிறிஸ்தவனுடைய நிலை 1 - 3

கிறிஸ்தவனுடைய நடத்தை 4 - 6



**முக்கிய வார்த்தை:**

கிறிஸ்துவுக்குள் சபை, இந்நிருபத்தில் 6 அதிகாரங்கள் (155 வசனங்கள்) தமிழ் வேதாகமத்தில் 6 பக்கங்களுக்கும் சற்று அதிகமாக காணப்படுகின்றன. 20 நிமிடங்களில் இந்நிருபம் முழுவதையும் தொடர்ச்சியாக வாய் விட்டு ஒரு முறை வாசித்து விடலாம்.

**அதிகாரங்களின் உள்ளடக்கம்:**

1. வாழ்த்து, கிறிஸ்துவுக்குள் ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள், பவுலின் விண்ணப்பம்.
2. கிறிஸ்துவுக்குள் உயிர்ப்பிக்கப்படுதல், கிறிஸ்துவுக்குள் ஒன்றாக்கப்படுதல்.
3. புறஜாதியாருக்கு பவுலின் ஊழியம். தேவனுடைய இரகசியத்தின் வெளிப்பாடு. பவுலின் விண்ணப்பம்.
4. கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் ஒருமைப்பாடு, கிறிஸ்துவுக்குள்ளான புதிய வாழ்க்கை
5. ஒளியின் பிள்ளைகளாக வாழ்தல் . மனைவிகளுக்கும் கணவர்களுக்கும் அறிவுரை.
6. பிள்ளைகளுக்கும், பெற்றோருக்கும் அறிவுரை. வேலைக்காரருக்கும் எஜமான்களுக்கும் அறிவுரை. ஆவிக்குரிய போராட்டமும் தேவனுடைய சர்வாயுத வர்க்கமும், முடிவுரை.



புதிய ஏற்பாட்டில் நிருபங்கள் என்ற பிரிவில் உள்ள இந்த நிருபத்தை அப்போஸ்தலனாகிய பவுல் ரோம் சிறையிலிருக்கும் போது எழுதினார். சுவிசேஷத்திற்காக பவுல் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். புதிய ஏற்பாட்டு புத்தக வரிசையில் இது 11ஆவது புத்தகமாகும். 4 அதிகாரங்களில் 104 வசனங்கள் உள்ளன.

**வரலாற்றுப் பின்னணி:**

மக்கெதோனியா நாட்டு அரசனும் மகா அலெக்சாண்டரின் தந்தையுமான பிலிப்பு இந்த நகரை கட்டியதால் இது அவருடைய பெயராலேயே பிலிப்பி பட்டணம் என்று அழைக்கப் பட்டது. கி.மு.168 ல் இப்பட்டணம் ரோமரின் ஆதிக்கத்துக்குட்பட்டது. கி.பி. 42 க்குப் பின் நடைபெற்ற சண்டைக்குப் பின் பிலிப்பி, ரோமர் குடியேறிய பட்டணமாக மாறியது. பிலிப்பி, மக்கெதோனியா தேசத்தின் நாடுகளில் முக்கியமான பட்டணங்களுள் ஒன்றாகும். அப்போஸ்தலருடைய நடபடிகள் 16:12 ஐ வாசிக்கவும்.

பவுல் தனது இரண்டாவது மிஷனெரிப் பயணத்தின் போது இப்பட்டணத்திற்கு வந்து ஊழியம் செய்தார். பிலிப்பி பட்டணம் ஐரோப்பா கண்டத்திற்கு ஒரு வாசல் போல் அமைந்திருந்தது. இங்கிருந்தே சுவிசேஷ செய்தி ஐரோப்பா கண்டத்திற்குப் பரவியது. இப்பட்டணத்தைச் சேர்ந்த லீதியாள் என்ற பெண்ணும், சிறைக்காவலனும் மனந்திரும்பிய வரலாற்றை அப்போஸ்தலர் 16 ஆம் அதிகாரத்தில் படித்துப்பாருங்கள். பவுல் இப்பட்டணத்தில் சுவிசேஷத்தை அறிவித்த போது சிறையிலடைக்கப் பட்டார்.

**முக்கிய வசனங்கள்:** பிலிப்பியர் 4 : 2, 4

**முக்கிய பகுதிகள்:** 2 : 5-11, 4 : 4-9

பிலிப்பி பட்டணத்து விசுவாசிகளை பவுல் அதிகமாக நேசித்தார். இங்குள்ள விசுவாசிகளில் பெரும்பான்மையான மக்கள் புறஜாதிகளாக (யூதரல்லாதவர்களாக) இருந்தனர். பவுலின் மூன்றாவது மிஷனெரிப் பயணத்தின் போது ஒரு வேளை அவர் பிலிப்பி பட்டணத்து விசுவாசிகளைச் சந்தித்திருக்கலாம். பிலிப்பி பட்டணத்து விசுவாசிகள் அப்போஸ்தலனாகிய பவுலை அதிகமாக நேசித்தனர். இருமுறை அவர்கள் பவுலுக்கு பொருளுதவி அளித்திருக்கின்றனர்.

அப்போது சிறையிலிருக்கும் பவுலுக்கு எப்பாப்பிரோதீத்து என்ற ஊழியரின் மூலம் மறுபடியும் உதவிப்பணம் அனுப்புகின்றனர். ரோம் பட்டணத்திற்கு வந்த போது எப்பாப்பிரோதீத்துவிற்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டது. அவர் சுகம் பெற்று பிலிப்பி பட்டணம் திரும்பும் போது அவரிடம் பவுல் இந்த நிருபத்தை நன்றிக் கடிதமாக கொடுத்தனுப்புகிறார்.

**முக்கியச் செய்தி :**

சந்தோஷம், கிறிஸ்தவ ஒற்றுமை.

**இந்த நிருபத்தை ஏன் எழுதினார்?**

பவுல் பிலிப்பி பட்டணத்து விசுவாசிகள் தனக்கு செய்த நன்மைக்கு நன்றி செலுத்தும் வகையில் இந்நிருபத்தை எழுதினார்.(பிலிப்பியர்4:6-18) பிலிப்பி பட்டணத்து விசுவாசிகளுக்கிடையே இருந்த பிரிவினைகள், தவறான சிந்தைகளைச் சரிப்படுத்துவதற்காக ஒற்றுமை, ஒரே மனம், சந்தோஷம் என்ற தலைப்புகளில் சில சத்தியங்களை விளக்குகிறார். கிறிஸ்து இயேசுவிற்காகத் துன்பம் அனுபவித்த விசுவாசிகளை உற்சாகமூட்டும் வகையில் சில வார்த்தைகளை எழுதியிருக்கிறார். பிலிப்பியர் 1:7,13,16 வசனங்களைப் படிக்கும் போது சிறையிலிருந்து பவுல் இந்த நிருபத்தை எழுதினார் என்பது தெளிவாகும்.

## பகுப்பாய்வு:

அதிகாரம்

1. கிறிஸ்து எனக்கு ஜீவன் 1 : 21
2. கிறிஸ்து எனக்கு சிந்தை 2 : 5
3. கிறிஸ்து என் பந்தயப் பொருள் 3 : 14
4. கிறிஸ்து என் பெலன் 4 : 13

## ஒவ்வொரு அதிகாரத்தின் உள்ளடக்கம்:

1. வாழ்த்துரை, நன்றியும் ஜெபமும் , பவுலின் சுவிசேஷ ஊழியம்.
2. கிறிஸ்துவின் சிந்தை, கீழ்ப்படிதலும் பரிசுத்தமும், தீமோத்தேயுவும், எப்பாப்பிரோதீத்துவும்.
3. எச்சரிப்பு, பவுலின் மாதிரி, அறிவுரைகள்.
4. விசுவாசிகளுக்கான அறிவுரைகள் பிலிப்பியருக்கு நன்றியுரை, வாழ்த்துரை

## இப்புத்தகத்தை வாசிக்கும் முறை:

பரிசுத்த வேதாகமத்தில் இப்புத்தகம் 50 ஆவது புத்தகமாக இடம் பெற்றுள்ளது. 4 அதிகாரங்கள் 104 வசனங்கள் தமிழ் புதிய ஏற்பாட்டில் 4 $^{1/2}$ பக்கங்களில் 15 நிமிடங்களுக்குள் இப்புத்தகத்தை தொடர்ச்சியாக ஒரே தடவையில் வாசித்து முடித்து விடலாம். ஒவ்வொரு அதிகாரத்தையும் கருத்துடன் படித்துப் பாருங்கள்.

**பங்குள்ளவர்கள் 5**

1 : 7 - பங்குள்ளவர்களானதால்
2 : 22 - என்னேடுகூட
2 : 25 - உடன் வேலையாள்
உடன் சேவகனும்
3 : 17 - என்னோடுகூட
4 : 3 - என் உத்தம கூட்டாளியே

## அடிக்கடி வரும் வார்த்தைகள்

| | | |
|---|---|---|
| சுவிசேஷம் | 9 முறை | |
| சந்தோஷம் | 14 | |
| மகிழ்ச்சி | 4 | |
| கட்டுகள் | 5 | |
| இயேசு கிறிஸ்து | 9 | 41 முறை |
| கிறிஸ்து இயேசு | 11 | |
| கிறிஸ்து | 19 | |
| இயேசு | 2 | |
| அன்பு | 6 | |
| விசுவாசம் | 6 | |
| மரணம் | 6 | |
| நாமம் | 4 | |
| எண்ணங்கள் | 16 | 33 |
| சிந்தை | 9 | |
| **மனது** | **8** | |

1 : 12 மனதார
1 : 15 நல்மனதினாலும்
1 : 16 சுத்த மனதோடே
2 : 3 மனத்தாழ்மை
2 : 19 மனத்தேறுதல்
2 : 20 மனதுள்ளவன்
4 : 10 மனமலர்ந்த
4 : 11 மனரம்மியம்

### 4 அதிகாரங்களில் சந்தோஷம்

1. சுவிசேஷத்தினால் வரும் பாடுகளில் சந்தோஷம்.
2. ஒருமனதோடு ஊழியம் செய்வதில் சந்தோஷம்.
3. இயேசுவை விசுவாசித்துப் பின் செல்வதில் சந்தோஷம்.
4. கொடுப்பதில் சந்தோஷம்



Cell: 89030 11350, E-mail : selwynde@gmail.com

அப்போஸ்தலனாகிய பவுல் என்பவர் எழுதிய இந்தக் கடிதம் புதிய ஏற்பாட்டுப் புத்தக வரிசையில் 12 ஆவது புத்தகமாக இடம் பெற்றிருக்கிறது. பவுல் எழுதின 13 நிருபங்களில் இந்நிருபம் சபைக்கு எழுதப்பட்ட ஓர் நிருபமாகும்.

**பின்னணி :**

இந்த நிருபத்தை அப்போஸ்தலனாகிய பவுல் ரோம் பட்டணத்திலுள்ள சிறைச்சாலையிலிருந்து எழுதினார். கொலோசெயர், எபேசியர், பிலேமோன் ஆகிய நிருபங்கள் ஏறக்குறைய ஒரே கால கட்டத்தில் எழுதப்பட்டன. (சுமார் கி.பி. 61) அப்போஸ்தலனாகிய பவுல் கொலோசெயர் நிருபத்தை எழுதி தீகிக்கு என்பவருடைய கையில் கொடுத்து அனுப்பினார். ஒநேசிமுவும் உடன் சென்றார்.(கொலோசெயர் 4: 7,9) கொலோசெ பட்டணத்தில் திருச்சபை நாட்டப்படுவதற்கு எப்பாப்பிரா என்பவர் காரணமாக இருந்தார். (கொலோசெயர்1:7,8,4:12) அப்போஸ்தலனாகிய பவுல் கொலோசெ பட்டணத்து விசுவாசிகளைப் பார்த்ததில்லை என்பது கவனிக்க வேண்டிய ஓர் உண்மை ஆகும். உத்தமமான, உண்மை ஊழியனாக, எப்பாப்பிரா திருச்சபை செய்திகளை, நிலைமைகளை பவுலுக்கு எடுத்துக் கூறிய பின் பவுல் இந்நிருபத்தை எழுதினார். கொலோசெ பட்டணம் சிறிய ஆசியா என்று சொல்லப்படும் பகுதியிலிருந்த எபேசு பட்டணத்திற்கு கிழக்கே சுமார் 150 கி.மீ துாரத்தில் இருந்தது. இதன் அருகே லவோதிக்கேயா, எராப்போலி பட்டணங்கள் இருந்தன.

கொலோசெயர் நிருபம், கொலோசெ சபையில் நிலவி வந்த தவறான உபதேசத்திற்கு மறுப்புத் தெரிவித்து சரியான உபதேசத்தை விளக்கும் நிருபம் ஆகும். ஆதித்திருச்சபைக்கு வந்த பல முக்கியப் பிரச்சனைகளில், மாறுபாடான உபதேசம் முக்கியமானதாகும். பல்வேறு விதமான தவறான உபதேசங்கள் அந்த நாட்களில் புகுத்தப்பட்டன. கொலோசெ பட்டணத்தில் இருந்த திருச்சபை எதிர் நோக்கிய தவறான உபதேசங்களின் முக்கிய அம்சங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1.கடவுள் முற்றிலும் பரிசுத்தர். பூரணர். மனிதன் பாவம் நிறைந்தவன். மனித சரீரம் பாவமானது. எனவே இயேசு கிறிஸ்து மனித சரீரத்தில் வந்திருக்க முடியாது. இது இயேசு கிறிஸ்துவின் தெய்வீகத்தைக் குறித்த மாறுபாடான தவறான தத்துவமாகும்.

2.தேவதுாதர்களை ஆராதித்தல்.

3.சரீரத்தை ஒடுக்குதல் மற்றும் பலவிதமான சடங்காச்சாரங்களின் அவசியம். (இரண்டாம் அதிகாரத்தை கவனமாக வாசிக்கவும்.)

**முக்கியச் செய்தி:**

இயேசு கிறிஸ்துவே பிரதானமானவர், மேலானவர், முக்கியமானவர், சிறந்தவர், போதுமானவர். இயேசு கிறிஸ்துவின் தெய்வீகத்துவமும் மகத்துவமும் இந்நிருபத்தில் விளக்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்து சரீரமாகிய சபைக்குத் தலைவர். எபேசியர் நிருபத்தில் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையைப் பற்றி எழுதப்பட்டுள்ளது.

**முக்கிய வசனம்:** கொலோசெயர் 2: 9,10



**பகுப்பாய்வு:**

அதிகாரம் 1,2 இயேசு கிறிஸ்துவை மையமாகக் கொண்ட கிறிஸ்தவ உபதேசம்.

அதிகாரம் 3,4 இயேசு கிறிஸ்துவை மையமாகக் கொண்ட கிறிஸ்தவ வாழ்க்கை.

**அதிகாரங்களின் உள்ளடக்கம்:**

1. வாழ்த்து, நன்றி, விண்ணப்பம், இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்பாடு, பவுலின் ஊழியம்.
2. பவுலின் கரிசனை, ஆலோசனை.
3. ஆவிக்குரிய வாழ்க்கை, சபை வாழ்க்கை, குடும்ப வாழ்க்கைக்கான ஆலோசனைகள்.
4. முக்கிய கட்டளைகள், வாழ்த்துக்கள்.

**இப்புத்தகத்தை வாசிக்கும் முறை:**

இந்த நிருபத்தில் 4 அதிகாரங்கள் (95 வசனங்கள்) தமிழ் வேதாகமத்தில் 4 பக்கங்களுக்கு சற்று அதிகமாகக் காணப்படுகிறது. முதல் வசனம் தொடங்கி அந்த நிருபம் முழுவதும் தொடர்ச்சியாக வாசித்து முடிக்க 15 நிமிடங்கள் ஆகிறது. இப்புத்தகத்தின் ஒவ்வொரு அதிகாரத்தையும் படிப்பதற்கு குறைந்தது 30 நிமிடங்களாவது ஒதுக்கி பகுத்துப் பிரித்துப் படித்தால் மிகுந்த உதவியாக இருக்கும். அப்படிப் படிக்க விரும்பினால் எங்களுக்கு எழுதுங்கள். அப்படிப் படிப்பதற்கான குறிப்புகளை அனுப்புகிறோம். இந்த நிருபத்தை வாசிக்கும் போது பிலேமோன் நிருபத்தையும் வாசிப்பது அவசியம்.








Cell: 89030 11350, E-mail : selwynde@gmail.com

அப்போஸ்தலனாகிய பவுல், இயேசு கிறிஸ்துவைப் பற்றிய சுவிசேஷத்தை அறிவித்து, விசுவாசிகளை சீஷராக்கி, கிறிஸ்தவ திருச்சபைகளை நாட்டினார். அவர் எழுதிய 13 நிருபங்களில் 9 நிருபங்கள் கிறிஸ்தவ திருச்சபைக்கு எழுதப்பட்ட நிருபங்கள் ஆகும். அவைகளில் தெசலோனிக்கேயருக்கு எழுதப்பட்ட முதலாம் நிருபம், முதலாவதாக எழுதப்பட்ட நிருபமாகும். புதிய ஏற்பாட்டுப் புத்தக வரிசையில் 13 ஆவது புத்தகமாக இந்நிருபம் இடம் பெற்றிருக்கிறது.

**பின்னணி :**

மக்கெதோனியா என்ற நாட்டில் ரோமரால் ஆட்சி செய்யப்பட்ட பகுதியில் தெசலோனிக்கே பட்டணம் ஒரு முக்கியமான பட்டணமாக இருந்தது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றி அறிவிப்பதற்காக அப்போஸ்தலனாகிய பவுல் பல ஆயிரக்கணக்கான மைல்கள் பயணம் செய்து பட்டணங்களிலும், நாடுகளிலும் சுவிசேஷ ஊழியம் செய்தார். இப்படி அவர் செய்த பிரயாணங்கள் ‘மிஷனெரிப் பயணங்கள்’ என்று அழைக்கப்படுகின்றன.

பவுல் தமது இரண்டாவது மிஷனெரிப் பயணத்தில் இருந்த போது ‘மக்கெதோனியா தேசத்து மனிதன் ஒருவன் வந்து எங்களுக்கு உதவி செய்யும்’ என்று வேண்டிக் கொண்டதாக ஒரு தரிசனத்தைக் கண்டார். அதையடுத்து அப்பகுதியில் உள்ள பிலிப்பி பட்டணத்திற்குச் சென்றார். அங்கிருந்து தெசலோனிக்கே பட்டணத்திற்குச் சென்றார்.

தெசலோனிக்கே பட்டணத்தில் பெரும்பான்மையினர் யூதரல்லாதவர்கள். (புறஜாதியார்) பவுல் அடிகளாரின் ஊழியத்தின் காரணமாக அநேக புறவினத்தார்களும் யூதர்களும் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு விசுவாசிகளாயினர். அப்போஸ்தலனாகிய பவுலும் அவரைச் சேர்ந்தவர்களும் மூன்று வார காலம் இந்தப் பட்டணத்தில் தங்கி ஊழியம் செய்தனர். சுவிசேஷத்தின் நிமித்தம் இப்பட்டணத்தில் பெரிய கலவரம் ஏற்பட்டது. எனவே அவர்கள் பெரோயா பட்டணத்திற்கு கடந்து சென்றனர். இந்த நிகழ்ச்சிகள் அப்போஸ்தலருடைய நடபடிகள் 17 ஆம் அதிகாரத்தில் கொடுக்கப் பட்டிருக்கின்றன. தயவு செய்து அந்த அதிகாரத்தை எடுத்துப் படித்துப் பாருங்கள்.

பெரோயா பட்டணத்திலிருந்து தொடர்ந்து பிரயாணப்பட்டு பவுல் கொரிந்து பட்டணத்திற்குச் சென்றார். அங்கிருந்து தீமோத்தேயு என்ற உடன் ஊழியரை தெசலோனிக்கே பட்டணத்திற்கு அனுப்பினார். Iதெசலோனிக்கேயர் 3 ஆம் அதிகாரத்தைப் படிக்கவும். தீமோத்தேயு தெசலோனிக்கே பட்டணத்து விசுவாசிகளைச் சந்தித்த பின் அந்தப் பட்டணத்து விசுவாசிகளின் நிலையை அப்போஸ்தலனாகிய பவுலிடம் கூறினார். அதையடுத்து பவுல் இந்த நிருபத்தை எழுதினார்.



தெசலோனிக்கே பட்டணத்து விசுவாசிகள் சுவிசேஷத்தை ஏற்றுக் கொண்டு சிறந்த விசுவாசிகளாக வாழ்ந்தனர். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதின் நிமித்தம் அவர்கள் துன்புறுத்தப் பட்டனர். எனவே அவர்களை உற்சாகப்படுத்தவும் ஆறுதல்படுத்தவும் பவுல் இந்த நிருபத்தை எழுதினார். இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப் பற்றிய உபதேசத்தை பவுல் இந்த நிருபத்தில் விளக்கி இருக்கிறார். பரிசுத்த வாழ்க்கைக்கான பல அறிவுரைகளும், விழிப்புடன் வாழ்வதற்கான ஆலோசனைகளும் இந்த நிருபத்தில் காணப்படுகின்றன. அப்போஸ்தலனாகிய பவுல் இந்தப் பட்டணத்து விசுவாசிகள் மேல் கொண்டிருந்த பாசமும், அவர் எந்த வகையில் ஊழியம் செய்தார் என்பது பற்றிய கருத்துக்களும் இந்த நிருபத்தில் எழுதப்பட்டுள்ளன.

**முக்கியச் செய்தி :**

**இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை** : அவருடைய வருகைக்காக மக்கள் ஆயத்தப்பட வேண்டும். காத்திருக்க வேண்டும்.

**முக்கிய அதிகாரம்: 2, 4**

**முக்கிய வார்த்தைகள்:**

பரிசுத்தம், விசுவாசம்

**முக்கிய வசனம்:**

I தெசலோனிக்கேயர்1:10



**பகுப்பாய்வு:**

1. பவுலின் விண்ணப்பமும், தெசலோனிக்கே பட்டணத்து விசுவாசிகளின் விசுவாசமும்.
2. பவுல் அப்போஸ்தலனின் ஊழியம்.
3. பவுலின் கரிசனையும், தெசலோனிக்கே பட்டணத்து விசுவாசிகளின் விசுவாசமும்.
4. பரிசுத்த வாழ்க்கைக்கான அறிவுரைகள், இயேசு கிறிஸ்துவின் இரண்டாவது வருகை கொடுக்கும் ஆறுதலும் நம்பிக்கையும்.
5. கர்த்தருடைய நாளைப் பற்றிய விளக்கம். பரிசுத்த வாழ்க்கைக்கான போதனைகள்.

**இப்புத்தகத்தை வாசிக்கும் முறை :**

இந்நிருபத்தில் 5 அதிகாரங்கள் (89 வசனங்கள்) தமிழ் வேதாகமத்தில் 4 பக்கங்களுக்கும் சற்று அதிகமாகக் காணப்படுகின்றன. இந்நிருபம் முழுவதையும் தொடர்ச்சியாக 15 நிமிடங்களுக்குள் வாய்விட்டு வாசித்து முடித்து விடலாம். இந்நிருபத்தில் ஒவ்வொரு அதிகாரத்தையும் படிப்பதற்கு குறைந்தது 30 நிமிடங்களாவது ஒதுக்குங்கள். IIதெசலோனிக்கேயர் நிருபத்தையும் சேர்த்து வாசிப்பது நல்லது.



அப்போஸ்தலனாகிய பவுல் தெசலோனிக்கேயருக்கு முதலாம் நிருபத்தை எழுதின ஒரு சில மாதங்களுக்குள்ளே இந்த இரண்டாம் நிருபத்தை எழுதினார்.
புதிய ஏற்பாட்டுப் புத்தக வரிசையில் 14 ஆவது புத்தகமாக இந்நிருபம் இடம் பெற்றிருக்கிறது.

**பின்னணி :**

தெசலோனிக்கே பட்டணத்து விசுவாசிகள், அவர்கள் கொண்டிருந்த விசுவாசத்தின் காரணமாக துன்புறுத்தப்பட்டனர். பவுல் அப்போஸ்தலன் முதலாம் நிருபத்தில் தமது பரிசுத்தவான்களை எடுத்துக் கொள்வதற்காக இயேசு கிறிஸ்து வருவதைப் பற்றி எழுதியிருந்தார். யாரோ ஒருவர் பவுல் எழுதினார் என்ற ஒரு பொய்யான நிருபத்தை இச்சபைக்கு அனுப்பி இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப் பற்றி தவறான உபதேசத்தை புகுத்த முற்பட்டனர். இந்தத் தவறான உபதேசத்தின் காரணமாக சில விசுவாசிகள் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை நிறைவேறி விட்டதோ என்று கலங்கினர். மற்றும் சிலர் இயேசு கிறிஸ்து தான் வரப்போகிறாரே!
நாம் ஏன் வேலை செய்ய வேண்டும்'? என்று அசட்டையாக இருந்தனர். இப்படி குழப்பமும், கலக்கமும் அடைந்த விசுவாசிகளை ஆறுதல்படுத்தவும், இரண்டாம் வருகையைப் பற்றி சரியான உபதேசத்தை தெளிவு படுத்தவும் பவுல் இந்நிருபத்தை எழுதினார்.

**முக்கியச் செய்தி:**

இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை, ஆண்டவராகிய இயேசு தமது பரிசுத்தவான்களோடு மத்திய வானத்திலிருந்து பூமிக்கு வருதல்.
இயேசு கிறிஸ்துவின் வருகை வரைக்கும் அவருடைய மக்கள் ஒழுங்காக வேலை செய்து வாழுதல்.

**முக்கிய அதிகாரம் : 2**

**முக்கிய வசனம் :** *2 : 2, 3, 3 : 5, 6*

**முக்கிய வார்த்தை :**

கர்த்தருடைய நாள்

**பகுப்பாய்வு :**

1. துன்புறுத்தப்பட்ட விசுவாசிகளுக்கு ஆறுதலான வார்த்தைகள், துன்புறுத்துகிறவர்களுக்கு தேவனுடைய நியாயத்தீர்ப்பு, அவர்களுக்கான விண்ணப்பம்.
2. கர்த்தருடைய நாள், அக்கிரமக்காரன் (அந்திக் கிறிஸ்து), தெரிந்து கொள்ளப்பட்ட விசுவாசிகளுக்கு தேவனுடைய ஆலோசனை.
3. ஜெபத்திற்கான வேண்டுகோள். வேலை செய்ய அறிவுரை.

**இப்புத்தகத்தை வாசிக்கும் முறை :**

இந்நிருபத்தில் மூன்று அதிகாரங்கள் (47 வசனங்கள்) தமிழ் வேதாகமத்தில் 2 பக்கங்களுக்கும் சற்று அதிகமாக காணப்படுகின்றன. இந்நிருபம் முழுவதையும் 10 நிமிடங்களுக்குள் தொடர்ச்சியாக வாய்விட்டு வாசித்து விடலாம்.



அப்போஸ்தலனாகிய பவுல் எழுதின 13 நிருபங்களை இருவகைகளாகப் பிரிக்கலாம்.

1. சபைகளுக்கு எழுதப்பட்ட நிருபங்கள்
2. தனி நபர்களுக்கு எழுதப்பட்ட நிருபங்கள்.

தீமோத்தேயு, தீத்து, பிலேமோன் என்பவர்களுக்கு பவுல் தனிப்பட்ட விதத்தில் நிருபங்களை எழுதினார்.

தீமோத்தேயுவுக்கு எழுதப்பட்ட இரண்டு நிருபங்களும், தீத்து நிருபமும் 'மேய்ப்பர்களுக்கான நிருபங்கள்' என்று அழைக்கப்படுகின்றன. சபைத் தலைவர்களின் பொறுப்புகளும், தகுதிகளும், சபை ஒழுங்குகளும் இந்நிருபங்களில் எழுதப்பட்டிருக் கின்றன. I தீமோத்தேயு நிருபம் புதிய ஏற்பாட்டுப் புத்தக வரிசையில் 15 ஆவது புத்தகமாக இடம் பெற்றிருக்கிறது.

**யாருக்கு எழுதினார்?**

தீமோத்தேயு பவுலின் ஊழியத்தின் காரணமாக ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர். லீஸ்திரா பட்டணத்திற்கு பவுல் சென்ற போது தீமோத்தேயுவை சந்தித்தார். அப்போஸ்தலர் 16:1-3 வசனங்களை வாசித்துப் பாருங்கள். தீமோத்தேயுவின் தாய் பக்தியுள்ள யூதப் பெண்மணி. தகப்பன் கிரேக்க நாட்டைச் சேர்ந்தவர். தீமோத்தேயு என்றால் "தேவனைக் கனம் பண்ணுதல்" அல்லது "தேவனால் கனம் பண்ணப்படுதல்" என்று பொருளாகும். தீமோத்தேயு பயந்த சுபாவம் உடையவர். கூச்சமும், தயக்கமும் நிறைந்த இவரை பவுல் சிறந்த ஒரு தேவ ஊழியனாகவும் ஆவிக்குரிய தலைவனாகவும் உருவாக்கினார்.

**பின்னணி:**

சுவிசேஷத்திற்காக ரோம் பட்டணத்தில் பவுல் கைது செய்யப்பட்டிருந்தார். 2 ஆண்டுகள் வீட்டுக் காவலில் இருந்த பவுல் விடுதலை செய்யப்பட்டார். அந்த நாட்களில் மக்கெதோனியா நாட்டின் பகுதிகளுக்கு மிஷனெரிப் பயணமாகச் சென்றார். அச்சமயத்தில் தீமோத்தேயுவும் அவருடன் சென்றார். எபேசு பட்டணத்து சபையின் நிலையை அறிந்த பவுல் தீமோத்தேயுவை எபேசு பட்டணத்திலேயே விட்டுச் சென்றார். I தீமோத்தேயு 1:3,4 வசனங்களை வாசித்துப் பாருங்கள்.

**எழுதப்பட்ட காலம் :** கி. பி.62

**இப்புத்தகத்தின் செய்தி:**

எபேசு சபை விசுவாசிகள் பல விதமான தவறான உபதேசங்களினால் அலைக்கழிக்கப்பட்டார்கள். சபையிலே , சபைத்தலைவர்கள் சிலர் தவறான உபதேசங்களைப் போதித்தார்கள். அவர்களுடைய வாழ்க்கை கிறிஸ்தவ உபதேசத்திற்கு ஏற்றது போல் இல்லை. இதை மனதில் கொண்டு தீமோத்தேயு செய்ய வேண்டியவைகளை தெளிவாகக் கட்டளையிட்டு பவுல் இந்நிருபத்தை எழுதினார். தீமோத்தேயுவுக்கு அறிவுரை கொடுத்தும் உற்சாகப் படுத்தியும் பவுல் எழுதியிருப்பதை இந்நிருபத்தில் கவனிக்கலாம்.

**முக்கிய அதிகாரம்: 3**

**முக்கிய வசனம் :**

I தீமோத்தேயு 3 : 15, 4:12



**முக்கிய வார்த்தைகள் :**

தேவ பக்தி - 8 முறை , விசுவாசம் - 25 இவைகள் எங்கெல்லாம் வருகிறதென்று கவனித்துப் பாருங்கள்.

சபைப் பணியில் பல பொறுப்புகளை வகிக்கும் சபைத் தலைவர்களின் தகுதிகள் பற்றி பவுல் அப்போஸ்தலன் இந்நிருபத்தில் எழுதியிருக்கிறார். முக்கியமாக மூன்று வகையான சபைத் தலைவர்களைப் பற்றி நிருபத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

1. கண்காணிப்பாளர் I தீமோத்தேயு 3:1
2. உதவிக்காரர் I தீமோத்தேயு 3: 8,12
3. மூப்பர்கள் I தீமோத்தேயு 5 :17

**கண்காணிப்பாளர்கள்:** ஊழியங்களை மேற்பார்வை செய்யும் பணிகளை செய்து வந்தார்கள். அதிக பொறுப்புகள் நிறைந்த பணி இவர்களுக்கு கொடுக்கப்பட்டிருந்தது.

**உதவிக்காரர்கள்:** பலவிதமான வேலைகளைச் செய்தார்கள். உதவிக்காரர் என்பதைக் குறிக்கும் "டீக்கன் " என்ற வார்த்தைக்கு "பணிவிடைக்காரன் " என்று பொருள்

**மூப்பர்கள்:** ஆவிக்குரிய பொறுப்புகளை ஏற்று நடத்தினார்கள்.

**வாசிக்கும் முறை :**

6 அதிகாரங்களில் 113 வசனங்களைக் கொண்டுள்ள இந்தப் புத்தகம் 5 பக்கங்களுக்கும் சற்று அதிகமாக காணப்படுகிறது. இந்நிருபம் முழுவதையும் ஒரு முறை தொடர்ச்சியாக வாய்விட்டு வாசிப்பதற்கு 20 நிமிடங்கள் தான் ஆகிறது. அந்த விதமாக நீங்கள் வாசித்துப் பாருங்கள்.

**தேவனைத் துதியுங்கள் :**

கீழ்க்காணும் வேத வசனங்களைக் கொண்டு தேவனைத் துதியுங்கள்.

1:1, 11, 12,14, 15, 17

2:5, 6, 3:16,4:10

6:14 -17,

**அதிகாரங்களின் உள்ளடக்கம்:**

1. முன்னுரை, நியாயப்பிரமாணத்தின் நோக்கம், பவுலின் சாட்சி, அறிவுரை.
2. எல்லாருக்கும் ஜெபித்தல், புருஷர், பெண்கள் ஜெபித்தல் பற்றிய அறிவுரை.
3. கண்காணிப்பாளர், பெண்கள், உதவிக்காரர் இவர்களது தகுதிகளும், பொறுப்புகளும்.
4. கள்ளப் போதகர்களின் தவறான உபதேசம், சிறந்த தேவ ஊழியனாய் இருப்பது பற்றிய ஆலோசனைகள்.
5. வெவ்வேறு பிரிவினரைக் குறித்த அறிவுரைகள்.
6. வேலைக்காரருக்கான அறிவுரை, கள்ளப் போதகர்களைப் பற்றிய எச்சரிப்பு, பணம்,பொருள் என்பவைகளைப் பற்றிய உபதேசம், தீமோத்தேயுவுக்கு கொடுக்கப்பட்ட கட்டளை.



அப்போஸ்தலனாகிய பவுல் எழுதிய நிருபங்களில் தீமோத்தேயுவுக்கு எழுதின இரண்டாம் நிருபம் கடைசியாக எழுதப்பட்ட நிருபம் ஆகும். சுவிசேஷத்திற்காக ரோம் பட்டணத்தில் சிறையில் அடைக்கப்பட்டு மரண தண்டனையை எதிர்நோக்கினவராக பவுல் இந்நிருபத்தை எழுதினார். புதிய ஏற்பாட்டு புத்தக வரிசையில் 16 ஆவது புத்தகமாக இந்நிருபம் இடம் பெற்றிருக்கிறது.

**பின்னணி :**

I தீமோத்தேயு நிருபத்தை எழுதின பின்னர் பவுல் கொரிந்து பட்டணத்திற்குச் சென்றார். அங்கிருந்து தீத்துவுடன் கிரேத்தா தீவுக்குச் சென்றார். தீத்துவை கிரேத்தாத் தீவில் விட்டு விட்டு துரோவா பட்டணத்திற்குச் சென்றார். அங்கிருக்கும் போது கைதாக்கப்பட்டு ரோம் பட்டணத்தில் காவலில் வைக்கப்பட்டார். இந்த முறை அவருக்குச் சிறைவாசம் கடந்த முறை இருந்தது போலில்லாமல் சற்றுக் கடுமையாகவே இருந்தது. பின்னர் சிரச்சேதம் செய்யப்பட்டு இரத்த சாட்சியாக மரித்தார் என்று சரித்திரம் கூறுகிறது.

**எழுதப்பட்ட காலம் : கி.பி. 67**

**இந்தப் புத்தகத்தை ஏன் எழுதினார்?**

பவுல் அப்போஸ்தலன் சிறையில் அடைக்கப்பட்டு ஆண்டவருக்காக தன்னுடைய உயிரையே தியாகம் செய்யக் காத்திருந்தார். இந்நிலையில் சபையின் நிலைமை குறித்தும் தனக்குப் பின் ஊழியத் தலைவராக வர வேண்டிய தீமோத்தேயுவை குறித்தும் பவுல் ஆழ்ந்த கரிசனை கொண்டிருந்தார். சிறையிலிருக்கும் போது தனித்திருக்கிறேனே என்று கவலை கொண்டிருந்தார். II தீமோத்தேயு 4: 9, 21ல் தீமோத்தேயுவை தன்னிடம் வரும்படி துரிதப்படுத்துவதை நீங்கள் கவனிக்கலாம்.

தீமோத்தேயு சற்று தைரியம் குறைந்தவர். தயக்கம் நிறைந்தவர். அவரை உற்சாகப்படுத்தி, தைரியப் படுத்தி இந்நிருபத்தை எழுதினார். ஊழியக்காரனுடைய தகுதிகளைப் பற்றியும், பின்மாறிப் போனவர்களைப் பற்றியும் இந்நிருபத்தில் எழுதியிருக்கிறார்.

தனிப்பட்ட முறையில் இந்நிருபம் எழுதப்பட்டிருப்பதை நாம் கவனிக்க முடியும். 29 பெயர்கள் இந்நிருபத்தில் இடம் பெற்றிருப்பதைக் கவனியுங்கள். தீமோத்தேயுவுக்கு பல அறிவுரைகளை எழுதின பவுல் 4 ஆம் அதிகாரத்தில் தன்னுடைய தனிப்பட்ட அனுபவங்களையும் தேவைகளையும் எழுதியிருப்பதை வாசித்துப் பாருங்கள்.

**முக்கியச் செய்தி :**

சுவிசேஷத்திற்காக பாடனுபவிக்க வேண்டும். சகிப்புத் தன்மை வேண்டும். சுவிசேஷத்தைக் குறித்து வெட்கப்படத் தேவையில்லை. சபையின் தலைமைத்துவப் பொறுப்புகளை ஒப்படைக்கும் வகையில் பல அறிவுரைகளையும், கட்டளைகளையும் பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதியிருக்கிறார்.

**பகுப்பாய்வு:**

1. சுவிசேஷத்தைக் குறித்து வெட்கமடையக் கூடாது.
2. சுவிசேஷத்திற்காக பாடுகளை சகித்துக் கொள்ள வேண்டும்.
3. சுவிசேஷத்தின் சத்தியத்தில் நிலைத்திருக்க வேண்டும்.
4. சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டும்.



**முக்கிய அதிகாரம் : 2**

ஊழியக்காரர்களுக்கு அறிவுரைகள்.

**முக்கிய வசனங்கள்:**

2 : 15, 24, 3 : 16,1 7

**முக்கிய வார்த்தைகள்:**

'வெட்கம்' என்பதைத் தழுவிய வார்த்தைகள் எங்கெல்லாம் வருகிற தென்று கவனியுங்கள். தேவனைத் துதிக்க 1:9,10, 2: 8, 4 : 1, 8 வசனங்களைப் பயன்படுத்துங்கள்

**ஒவ்வொரு அதிகாரத்தின் உள்ளடக்கம்:**

1. வாழ்த்து, நன்றி, அறிவுரை
2. அறிவுரைகள்.
3. கொடிய காலம், பின்மாற்றக்காரர்கள், அறிவுரை.
4. அறிவுரைகள், பவுலின் நம்பிக்கை, வேண்டுகோள், வாழ்த்துக்கள்.

நான்கு அதிகாரங்களைக் கொண்ட இப்புத்தகத்தில் 83 வசனங்களே உள்ளன. 4 பக்கங்களுக்குள் அடங்கியிருக்கிற இப்புத்தகத்தை 15 நிமிடங்களுக்குள் வாய்விட்டு வாசித்துப் பாருங்கள்.










Cell: 89030 11350, E-mail : selwynde@gmail.com

அப்போஸ்தலனாகிய பவுல் தீத்துவுக்கு எழுதின நிருபத்தில் கிறிஸ்தவ ஊழியக்காரரின் தகுதிகள் பற்றியும், கிறிஸ்தவ சபை ஒழுங்குகள் பற்றியும் எழுதியிருக்கிறார். புதிய ஏற்பாட்டுப் புத்தக வரிசையில் 17 ஆவது புத்தகமாக இந்த நிருபம் இடம் பெற்றிருக்கிறது.

தீத்து என்பவர் கிரேக்க நாட்டைச் சேர்ந்தவர். அப்போஸ்தலனாகிய பவுல் இவரது மனந்திரும்புதலுக்கு காரணமாயிருந்தார். அப்போஸ்தலனாகிய பவுலுடன் தீத்து மிஷனெரிப் பயணங்களை மேற்கொண்டார். கொரிந்தியருக்கு எழுதின இரண்டாவது நிருபத்தை, பவுல் தீத்துவின் மூலம் கொடுத்து அனுப்பினார். பவுல் எழுதின நிருபங்களில் 13 இடங்களில் தீத்துவின் பெயர் வருகிறதை நீங்கள் கவனிக்கலாம். குறிப்பிட்ட நோக்கத்திற்காக பவுல் தீத்துவை கிரேத்தா தீவில் விட்டுச் சென்றார். தீத்து 1:5 ஆம் வசனத்தை வாசிக்கவும்.

**எழுதப்பட்ட காலம்:** கி. பி. 63

**இப்புத்தகத்தின் செய்தி:**

ஊழியக்காரனுடைய தகுதிகளும், பலதரப்பட்டவர்களை எப்படி நடத்த வேண்டும் என்பதற்கான ஆலோசனைகளும் இந்நிருபத்தில் எழுதப்பட்டிருக்கின்றன. நற்குணங்கள், நல்நடத்தை, நற்கிரியைகள் தெளிவாக விளக்கப்பட்டிருக்கின்றன.

**பின்னணி:**

மத்திய தரைக்கடலில் கிரேத்தாத் தீவு இருக்கிறது. சுமார் 250 கிலோ மீட்டர் நீளமும், 50 கிலோ மீட்டர் அகலமும் கொண்ட இத்தீவில் மக்கள் துன்மார்க்கமாய் வாழ்ந்தார்கள். பெந்தெகொஸ்தே நாளன்று எருசலேமிற்கு வந்திருந்த கிரேக்கர்கள் மூலமாக சுவிசேஷம் இப்பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டது. ரோம் பட்டணத்தில் முதலாவது சிறையிருப்பிற்குப் பின்னர் பவுல் இத்தீவிற்குச் சென்றார். அதற்குப் பின்னர் இந்நிருபத்தை எழுதினார்.

**முக்கிய அதிகாரம்:** 2

**முக்கியப் பகுதிகள்:** 2: 11-14, 3 :4-7

இப்பகுதிகளை மனப்பாடமாக படித்துக் கொள்ளுங்கள்.

**முக்கிய வசனங்கள்:** 1:5, 3:8

**இப்புத்தகத்தை வாசிக்கும் முறை:**

3 அதிகாரங்களைக் கொண்ட இப்புத்தகத்தை 10 நிமிடங்களுக்குள் ஒரு முறை வாய்விட்டு வாசித்து விடலாம்.

**அதிகாரங்களின் உள்ளடக்கம்:**

1. முன்னுரை, கண்காணியாயிருப் பவர்களின் தகுதிகள், போலிப் போதகர்களைக் கண்டிப்பதற்கான அறிவுரை.
2. வெவ்வெறு பிரிவினர்களுக்கான அறிவுரைகள், இரட்சிப்பின் நோக்கம் பற்றிய உபதேசம்.
3. நற்கிரியைகள். முடிவுரை.



அப்போஸ்தலனாகிய பவுல் எழுதின 13 நிருபங்களில் இந்த ஒரு நிருபம் மட்டுமே பவுல் தன் நண்பருக்கு எழுதும் ஒரு தனிப்பட்ட கடிதம் ஆகும். இதை ஒரு சிபாரிசுக் கடிதம் என்று கூறலாம். ஒருவர் இன்னொருவருக்காக பரிந்துரைக்கும் கடிதம். பிலேமோன் என்பவருக்கு அப்போஸ்தலனாகிய பவுல் ஒநேசிமு என்பவரைப் பற்றி பரிந்துரைக்கும் கடிதம் இது. புதிய ஏற்பாட்டின் புத்தக வரிசையில் 18 ஆவது புத்தகமாக இருக்கிறது. புதிய ஏற்பாட்டில் ஒரே அதிகாரத்தைக் கொண்ட 4 புத்தகங்களில் இதுவும் ஒன்று.

அப்போஸ்தலனாகிய பவுல் சுவிசேஷத்தை அறிவித்ததின் காரணமாக ரோம் பட்டணத்தின் சிறையில் அடைக்கப்பட்டு இருந்த போது கி.பி. 60ஆம் ஆண்டில் இந்த நிருபத்தை எழுதினார். கொலோசெயர், எபேசியர், பிலேமோன் ஏறக்குறைய ஒரே காலகட்டத்தில் எழுதப்பட்ட நிருபங்களாகும்.

**பின்னணி :**

பிலேமோன் என்பவர் வீட்டில் ஒநேசிமு என்பவன் அடிமையாய் இருந்தான். அந்நாட்களில் அடிமைத்துவம் சமுதாய வழக்கமாய் இருந்தது. ரோம் சாம்ராஜ்யத்தில் ஆயிரக்கணக்கான அடிமைகள் இருந்தார்கள். ஒநேசிமு, பிலேமோன் வீட்டில் திருடி விட்டு வீட்டை விட்டு ஓடிவந்து விட்டான். கொலோசெ பட்டணத்தை விட்டு ரோம் பட்டணத்திற்குச் சென்றான். தெய்வாதீனமாக அவன் அப்போஸ் தலனாகிய பவுலை சந்திக்க நேர்ந்தது. அப்போஸ்தலனாகிய பவுல் அவனுக்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றிய சுவிசேஷத்தை சொல்லியதால் ஒநேசிமு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு விசுவாசியானான்.

பிலேமோன், ஒநேசிமு இவர்களுக் கிடையே ஏற்பட்ட உறவு முறிவைச் சரிப்படுத்த பவுல் எடுத்துக்கொண்ட முயற்சியை இந்த நிருபத்தில் காணலாம். அக்காலத்திலிருந்த சமுதாய வழக்கத்தின்படி ஒநேசிமு செய்த தவறுக்காக பிலேமோன் அவனைக் கடுமையாக தண்டிக்கலாம் அல்லது கொலை கூடச் செய்யலாம். ஆனால் அவனை மன்னித்து ஏற்றுக்கொள்ளும் படி பவுல் மன்றாடுகிறார். அன்பின் அடிப்படையில் கனிவோடு கட்டாயப் படுத்துகிறார். இந்த நிருபத்தில் பவுலின் கனிவான கிறிஸ்தவப் பண்பும் அணுகுமுறையும் வெளிப்படுகிறது.

பிலேமோன் என்பவர் வசதியும், செல்வாக்கும் நிறைந்தவராய் கொலோசெ பட்டணத்தில் வாழ்ந்து வந்தார். அப்போஸ்தலனாகிய பவுல் ஊழியத்தின் மூலம் இயேசு கிறிஸ்துவின் விசுவாசியானார். பிலேமோன் மனைவி அப்பியாள் என்பவர். அவருடைய மகன் அர்க்கிப்பு சுவிசேஷ ஊழியனாக இருந்தார்.

**பகுப்பாய்வு:**

வசனம் 1-3 வாழ்த்து

வசனம் 4-7 பிலேமோனுக்கு பாராட்டு<br>பிலேமோனின் பண்புகள்

வசனம் 8-17 பவுலின் மன்றாட்டு

வசனம் 18-21 பவுலின் உறுதிமொழி

வசனம் 22-25 முடிவான வார்த்தைகள்

ஒநேசிமு என்றால் “பயன்படுதல்” என்று பொருள். ஒரே அதிகாரத்தைக் கொண்ட 25 வச னங்கள் உள்ள இப்புத்தகம் தமிழ் வேதாகமத்தில் ஒரே பக்கத்தில் இடம் பெற்றுள்ளது. (புதிய ஏற்பாட்டில் பக்கம் 297) வாய்விட்டு மிதமான வேகத்தில் வாசித்தால் 5 நிமிடங்களில் இப்புத்தகத்தை வாசித்து விடலாம்.

ஒரே தடவையில் அடுத்தடுத்து மூன்று தடவைகள் இப்புத்தகத்தை வாசித்துப் பாருங்கள்.

**முக்கிய வசனங்கள் :** 18, 20

அவன் உமக்கு யாதொரு அநியாயஞ் செய்ததும் உம்மிடத்தில் கடன் பட்டதும் உண்டானால், அதை என் கணக்கிலே வைத்துக்கொள்ளும். ஆம் சகோதரனே கர்த்தருக்குள் உம்மாலே எனக்குப் பிரயோஜன முண்டாகட்டும். கர்த்தருக்குள் என் உள்ளத்தை இளைப்பாறப்பண்ணும்.

**அப்போஸ்தலனாகிய பவுல் எழுதின நிருபங்கள் கால வரிசைப்படி**

| நிருபத்தின் பெயர் | எழுதப்பட்ட இடம் | எழுதப்பட்ட காலம் |
|---|---|---|
| I தெசலோனிக்கேயர் | கொரிந்து | கி. பி.52-53 |
| II தெசலோனிக்கேயர் | கொரிந்து | கி. பி. 53 |
| I கொரிந்தியர் | எபேசு | கி. பி. 57 |
| II கொரிந்தியர் | மக்கெதோனியா | கி. பி. 57 |
| கலாத்தியர் | கொரிந்து | கி. பி. 57 -58 |
| ரோமர் | கொரிந்து | கி. பி. 58 |
| எபேசியர் | ரோம் | கி. பி . 60 |
| தீத்து | கொரிந்து | கி. பி. 63 |
| கொலோசெயர் | ரோம் | கி. பி . 63 |
| பிலேமோன் | ரோம் | கி. பி. 63 |
| பிலிப்பியர் | ரோம் | கி. பி. 64 |
| I தீமோத்தேயு | ரோம் | கி. பி. 66 |
| II தீமோத்தேயு | ரோம் | கி. பி. 67 |




**ஒவ்வொரு நிருபத்திலும் உள்ள முக்கிய செய்தியின் ஆதார வார்த்தை**

| | |
|---|---|
| ரோமர் | நீதி |
| I கொரிந்தியர் | ஞானம் |
| II கொரிந்தியர் | ஆறுதல் |
| கலாத்தியர் | விசுவாசம் |
| எபேசியர் | ஆசீர்வாதம் |
| பிலிப்பியர் | சந்தோஷம் |
| கொலோசெயர் | நிறைவு |
| I தெசலோனிக்கேயர் | கிரியை செய்தல் |
| II தெசலோனிக்கேயர் | காத்திருத்தல் |
| I தீமோத்தேயு | ஊழியம் செய்தல் |
| II தீமோத்தேயு | சுவிசேஷத்தைக் காத்துக்கொள்ளுதல் |
| தீத்து | நற்கிரியை |
| பிலேமோன் | மன்னித்து ஏற்றுக்கொள்ளுதல் |

ரோமர், I கொரிந்தியர், II கொரிந்தியர், கலாத்தியர்
கிறிஸ்துவும் சிலுவையும்

எபேசியர், பிலிப்பியர், கொலோசெயர்
கிறிஸ்துவும் திருச்சபையும்

I தெசலோனிக்கேயர், II தெசலோனிக்கேயர்
கிறிஸ்துவும் வருகையும்

ஒவ்வொரு நிருபத்திலும் கிறிஸ்து நமக்கு எப்படிப்பட்டவராயிருக்கிறார் என்று வெளிப்படுத்தப்பட்டிருப்பதை மனதில் கொண்டு வாசியுங்கள்.

| | |
|---|---|
| ரோமர் | கிறிஸ்துதேவனுடைய வல்லமை |
| I கொரிந்தியர் | கிறிஸ்து தேவனுடைய ஞானம் |
| II கொரிந்தியர் | கிறிஸ்து தேவனுடைய ஆறுதல் |
| கலாத்தியர் | கிறிஸ்து தேவனுடைய நீதி |
| எபேசியர் | கிறிஸ்து தேவனுடைய ஐசுவரியம் |
| பிலிப்பியர் | கிறிஸ்து தேவனுடைய பெலன் |
| கொலோசெயர் | கிறிஸ்து தேவனுடைய நிறைவு |
| I தெசலோனிக்கேயர் | கிறிஸ்து தேவனுடைய வாக்குத்தத்தம் |
| II தெசலோனிக்கேயர் | கிறிஸ்து தேவனுடைய பிரதிபலன் |

அப்போஸ்தலனாகிய பவுல் சபைகளுக்கு எழுதின நிருபங்கள் 3 பிரிவுகளில் அமைந்திருப்பதைக் கவனியுங்கள். ஒவ்வொரு பிரிவின் முக்கியச் செய்தியைக் குறித்துக் கொள்ளுங்கள்.

பரிசுத்த வேதாகமத்தில் புதிய ஏற்பாடு என்ற பகுதியில் 27 புத்தகங்கள் உள்ளன. புதிய ஏற்பாட்டின் முதல் நான்கு புத்தகங்களான சுவிசேஷங்களும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்று நிகழ்ச்சிகளையும் போதனைகளையும் கொண்டதாக இருக்கின்றன. இயேசு கிறிஸ்து பரலோகத்திற்குச் சென்ற பின்னர் பரிசுத்த ஆவியானவர் பொழிந்தருளப் பட்டார். இதுதான் ‘பெந்தெகொஸ்தே’ என்று அழைக்கப்படுகிறது. இப்படி ஆரம்பித்த கிறிஸ்தவ திருச்சபை சுவிசேஷத்தை பிரபல்யப்படுத்தி, 30 ஆண்டுகளில் தீவிரமாகப் பரவியது. பல தேசங்களில் உள்ளூர் சபைகள் நாட்டப்பட்டன. அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் இதைக் குறித்து படிக்கிறோம்.

விசுவாசிகளுக்கு தொடர்ந்து உபதேசமும், ஆலோசனைகளும் தேவைப்பட்டதால் நிருபங்கள் எழுதப்பட்டன. அப்போஸ்தலனாகிய பவுல்,13 நிருபங்களை எழுதினார். அதை அடுத்து இடம் பெற்றுள்ள எபிரெய நிருபம் தனிச்சிறப்பு வாய்ந்த நிருபமாகும். யூத பாரம்பரியத்தின் பின்னணியிலிருந்து இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட விசுவாசிகளுக்கு இந்நிருபம் எழுதப்பட்டது. இயேசு கிறிஸ்துவை சிறந்த இணையற்ற பிரதான ஆசாரியராக இந்நிருபம் விவரிக்கிறது. அதை அடுத்துள்ள 7 நிருபங்களும் ‘பொதுவான நிருபங்கள்’ என அழைக்கப்படுகின்றன.பொதுவான நிருபங்கள் என்று சொல்லும்போது, ஏதோ ஒரு குறிப்பிட்ட சபைக்கோ, சபைகளுக்கோ எழுதாமல், பொதுவாக எழுதப்பட்டவை என்று பொருள்படும்.

**பொதுவான நிருபங்கள்:**

யாக்கோபு, I பேதுரு,II பேதுரு, Iயோவான், IIயோவான், IIIயோவான், யூதா

எபிரெயர், பொதுவான நிருபங்கள், வெளிப்படுத்தின விசேஷம் என்ற புத்தகங்களை 30 நாட்களில் வாசித்து முடிக்க ஓர் அட்டவணை

| நாள் | அதிகாரங்கள் |
|---|---|
| எபிரெயர் | |
| 1 | 1-2 |
| 2 | 3-4 |
| 3 | 5-6 |
| 4 | 7-8 |
| 5 | 9 |
| 6 | 10 |
| 7 | 11 |
| 8 | 12-13 |
| யாக்கோபு | |
| 9 | 1 |
| 10 | 2-3 |
| 11 | 4-5 |
| I பேதுரு | |
| 12 | 1 |
| 13 | 2-3 |
| 14 | 4-5 |
| II பேதுரு | |
| 15 | 1-3 |
| I யோவான் | |
| 16 | 1-3 |
| 17 | 4-5 |
| II & III யோவான் | |
| 18 | 1+1 |
| 19 | யூதா -1 |
| வெளிப்படுத்தின விசேஷம் | |
| 20 | 1-2 |
| 21 | 3-4 |
| 22 | 5-6 |
| 23 | 7-8 |
| 24 | 9-10 |
| 25 | 11-12 |
| 26 | 13-14 |
| 27 | 15-16 |
| 28 | 17-18 |
| 29 | 19-20 |
| 30 | 21-22 |

### நீங்கள் நிருபங்களை வாசிக்கும் போது

நிருபம் என்றால் கடிதம் என்று பொருள்படும். உங்களுக்கு நண்பர் ஒருவர் கடிதம் எழுதினால் நீங்கள் அந்தக் கடிதத்தைப் பெற்ற பின் அதை எப்படி வாசிப்பீர்கள்? முதலில் தொடங்கி கடைசி வரை தொடர்ச்சியாக வாசித்து முடித்துவிட்டுத் தானே வைப்பீர்கள். அதைப் போல நிருபங்களைப் படித்துப் பாருங்கள். அப்படி வாசித்தால் நிருபத்தின் செய்தியை தெளிவாக விளங்கிக் கொள்ளலாம். யார் எழுதினார்? யாருக்கு எழுதினார்? ஏன் எழுதினார்? என்ன எழுதியிருக்கிறார்? என்னும் கேள்விகளுக்குப் பதில் காணும் வகையில் வாசித்துப் பாருங்கள்.

### நீங்கள் ‘வெளிப்படுத்தின விசேஷத்தை’ வாசிக்கும் போது

7 என்ற எண்ணிக்கை கொண்ட பல காரியங்கள் இப்புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளது. உதாரணமாக 2, 3 ஆம் அதிகாரத்தில் 7 சபைகளின் பெயர்கள், செய்திகள் குறிக்கப் பட்டுள்ளன.

புதிய ஏற்பாட்டின் கடைசிப் புத்தகமாகிய வெளிப்படுத்தின விசேஷம் தீர்க்கதரிசனப் புத்தகமாகும். ஒரு குறிப்பிட்ட காரியம் நடை பெறுவதற்கு முன்னரே அதைப் பற்றிச் சொல்லுவது தீர்க்கதரிசனமாகும். எதிர்காலத்தைப் பற்றி முன்னுரைப்பது மட்டுமல்ல, தீர்க்கதரிசனத்தில் தேவனுடைய குறிப்பிட்ட செய்தியும் அடங்கியுள்ளது. வெளிப்படுத்தின விசேஷம் 1:3 வசனத்தை கவனமாகப் படித்துப் பாருங்கள்.
அப்போஸ்தலனாகிய யோவான் பரலோகக் காட்சிகளை அல்லது தரிசனங்களைக் கண்டு எழுதி வைத்துள்ளார்.

இப்புத்தகத்திற்கு முடிவான விளக்கம் கொடுப்பது கடினம் என்றாலும் புத்தகத்தின் அமைப்பு ஒரு குறிப்பிட்ட திட்டத்தின்படி தெளிவாக உள்ளது.

‘வெளிப்படுத்தின விசேஷம்’ என்ற வார்த்தைக்கு மூல பாஷையில் இரகசியத்தைத் தெரியப்படுத்துதல் அல்லது மறை பொருளை தெரியப் படுத்துதல் என்பது பொருளாகும். வெளிப்படுத்தின விசேஷமே ஒரு மறை பொருளாக இருக்கிறது. பொறுமை, விடாமுயற்சி, ஜெபத்துடன் படித்தால் உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கைக்கு அதிக பயனுள்ளதாக இருக்கும்.



புதிய ஏற்பாட்டில் 27 புத்தகங்களில் 21 புத்தகங்கள் ‘நிருபங்கள்’ என்று அழைக்கப்படுகின்றன. இதில் 14 நிருபங்கள் ஒரு குறிப்பிட்ட சபைக்கோ அல்லது நபருக்கோ எழுதப்பட்டவைகளாகும் ‘நிருபம்’ என்ற வார்த்தைக்கு ‘முக்கிய செய்தியைக் கொண்ட கடிதம்’ என்பது பொருளாகும். எபிரெயருக்கு எழுதிய நிருபம் புதிய ஏற்பாட்டுப் புத்தக வரிசையில் 19 ஆவது புத்தகமாக இடம் பெற்றுள்ளது.

**எழுதியவர்:**

இந்த நிருபத்தை எழுதியவர் யாரென்று திட்டவட்டமாகத் தெரியவில்லை. இப்புத்தகத்தைப் பற்றி கருத்தாய் ஆராய்ச்சி செய்தவர்கள் யூத மத ஒழுங்குகள் யாவையும் தெரிந்த ஒருவர் தனக்குத் தனிப்பட்ட விதத்தில் அறிமுகமான விசுவாசிகளுக்கு எழுதியிருக்கிறார் என்று தெரிகிறது.

**எழுதப்பட்ட காலம்:**

கி.பி.67 இல் எருசலேம் பட்டணம் அழிக்கப்படுவதற்கு முன் இப்புத்தகம் எழுதப்பட்டு இருக்கலாம்.

**பின்னணி:**

யூத மக்கள் மத வைராக்கியம் கொண்டவர்கள். பழைய ஏற்பாட்டில் நாம் வாசிக்கும் வழிபாட்டு முறைகள், சட்டதிட்டங்கள், நியாயப் பிரமாணங்கள் யாவும் யூத மதத்தைச் சார்ந்தவைகளாகும். யூத மதக் கொள்கைகளுக்கு யூத மக்கள் அதிகமான முக்கியத்துவத்தைக் கொடுத்து வந்தார்கள். அவர்களுடைய வேதநூல் பழைய ஏற்பாட்டுப் புத்தகமாகும். இந்த யூத மக்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட போது யூத விசுவாசிகளானார்கள்.

எபிரெய மொழியைப் பேசின இந்த யூத விசுவாசிகள் பாலஸ்தீனத்திலும் மற்றும் பல நாடுகளிலும் வாழ்ந்து வந்தார்கள். எருசலேம் அல்லது ரோம் பட்டணத்தில் வாழ்ந்து வந்த எபிரெய விசுவாசிகளுக்கு இந்நிருபம் எழுதப்பட்டது என்று தெரிகிறது.

யூத வழிபாட்டு முறைகளில் பலி செலுத்துதல், ஆசாரியத்துவம், உடன்படிக்கை, நியாயப்பிரமாணம் என்பவைகள் மிகவும் முக்கியமானவைகள் ஆகும். இவைகளின் மூலமாகத் தான் தேவனை அடையலாம் என்று உறுதியாக அவர்கள் நம்பி வந்தார்கள். இவைகளெல்லாம் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் கொடுக்கப்பட்ட கட்டளைகளாகும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட வர்களுக்கு வெளிப்பிரகாரமான சடங்காச்சாரங்கள் தேவையில்லை. விசுவாசி எல்லாவற்றையும் விசுவாசத்தின் அடிப்படையில் தான் செய்ய வேண்டும். இந்த ஆவிக்குரிய உண்மையை எபிரெய விசுவாசிகள் எளிதாக விளங்கிக்கொள்ளவில்லை.

மேற்கூறிய பழைய ஏற்பாட்டுச் செய்தி, சத்தியங்கள் எல்லாம் விசுவாச வாழ்க்கைக்கு சட்டதிட்டம் போல் தேவையில்லையென்று சொன்னாலும் அவைகளெல்லாம் புதிய ஏற்பாட்டின் போதனைக்கு அடையாளமாகவும், மாதிரியாகவும் இருக்கின்றன. இயேசு கிறிஸ்து யூதகுலத்தில் தான் தோன்றினார். இயேசுகிறிஸ்து மேற்கூறிய பழைய ஏற்பாட்டு உண்மைகளையெல்லாம் எப்படி நிறைவேற்றினார், நிறைவாக்கினார் என்பதே எபிரெயர் நிருபத்தின் முக்கியச் செய்தியாகும்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட யூத விசுவாசிகள் விசுவாசத்தின் காரணமாக மிகவும் துன்புறுத்தப் பட்டனர், துரத்தப்பட்டனர். பல இடங்களுக்குச் சிதறடிக்கப்பட்ட விசுவாசிகளில் சிலர் மிகவும் சோர்ந்து போய் ஆவிக்குரிய வாழ்க்கையில் பின்தங்கிவிட்டனர். இந்நிலையில் இருந்த விசுவாசிகளை உற்சாகப் படுத்தவும், எச்சரிக்கவுமே இப்புத்தகம் எழுதப்பட்டது. எபிரெயர் நிருபம் பழைய ஏற்பாட்டு உண்மைகளின் விளக்க உரையாகவும், எச்சரிப்பின் செய்தியாகவும், விசுவாசிகளை உற்சாகப்படுத்தும் செய்தியாகவும், புத்திமதியாகவும் எழுதப்பட்டது.

**பகுப்பாய்வு :**

இயேசு கிறிஸ்து மேலானவர் 1:1, 4:13

இயேசு கிறிஸ்துவின் வேலை மேலானது 4:14, 10:18

கிறிஸ்தவர்களுடைய விசுவாச வாழ்க்கையே மேலானது 10 : 19, 13 : 25

**முக்கியச் செய்தி:**

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் மகிமையும் அவர் நமக்காகச் செய்திருப்பதையும் அறிந்திருப்பதே பின்வாங்கிப் போகாமலும், சோர்ந்து போகாமலும் இருக்க உதவுகிறது. தீர்க்கதரிசிகள், தேவதூதர்கள், மோசே, யோசுவா, மெல்கிசேதேக்கு இவர்களைக் காட்டிலும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மேலானவர். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் யூதர்கள் செலுத்தி வந்த பலிகள், ஆண்டவர் அவர்களோடு பண்ணின உடன்படிக்கை, ஆசாரியத்துவ முறைமைகள் இவைகளில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எப்படி வெளிப்படுத்தப்பட்டிருக்கிறார் என்பது விளக்கப்பட்டிருக்கிறது. இப்புத்தகத்தை வாசிக்கும்போது லேவியராகமத்தையும் சேர்த்து வாசிப்பது இப்புத்தகத்தை எளிதில் புரிந்துகொள்ள உதவும்.

**முக்கிய அதிகாரங்கள்:** 9, 10, 11

**முக்கிய வசனம் :** 12: 1,2

**முக்கிய வார்த்தைகள் :**

சிறந்தது, மேலானது, மேன்மையானது, நன்மையானது என்ற வார்த்தைகள் 12 இடங்களில் வருகின்றன. எபிரெயர் நிருபத்தில் இந்த வார்த்தைகள் எந்தெந்த வசனங்களில் வருகின்றன என்று குறித்துப் பாருங்கள்.

எபிரெயர் நிருபத்தில் 13 அதிகாரங்களும், 303 வசனங்களும் தமிழ் வேதாகமத்தில் 14 பக்கங்களில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.
ஒரு நாளைக்கு 3 அதிகாரங்கள் வீதம் வாசித்தால் 4 நாட்களில் இப்புத்தகத்தை ஒரு முறை வாசித்து முடித்துவிடலாம். முடிந்த அளவு ஒரே தடவையில் இப்புத்தகத்தை நீங்கள் வாசித்தீர்களானால் இப்புத்தகத்தை பற்றித் தெளிவாகப் புரிந்து கொள்ளமுடியும்.

**5 எச்சரிப்பின் செய்திகள் :**

1. ஆண்டவரை விட்டு வழி விலகாதீர்கள். 2:1-4
2. தேவன் வாக்குப் பண்ணினதை பெறத் தவறாதீர்கள். 3:7 -4 :13
3. இரட்சிப்பை இழந்துவிடாதீர்கள் 5:11−6:20
4. பின்வாங்காதீர்கள் 10:26−39
5. தேவனுடைய செய்தியைக் கேட்டு செவி கொடுக்கமாட்டோம் என்று விலகாதீர்கள். 12:25 −29

இந்த வசனங்களை உங்கள் வேதாகமத்தில் குறித்துக் கொள்ளுங்கள். அந்தப் பகுதியை கருத்துடன் ஆராய்ந்து பாருங்கள்.



**தியானித்து துதிக்க வசனங்கள்**
**பிரதான ஆசாரியராகிய இயேசுகிறிஸ்து**

'பிரதான ஆசாரியராகிய இயேசு கிறிஸ்து' என்ற தலைப்பில் இந்த நிருபத்திலிருந்து தெரிந்தெடுக்கப் பட்ட வேதவசனங்கள் ஆண்டவரைத் துதித்துப் போற்ற உதவியாக இருக்கும்.

2:17 தேவகாரியங்களைக் குறித்து இரக்கமும், உண்மையுமுள்ள பிரதான ஆசாரியர். எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாக வேண்டுமென்பதற்காக மனித அவதாரம் எடுத்த பிரதான ஆசாரியர்.

3:1 நாம் அறிக்கைபண்ணுகிற அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியருமான கிறிஸ்து.

4:14,15 வானங்களின் வழியாய்ப் பரலோகத்திற்குப் போன தேவகுமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர், எல்லாவிதத்திலும் நம்மைப் போல் சோதிக்கப்பட்டும் பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியர், நமக்காகப் பரிதபிக்கிறவர், பரிந்துபேசுகிறவர்.

5:5,10 தேவனாலே நியமிக்கப்பட்டு மெல்கிசேதேக்கின் முறைமையின்படி நாமம் தரிக்கப்பட்டு உயர்த்தப்பட்ட பிரதான ஆசாரியர்.

6:20 திரைக்குள் பிரவேசித்திருக்கிற நித்திய பிரதான ஆசாரியர்

7:14 யூதா கோத்திரத்தின் வழியாக வந்தவர்



7:16,17 மாம்ச சம்பந்தமான நியாயப் பிரமாணமாகிய கட்டளையின் படிஆசாரியராகாமல், அழியாத ஜீவனுக்குரிய வல்லமையின் படியே என்றென்றைக்கும் ஆசாரியராய் இருக்கிறவர்.

7:24 மாறிப்போகாத ஆசாரியத்துவமுள்ளவர்.

7:26 பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும், வானங்களிலும் உயர்ந்தவரும் நமக்கேற்ற வருமாகிய பிரதான ஆசாரியர்.

7 :27 தம்மைத் தாமே ஒரே தரம் பலியாக தந்த பிரதான ஆசாரியர்

8 :1,2 பரலோகத்தில் மகத்துவமுள்ள ஆசனத்தின் வலது பாரிசத்தில் உட்கார்ந்திருக்கிறவரும், கர்த்தரால் ஸ்தாபிக்கப்பட்ட மெய்யான கூடாரத்திலும் ஆசாரிய ஊழியம் செய்கிறவருமாயிருக்கிற பிரதான ஆசாரியர்.

10 : 21 தேவனுடைய வீட்டின் மேல் அதிகாரியான மகாபிரதான ஆசாரியர்.

**எபிரெயர் நிருபத்தில்**
**4 முக்கிய கருத்துக்கள்:**

1. உற்சாகமூட்டும் வார்த்தைகள்
2. உபதேசத்தை விளக்கும் சத்தியங்கள்
3. எடுத்துக்காட்டாக வாழ்ந்த விசுவாச வீரர்களின் பட்டியல்
4. எச்சரிப்பின் செய்திகள்

**ஒவ்வொரு அதிகாரங்களின் உள்ளடக்கம்:**

ஒவ்வொரு அதிகாரத்தின் தலைப்பையும் உங்கள் வேதாகமத்தில் அந்தந்த அதிகாரங்களுக்கு மேலாக எழுதிக் கொள்ளுங்கள். தலைப்புகள் சரிதானா என்று பாருங்கள். ஏன் இந்த தலைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது என்று கருத்துடன் கண்டு பிடியுங்கள். ஒவ்வொருநாளும் எபிரெயர் நிருபத்தை படிப்பதற்கு முன்பாக இந்தக் கட்டுரையை வாசியுங்கள்.

1. தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து, தீர்க்கதரிசிகள், தேவ தூதர்களைக் காட்டிலும் உன்னதமானவர்.
2. மனுஷகுமாரனாகிய இயேசு கிறிஸ்து மனித அவதாரம் எடுத்ததின் நோக்கம்.
3. குமாரனாகிய கிறிஸ்து ஊழியக்காரனாகிய மோசேயைக் காட்டிலும் மேலானவர், இஸ்ரவேலரின் அவிசுவாசம்.
4. விசுவாசிகளுக்கு கிடைக்கும் மேலான இளைப்பாறுதல்.
5. நியமிக்கப்பட்ட பிரதான ஆசாரியராகிய இயேசு கிறிஸ்து, வளர்ச்சி குன்றிய விசுவாசிகளுக்குக் கடிந்துரை.
6. விசுவாசிகளுக்குக் கட்டளை, எச்சரிப்பு, நம்பிக்கையூட்டும் சில வார்த்தைகள், வாக்குத்தத்தம்.
7. மெல்கிசேதேக்கின் முறைமையின் படியான பிரதான ஆசாரியராகிய இயேசு கிறிஸ்து
8. புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தரான இயேசு கிறிஸ்து.
9. முதலாம் உடன்படிக்கையை விட மேலான புதிய உடன்படிக்கை.
10. இயேசு கிறிஸ்துவின் பணி, விசுவாசிகளுக்கு எச்சரிப்பும், அறிவுரைகளும்.
11. விசுவாச வீரர்கள்
12. விசுவாசத்தின் காரணகர்த்தராகிய கிறிஸ்து, சிட்சிக்கும் பிதாவானவர், எச்சரிப்பு.
13. யூத சடங்காச்சாரங்களை விட சிறந்த கிறிஸ்தவ வழிபாட்டு முறை, கட்டளைகளும், ஆசீர்வாதங்களும்.

**சில முக்கிய குறிப்புகள்:**

எபிரெயர் நிருபத்தின் செய்தியை நன்றாக நீங்கள் மனதிலே பதித்துக் கொள்வதற்கு கீழ்க்காணும் வார்த்தைகளைக் கருத்துடன் படித்துப் பாருங்கள்.

**பின் வாங்காதீர், பிரதான ஆசாரியராகிய கிறிஸ்து**

***யாரைப் பற்றி யாருக்கு எழுதப்பட்டது?***

பின் வாங்கிப்போன விசுவாசிகளுக்கு பிரதான ஆசாரியராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றி எழுதப்பட்டது.

⭑ எபிரெயர் நிருபம் முழுவதையும் ஒரு முறை வாய்விட்டு வாசிப்பதற்கு ஒருமணி நேரம் ஆகிறது. அந்த விதமாக நீங்கள் வாசித்துப் பார்ப்பது மிகவும் நல்லது.

⭑ 11ஆம் அதிகாரத்தில் எத்தனை விசுவாச வீரர்களைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது என்று எண்ணிப்பாருங்கள்.

## முக்கிய வார்த்தைகள்

| | |
|---|---|
| சிறந்தது, மேலானது<br>மேன்மையானது<br>நன்மையானது | 14 |
| சுத்திகரித்தல் | 7 |
| பரிசுத்த ஆவியானவர் | 5 |
| சமாதானம் | 5 |
| நித்தியம் | 7 |
| ஆபிரகாம் | 10 |
| சகோதரர் | 11 |
| இருதயம் | 11 |
| பரலோகம் | 9 |
| இரட்சிப்பு | 9 |
| மெல்கிசேதேக்கு | 11 |
| தேவதூதர் | 10 |
| விசுவாச வீரர்கள் | 16 |
| பிரதான ஆசாரியர் | 18 |
| உடன்படிக்கை - | 20 |
| விசுவாசத்தினாலே | 21 |
| ஆசாரியர் | 25 |
| பரிசுத்தம் | 24 |
| பாவம் | 29 |
| பலிகள், பலிபீடம் | 35 |
| பூரணம் | 17 |
| வாக்குத்தத்தம் | 18 |
| ஒரேதரம் | 6 |
| ஒருதரம் | 5 |
| யோசுவா | 1 |
| ஆரோன் | 3 |
| மோசே | 11 |
| குமாரன் | 13 |
| பரம அழைப்பு | 4 |
| பரலோக | 9 |
| முடிவுபரியந்தம் | 3 |
| பொறுமை | 5 |
| மனசாட்சி | 5 |
| பிரவேசித்திருக்கிறார் | 2 |
| பிரவேசித்தல் | 19 |
| தசமபாகம் | 7 |
| தேவன் | 58 |
| நியாயப்பிரமாணம் | 12 |
| சாட்சி | 14 |
| பின்வாங்குதல் | 3 |
| ஆதலால் / ஆகையால்<br>ஆகையினால் | 27 |
| விசுவாசம் தழுவிய வார்த்தைகள் | 12 |
| சுதந்தரித்தல் | 4 |

எபிரெயர் நிருபத்தில் இந்த வார்த்தைகள் எந்தெந்த வசனங்களில் வருகின்றன என்று குறித்துப் பாருங்கள்.



யாக்கோபு என்பவர் எழுதிய நிருபம் புதிய ஏற்பாட்டில் 'பொதுவான நிருபங்கள்' என்ற பிரிவைச் சேரும்.

புதிய ஏற்பாட்டு புத்தகங்களின் வரிசையில் இந்நிருபம் 20 ஆவது புத்தகமாகும்.

**எழுதியவர்:**

இப்புத்தகத்தை எழுதியவரின் பெயரே இப்புத்தகத்தின் பெயராக அமைந்து இருக்கிறது. புதிய ஏற்பாட்டில் 3 பேர் யாக்கோபு என்ற பெயரில் இருந்தனர்.

1. இயேசுவின் சகோதரராகிய யாக்கோபு (இந்நிருபத்தை எழுதியவர்)
2) செபெதேயுவின் குமாரனாகிய யாக்கோபு
3) அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபு.

**பின்னணி:**

இந்நிருபத்தை எழுதிய யாக்கோபு ஆதித்திருச்சபையில் ஒரு முக்கியத் தலைவராக இருந்தார். அப்போஸ்தலர் 15 ஆம் அதிகாரத்தை வாசித்துப் பாருங்கள். அக்காலத்து விசுவாசிகள் துன்புறுத்தப்பட்டு, அவர்களது விசுவாசம் பரீட்சிக்கப்பட்டது. இந்த விசுவாசப் பரீட்சையில் சோர்வுற்று இருந்த விசுவாசிகளை உற்சாகப் படுத்தவும், அவர்களுடைய வாழ்க்கையிலிருந்த சில முறைகேடுகளை சீர்திருத்தவும் யாக்கோபு இந்த நிருபத்தை எழுதினார்.

**எழுதப்பட்ட காலம்:**

கி.பி. 45 லிருந்து 50 க்குள் எழுதப்பட்டது. முதலாவது எழுதப்பட்ட நிருபங்களில் இதுவும் ஒன்றாகும்.

**முக்கியச் செய்தி:**

நடைமுறையில் கிறிஸ்தவராக வாழ்வது எப்படி என்றும் விசுவாசம், செயல்படுகிற விசுவாசமாக இருக்க வேண்டும் என்றும் எழுதியிருக்கிறார். இந்த நிருபத்தில் அநேக எச்சரிப்புகளும், உவமைகளும், கூற்றுக்களும் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. பழைய ஏற்பாட்டிலுள்ள நீதிமொழிகள் என்ற புத்தகத்தைப் போலவே இந்த நிருபம் காணப்படுகிறது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஆற்றிய மலைப் பிரசங்கத்துக்கும் இந்நிருபத்துக்கும் இணையான பல கருத்துக்கள் காணப்படுகின்றன.

**முக்கிய வசனம்** 2:20

இந்த நிருபத்தில் "வீணான மனுஷனே கிரியைகளில்லாத விசுவாசம் செத்ததென்று நீ அறிய வேண்டுமோ"?

**முக்கிய வார்த்தைகள்**

செயல்படுதல், விசுவாசம்

**பகுப்பாய்வு:**

1. விசுவாசத்தின் பரீட்சை, விசுவாசியும் சோதனையும், விசுவாசியும் கீழ்ப்படிதலும், விசுவாசியும் தேவபக்தியும்.
2. பாரபட்சமற்ற விசுவாசம், கிரியையுள்ள (செயல்படுகிற) விசுவாசம்.
3. நாவடக்கம், ஞானம்.
4. இச்சியாதிருங்கள், தேவனைப் பற்றிக் கொள்ளுங்கள், மற்றவர்களைக் குறித்து தீமையாக பேசாதிருங்கள். எதிர்காலத்திற்காக தேவனைப் பற்றிக்கொள்ளுங்கள்.
5. ஐசுவரியவான்களுக்கு எச்சரிப்பு, பொறுமை, ஜெபம், ஆணையிடாதீர்கள், ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துதல்.

**இப்புத்தகத்தை வாசிக்கும் முறை:**

*5 பக்கங்களில் அடங்கியுள்ள இப்புத்தகத்தை ஒரே தடவையில் வாசித்து முடிப்பது தான் மிகவும் சிறந்தது. 5 அதிகாரங்கள் கொண்ட இந்நிருபத்தில் 108 வசனங்கள் உள்ளன. இப்புத்தகத்தை சாதாரண வேகத்தில் வாய்விட்டு வாசிக்க 20 நிமிடங்கள் தான் ஆகும். யாக்கோபு நிருபத்தை எப்பொழுது நீங்கள் படித்தாலும் இந்த குறிப்பை யும் வைத்து படிப்பது மிகுந்த பயனைக் கொடுக்கும்.*

**செயல்படுகிற விசுவாசம்**
**கிரியையுள்ள விசுவாசம்**

பரிசுத்த வேதாகமத்தில் ஒவ்வொரு புத்தகத்திலும் ஒரு குறிப்பிட்ட மையச் செய்தி காணப்படுகிறது. யாக்கோபு என்பவர் எழுதிய இந்த நிருபத்தில் 'செயல்படும் விசுவாசம்' என்பதே செய்தியாக அமைந்திருக்கிறது. 'கிரியை' என்ற வார்த்தை செயல் அல்லது செயல்படுதல் என்று பொருள்படுகிறது. கிரியையுள்ள விசுவாசம் அதாவது செயல்படுகிற அல்லது செயல்களில் வெளிப்படுகிற விசுவாசத்தைப் பற்றியே யாக்கோபு இந்நிருபத்தில் எழுதியிருக்கிறார்.

விசுவாசம் என்றால், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை மன உறுதியுடனும், நம்பிக்கையுடனும் பற்றிக் கொண்டிருத்தல் என்று பொருள்படும். ஆண்டவராகிய இயேசுவைப் பற்றிக் கொள்ளும் இந்த ஆற்றலை அவருடைய கிருபையாலே பெற்றுக் கொள்கிறோம். இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தால் மட்டும் போதுமானது என்று சிலர் நினைக்கிறார்கள்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினால் கிடைக்கும் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்வதற்கு நம்முடைய முயற்சிகளோ, செயல்களோ நமக்குத் தகுதியாயிராது. தகுதியைத் தராது. கிருபையினால் விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப் படுகிறோம்.

இரட்சிப்பிற்குப் பின் இந்த விசுவாசம் செயல்படுகிற விசுவாசம் என்று அழைக்கப்படுகிறது. விசுவாசம் ஆவிக்குரிய வாழ்க்கையின் முடிவு அல்ல. அது ஆரம்பமும், அடிப்படையும் ஆகும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை நம்பும் ஒரு விசுவாசி, செயல்படத் தவறினால் அவருடைய விசுவாசம் கிரியையில்லாத விசுவாசமாயிருக்கிறது.

இரண்டு மாணவர்கள் தேர்வில் நல்ல முறையில் தேர்ச்சி பெற ஜெபித்தார்கள். அவர்களில் ஒருவன் அதிகமாக ஜெபித்தான். ஆனால் தேவையான அளவிற்கு முயற்சி செய்யவில்லை. மற்றொருவன் தான் செய்யக்கூடிய எல்லா வகையிலும் ஜெபத்துடன் முயற்சியெடுத்துப் படித்தான். நாம் அறிந்திருக்கிறபடி இரண்டாவது மாணவனுடைய விசுவாசம் தான் பலன் தந்து செயல்படுகிற விசுவாசமாக இருக்கிறது. நீங்கள் விசுவாசியா? உங்கள் விசுவாசம் செயல்படுகிற விசுவாசமா? நீங்கள் " நான் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறேன். நான் ஒரு விசுவாசி"" என்று சொல்லுவீர்களானால் அதற்கேற்ற விதமாக வாழவேண்டும்.



ரோமருக்கு எழுதின நிருபத்தில் பவுல் அப்போஸ்தலன் ‘விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல்’ என்ற போதனையைத் தெளிவாக எழுதியிருக்கிறார். தேவன் ஒருவரை ஏற்றுக்கொள்வதற்கு அவருடைய கடமைகளோ, நற்கிரியைகளோ, புண்ணிய செயல்களோ, தான தர்மமோ, பக்தியோ தகுதிப்படுத்தாது. விசுவாசத்தின் அடிப்படையிலேயே தேவன் ஒருவருடைய பாவங்களை மன்னிக்கிறார். இயேசு கிறிஸ்து சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலேயே பாவமன்னிப்பாகிய மீட்பு உண்டு என்று ஒருவர் விசுவாசிக்கும் போது தேவன் அவருக்கு பாவமன்னிப்பின் நிச்சயத்தையும் பரிசுத்த வாழ்க்கைக்கான பெலனையும் கொடுக்கிறார். இதைத்தான் ரோமர் நிருபத்தில் படிக்கிறோம்.

யாக்கோபு நிருபத்தில் விசுவாசம் என்பதில் மட்டும் பிரயோஜனமில்லை விசுவாசம் செயல்பட வேண்டும். நான் தான் விசுவாசிக்கிறேனே என்ற அளவில் அப்படியே நின்றுவிட முடியாது. கிரியையில்லாத விசுவாசம் அல்லது செயல்படாத விசுவாசம் செத்தது என்று யாக்கோபு எழுதுகிறார். இந்நிருபத்தை மேலோட்டமாகப் படிக்கும் போது யாக்கோபு நிருபத்தின் போதனையும் ரோமர் நிருபத்தின் போதனையும் ஒன்றுக்கொன்று எதிரிடையானது போல முரண்பட்டதாகத் தோன்றலாம். ஆனால் உண்மையில் அப்படி அல்ல. ஒரு நாணயத்தின் இருபக்கங்கள் போல இப்போதனைகள் அமைந்துள்ளன. இந்த இரண்டு நிருபங்களையும் ஒப்பிட்டுப் படிப்பது மிகவும் உதவியாக இருக்கும்.

ரோமர் நிருபத்தின் போதனை விசுவாசத்தைப் பெலப்படுத்துகிறதாய் இருக்கிறது. யாக்கோபு நிருபத்தின் போதனை நடைமுறை வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமைந்திருக்கிறது.






புதிய ஏற்பாட்டில்

| | |
|---|---|
| புத்தக வரிசை எண் | 21 |
| புத்தகத்தின் பெயர் | I பேதுரு |
| எழுதியவரின்பெயர் | பேதுரு |
| அதிகாரங்கள் | 5 |
| வசனங்கள் | 105 |
| பக்கங்கள் | 5 |

**எழுதியவர் :**

இந்நிருபத்தை எழுதிய பேதுரு, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் 12 சீடர்களில் ஒருவர். இவருடைய பெயரிலேயே இப்புத்தகம் அழைக்கப்படுகிறது.

**பின்னணி:**

திருச்சபையின் ஆரம்ப காலத்தில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தவர்கள் பல விதங்களில் துன்புறுத்தப்பட்டார்கள். பல இடங்களுக்கு துரத்தப்பட்டார்கள். இவ்வாறு துரத்தப்பட்ட விசுவாசிகள் பல இடங்களில் வாழ்ந்தார்கள். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுவதின் காரணமாக பல நிந்தனைகளையும், பாடுகளையும் அனுபவித்த இத்தகைய விசுவாசிகளை ஆறுதல்படுத்தி, உற்சாகப்படுத்தி அப்போஸ்தலனாகிய பேதுரு இந்நிருபத்தை எழுதினார். இந்த நிருபத்தில் பல அறிவுரைகளையும் நாம் பார்க்க முடியும்.

**எழுதப்பட்ட காலம்: கி.பி.63**

**முக்கியச் செய்தி :**

'கிறிஸ்தவர்களின் அழைப்பு' என்ற தலைப்பு இந்நிருபத்திற்கு மிகவும் பொருத்தமானதாக அமையும். துன்பங்கள் அல்லது பாடுகளையும் பற்றி கிறிஸ்தவர்கள் எப்படிப்பட்ட கருத்து உள்ளவர்களாய் இருக்க வேண்டுமென்று இந்நிருபம் விளக்குகிறது. பாதுகாப்பற்ற பழித்துரைக்கப்படக்கூடிய சூழ்நிலைகளில் வாழும் மக்களுக்கு ஆறுதலூட்டும் கடிதமாக இந்த நிருபம் அமைந்துள்ளது.

**முக்கிய வசனம்:**

பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக் குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல் கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும் போது நீங்கள் களிகூர்ந்து மகிழும் படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள். (I பேதுரு 4:12, 13)

**முக்கிய வார்த்தைகள்:**

பாடுகள் (கடும் துன்பங்கள்), கீழ்ப்படிதல், மகிமை

**பகுப்பாய்வு: அதிகாரங்கள்**

1. வாழ்த்து, இரட்சிப்பு, பரிசுத்த வாழ்விற்கு அழைப்பு
2. ஜீவனுள்ள கற்கள், தேவனுக்கு அடிமைகளாக அடங்கியிருத்தல், நமக்கு மாதிரியாக உள்ள பாடுபட்ட கிறிஸ்து.
3. மனைவிகளுக்கும், கணவர்களுக்கும் அறிவுரை, நீதியினிமித்தம் துன்பத்தை அனுபவித்தல்.
4. பழைய வாழ்க்கையும் புதிய வாழ்க்கையும், கிறிஸ்தவர்களின் கடமைகள்.
5. மூப்பர்களுக்கான ஆலோசனை, வாலிபருக்கான அறிவுரை, முடிவான வார்த்தைகள்.

**இப்புத்தகத்தை வாசிக்கும் முறை :**

இப்புத்தகத்தில் உள்ள 5 அதிகாரங்களை வாய்விட்டு வாசிக்க 20 நிமிடங்கள் தான் ஆகும். தொடர்ச்சியாக 5 அதிகாரங்களையும் வாசிப்பது நல்லது. இந்நிருபத்தில் மீண்டும், மீண்டும் வருகிற வார்த்தைகளைக் குறித்துக் கொண்டு, அவைகளைத் தியானிப்பது அதிக உதவியாக இருக்கும்.

**அதிகாரம் 4**

*1-11* - தேவனுக்காக வாழ்தல்

*12-19* - கிறிஸ்தவர்கள் பாடு அனுபவித்தல்

**அதிகாரம் 5**

*1-11* - மூப்பர்கள், இளைஞர்கள்

*12 - 14* - வாழ்த்து

## முக்கிய வார்த்தைகள்:

| | |
|---|---|
| பாடுகள் (கடும் துன்பங்கள்), | 18 |
| கீழ்ப்படிதல் | 18 |
| மகிமை | 15 |
| விசுவாசம் | 9 |
| இரட்சிப்பு | 5 |
| பரிசுத்தம் | 9 |
| விலையேறப்பெற்ற | 6 |
| சித்தம் | 4 |
| சுதந்திரம் | 5 |
| பாவங்கள் | 6 |
| ஆத்துமா | 5 |
| சோதனை | 5 |
| ஜீவனுள்ள | 6 |
| நீதி | 3 |
| சுவிசேஷம் | 4 |
| கிருபை | 8 |
| ஆவியானவர் (ஆவி) | 9 |
| இயேசு கிறிஸ்து | 9 |
| கிறிஸ்து இயேசு | 2 |
| தேவன் | 38 |
| அழைப்பு | 5 |
| அன்பு | 5 |
| நம்பிக்கை | 5 |
| பயம் | 6 |
| வெளிப்பாடு, வெளிப்படும்போது | 8 |

அப்போஸ்தலனாகிய

# பேதுரு எழுதின பொதுவான

முதலாம் நிருபம்

### 1 அதிகாரம்

1 இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தல
னாகிய பேதுரு, பொந்து, கலாத்தியா,
கப்பத்தோக்கியா, ஆசியா, பித்தினியா
தேசங்களிலே சிதறியிருக்கிறவர்களில்,
2 பிதாவாகிய தேவனுடைய முன்னறி
வின்படியே, ஆவியானவரின் பரிசுத்த
மாக்குதலினாலே, கீழ்ப்படிதலுக்கும்
இயேசுகிறிஸ்துவினுடைய இரத்தந்
தெளிக்கப்படுதலுக்கும் தெரிந்துகொள்
ளப்பட்ட பரதேசிகளுக்கு எழுதுகிறதா
வது: கிருபையும் சமாதானமும் உங்களுக்
குப் பெருகக்கடவது.
3 நம்முடைய **கர்த்தராகிய** இயேசு
கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு
ஸ்தோத்திரம் உண்டாவதாக;
4 அவர், இயேசுகிறிஸ்து மரித்தோரி
லிருந்து எழுந்ததினாலே, அழியாததும்
மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரத்
திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை
உண்டாகும்படி, தமது மிகுந்த இரக்கத்
தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்
பித்தார்.
5 கடைசிக்காலத்திலே வெளிப்பட
ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்
புக்கு ஏதுவாக விசுவாசத்தைக்
கொண்டு தேவனுடைய பலத்தினாலே
காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்தச்
சுதந்தரம் பரலோகத்தில் வைக்கப்பட்
டிருக்கிறது.
6 இதிலே நீங்கள் மிகவும் சந்தோஷப்
படுகிறீர்கள்; என்றாலும், துன்பப்பட
வேண்டியது அவசியமானதால், இப்
பொழுது கொஞ்சக்காலம் பலவிதமான
சோதனைகளினாலே துக்கப்படுகிறீர்
கள்.
7 அழிந்துபோகிற பொன் அக்கினி
யினாலே சோதிக்கப்படும்; அதைப் பார்க்
கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்
கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு,
இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்
களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையு
முண்டாகக் காணப்படும்.
8 அவரை நீங்கள் காணாமலிருந்தும்
அவரிடத்தில் அன்புகூருகிறீர்கள்; இப்

**தேவனுடைய குணங்கள் 5**

1. மிகுந்த இரக்கமுள்ளவர்
2. பரிசுத்தர்
3. பட்சபாதமில்லாதவர்
4. நியாயந்தீர்க்கிறவர்
5. தயையுள்ளவர்

**5 தேசங்கள் :**

1. பொந்து
2. கலாத்தியா
3. கப்பத்தோக்கியா
4. ஆசியா
5. பித்தினியா

**5 விதமான தீய குணங்கள்:**

1. துர்க்குணத்தையும்
2. கபடத்தையும்
3. வஞ்சகங்களையும்
4. பொறாமைகள்
5. புறங்கூறுதல்

**5 விதமான சந்ததி :**

1. சந்ததியாயும்
2. ராஜரீகமான ஆசாரியக் கூட்டம்
3. பரிசுத்த ஜாதி
4. சொந்த ஜனமாய்
5. இரக்கம் பெற்றவர்களாய்

**5 வகையான மக்கள்:**

1. ஒருமனப்பட்டவர்களும்
2. இரக்கமுள்ளவர்களும்
3. சகோதர சிநேகமுள்ளவர்களும்
4. மன உருக்கமுள்ளவர்களும்
5. இணக்கமுள்ளவர்களுமாயிருந்து

**2 : 18 கீழ்ப்படிதல்**

1. எஜமான்களுக்குக்கும்
2. நல்லவர்களுக்கும்
3. சாந்தகுணமுள்ளவர்களுக்கும்
4. முரட்டு குணமுள்ளவர்களுக்கும்

**4 : 7 -10**

1. தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து
2. ஜெபம் பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள்.
3. ஒருவரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள்.
4. ஒருவரையொருவர் உபசரியுங்கள்.
5. ஒருவருக்கொருவர் உதவி செய்யுங்கள்.

**4 : 3**

1. துர் இச்சைகளையும் நடப்பித்து,
2. மதுபானம் பண்ணி
3. களியாட்டுச் செய்து
4. வெறிகொண்டு
5. அருவருப்பான விக்கிரகாராதனையைச் செய்து வந்தோம்.

**2 : 16 -17**

1. தேவனுக்கு அடிமைகளாயிருங்கள்
2. எல்லாரையும் கனம்பண்ணுங்கள்
3. சகோதரரிடத்தில் அன்புகூருங்கள்
4. தேவனுக்குப் பயந்திருங்கள்
5. ராஜாவைக் கனம்பண்ணுங்கள்

**அழியாதது, அழிந்துபோகிற**

1:4 அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரத்திற்கேதுவாக

3 : 4 அழியாத அலங்கரிப்பாயிருக்கிற

1:7 அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்.

1:18 அழிவுள்ள வஸ்துக்கள்

1: 23 அழிவுள்ள வித்தினாலே அல்ல அழிவில்லாத வித்தினாலே

வரிசை எண்: 22
புத்தகத்தின் பெயர்: II பேதுரு.
எழுதியவர் பெயர்: பேதுரு.
அதிகாரங்கள் 3
வசனங்கள் 61
பக்கங்கள் 3

**பின்னணி :**

ஆதித்திருச்சபையில் தவறான போதனைகளுக்குக் காரணமா யிருந்த கள்ளப்போதகர்களுக்கு விலகி, விழிப்புடன் இருக்கும்படி எச்சரித்த பேதுரு தமது முதிர்வயதில் மரணத்தை எதிர்நோக்கியிருந்த சூழ்நிலையில் இந்த நிருபத்தை எழுதினார். அந்த வகையில் இந்நிருபம் II தீமோத்தேயு நிருபத்திற்கு ஒத்திருக்கிறது. இந்நிருபத்தில் இரண்டாம் அதிகாரத்தையும் யூதா நிருபத்தையும் ஒப்பிட்டு வாசித்துப் பாருங்கள்.

**எழுதப்பட்ட காலம் :** கி. பி. 66 - 67
I பேதுரு எழுதி 3 வருடங்களுக்குப் பின்

**முக்கியச் செய்தி :**

'ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவு 'என்ற செய்தி இப்புத்தகத்திற்கு மிகவும் பொருத்தமான தலைப்பாகும். இக்கருத்து வருகிற எல்லா வசனங்களையும் கவனமாகப் படித்துப் பாருங்கள்.
வசனங்கள் (1: 2, 3, 8, 2: 20, 3: 18)

அசுத்தமும், அக்கிரமமும், ஆண்டவராகிய இயேசுவை விட்டு விலகுதலும் உள்ள கொடிய நாட்களில் பரிசுத்தமாக வாழ்வது எப்படி என்ற செய்தி விளக்கப்பட்டிருக்கிறது,

பேதுரு தமது முதல் நிருபத்தில் பாடுகளினால் துன்புற்று சோர்ந்திருந்த விசுவாசிகளுக்கு ஆறுதலும், உற்சாகமும் கொடுக்கக்கூடிய வார்த்தைகளை எழுதியிருந்தார். அவரது இரண்டாம் நிருபத்தில் அவருடைய செய்தி எச்சரிப்பின் செய்தியாக அமைந்திருக்கிறது.

**முக்கிய வசனம் :**

நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள். (3 : 18)

**முக்கிய வார்த்தைகள் :**

நினைப்பூட்டுதல், நீதி, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவு, மகிமை, இச்சை, நீதி, அக்கிரமம், தந்திரம், தேவன், தேவனுடைய, தீர்க்கதரிசனம், தீர்க்கதரிசி.

**பகுப்பாய்வு :** அதிகாரங்கள்

1. வாழ்த்து, ஆவிக்குரிய வளர்ச்சி, நினைப்பூட்டுதல். பேதுருவின் தீர்க்கதரிசன வார்த்தைகள்.
2. கள்ளப்போதகர்களின் நடத்தையும், உபதேசமும், முடிவும்.
3. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு ஆயத்தப்படுதல்.

**இப்புத்தகத்தை வாசிக்கும் முறை:**

இந்த நிருபத்தை வாய்விட்டு வாசிப்பதற்கு 10 நிமிடங்கள் மட்டுமே ஆகும். 30 நிமிடங்கள் செலவழித்து மூன்று முறை வாய்விட்டு வாசிக்க முயற்சி செய்யுங்கள்.

புதிய ஏற்பாட்டிலுள்ள 27 புத்தகங்களில் 21 புத்தகங்கள் நிருபங்களாகும். அவைகளில் 7 நிருபங்கள் பொதுவான நிருபங்கள் என்ற பிரிவைச் சேரும். அப்போஸ் தலனாகிய யோவான் 3 நிருபங்களை எழுதினார். அவைகள் முறையே Iயோவான், IIயோவான், III யோவான் என்று அழைக்கப்படுகின்றன.

**எழுதியவர் :**

அப்போஸ்தலனாகிய யோவான். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் 12 சீடர்களுள் ஒருவராவார். ஆண்டவரை மிகவும் நெருக்கமாக பின்பற்றிய இவர் 'அன்பின் சீடன்' என்று அழைக்கப்படுகிறார். சிலுவையில் அறையப்படுவதற்கு முன்னர் ஆண்டவராகிய இயேசு சீடர்களோடு கடைசியாக பந்தியிருந்த நேரத்தில் ஆண்டவராகிய இயேசுவின் மார்பில் சாய்ந்திருந்தவர் இவரே.

அப்போஸ்தலனாகிய யோவான் வயது முதிர்ந்த நிலையில் எபேசு பட்டணத்தில் இருந்தார். ஆண்டவராகிய இயேசுவின் காலத்திற்கு சுமார் 50 ஆண்டுகளுக்குப் பின்னர் சுவிசேஷத்தையும், நிருபங்களையும், வெளிப்படுத்தின விசேஷம் என்ற தீர்க்கதரிசன புத்தகத்தையும் எழுதினார். தவறான உபதேசத்தால் பாதிக்கப்பட்டிருந்த விசுவாசிகளுக்கு யோவான் இந்நிருபத்தை எழுதினார்.

**பின்னணி :**

திருச்சபை தோன்றிய ஆரம்ப காலங்களில் தவறான உபதேசங்களைப் புகுத்திய கள்ளப் போதகர்களால் சபையின் ஐக்கியமும் வளர்ச்சியும் பெரிதும் பாதிக்கப்பட்டது. சபை விசுவாசிகள் ஐக்கியத்திலும், தேவனை அறிகிற அறிவிலும் நிலைத்திருக்கவும், வளரவும் அவசியம் இருந்தது.

தவறான உபதேசத்தைப் புகுத்திய கள்ளப் போதகர்களில் ஒரு பிரிவினர் 'நாஸ்டிக்ஸ்' (Gnostics) என்று அழைக்கப்பட்டார்கள். இவர்கள் ஒரு வகையான பகுத்தறிவாளர் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள். தாங்கள் அறிவு படைத்தவர்கள் என்று மேன்மை பாராட்டி வந்தனர். இயேசுகிறிஸ்துவின் தெய்வீகத்தை ஒப்புக்கொண்ட இவர்கள் அவர் மாம்சத்தில் வந்ததை ஏற்றுக்கொள்ளவில்லை. ஜடப் பொருள்கள் எல்லாம் தீமையானது. பாவத்திற்கு காரணமானது என்று இவர்கள் நம்பினார்கள். இவர்களுடைய வாழ்க்கை பரிசுத்தமுள்ளதாயும் நீதியுள்ளதாயும் இருக்கவில்லை.

தவறான உபதேசத்தைப் போதித்த கள்ளப் போதகர்களுக்கு மறுப்பு தெரிவிக்கும் வகையில் இந்நிருபத்தை யோவான் எழுதினார். 'மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை' அப்போஸ்தலனாகிய யோவான் வலியுறுத்தி எழுதியிருப்பதைக் கவனியுங்கள். I யோவான் 1:1-4, 3;16, 4;3 வசனங்களை வாசித்துப் பாருங்கள்.

**எழுதப்பட்ட காலம்:** கி.பி. 90

**இந்நிருபத்தைப் பற்றி :**

Iயோவான் 'குடும்ப நிருபம்' என்று அழைக்கப்படுகிறது. ஒரு தகப்பன் தன் பிள்ளைகளிடத்தில் உரிமை பாராட்டி எழுதுவது போல இக்கடிதம் எழுதப்பட்டுள்ளது. பிள்ளைகளே, பிரியமானவர்களே என்ற வார்த்தை எங்கெல்லாம் வருகிறது என்று கவனியுங்கள். ஒரு குடும்பத்தில் முக்கியமான அம்சம் நெருங்கிய ஐக்கியமல்லவா?

இரட்சிக்கப்பட்ட விசுவாசிகள் இரட்சிப்பின் நிச்சயம் உடைய வர்களாக இருக்க வேண்டும். சில விசுவாசிகள் தாங்கள் இரட்சிக்கப் பட்டிருக்கிறோம் என்ற உறுதியான நம்பிக்கை இல்லாதவர்களாகவே இருக்கிறார்கள். பரிசுத்த ஆவியானவர் வேத வசனத்தைக் கொண்டு இரட்சிப்பை அருளிச் செய்திருக்கிறார். இரட்சிப்பின் அனுபவத்தை உறுதி செய்து கொள்வதற்கு I யோவான் ஒரு முக்கியமான புத்தகமாகும். அறிந்திருத்தல், நிலைத்திருத்தல் என்ற வார்த்தைகள், அவைகளோடு தொடர்புடைய வேறு வார்த்தைகள் எங்கெல்லாம் வருகிறதென்று கவனித்துப்பாருங்கள்.

பொன்,வெள்ளி போன்ற விலை உயர்ந்த உலோகங்கள் உண்மை யானவை தானா என்று சரிபார்க்க உறைகல்லை பயன்படுத்துவார்கள். உறைகல்லில் உரசிப் பார்க்கும் போது உண்மை எது என்று தெரியும். I யோவான் உறைகல் போன்ற ஒரு நிருபமாகும். கிறிஸ்தவ வாழ்க்கையில் உபதேசங்களில் உண்மை எவை என்று சோதித்து அறிய வேண்டும். I யோவான் *2:18, 24, 4;1-4* வசனங்களைப் படித்துப் பாருங்கள்.

## முக்கியச் செய்தி :

இந்நிருபத்தை அப்போஸ்தலனாகிய யோவான் ஏன் எழுதி இருக்கிறார் என்று கீழ்க்கண்ட வசனங்களைப் படித்துக் கண்டுபிடியுங்கள்.

*1:4, 2:1, 2: 26, 5 :13*

ஐக்கியம் என்ற தலைப்பில் இந்நிருபம் கருத்துக்களை விளக்குகிறது. நாம் தேவனோடும், அவருடைய வார்த்தையோடும், அவருடைய மக்களோடும் தொடர்ந்து ஐக்கியம் கொண்டிருக்க வேண்டும். இப்படிப் பட்ட ஐக்கியம் நமக்கு சந்தோஷத் தையும் வெற்றியையும், பாது காப்பையும், அறிவையும் கொடுக்கிறது.

## பகுப்பாய்வு :

| | |
|---|---|
| சந்தோஷம் நிறைந்த வாழ்க்கை | *1 : 1-10* |
| வெற்றியான வாழ்க்கை | *2 : 1-17* |
| பாதுகாக்கப்பட்ட வாழ்க்கை | *2 : 18 - 4 : 6* |
| அறிவு நிறைந்த வாழ்க்கை | *4 : 7 - 5 : 21* |

## முக்கிய அதிகாரம்: 5

## முக்கிய வார்த்தைகள்:

அப்போஸ்தலனாகிய யோவான் தாம் எழுதிய சுவிசேஷத்திலும் நிருபங்களிலும் பாவம், அன்பு, ஒளி, ஜீவன், விசுவாசம், பிதா, குமாரன், வார்த்தை, நிலைத்திருத்தல், அறிந்தி ருக்கிறோம். உலகம் போன்ற வார்த்தை களை அடிக்கடி எழுதியிருக்கிறார்.

| | |
|---|---|
| பாவம் | *28* |
| நிலைத்திருத்தல் | *21* |
| அறிந்திருக்கிறோம் | *32* |
| அன்பு | *43* |
| விசுவாசம் | *9* |
| பிள்ளைகளே | *14* |
| பிரியமானவர்களே | *5* |

சத்தியம் *15*, ஜீவன் *8*, நித்தியஜீவன் *14* எழுதுகிறேன், *13*, சாட்சி *11*

## இந்நிருபத்தை வாசிக்கும் முறை :

*5* அதிகாரங்களைக் கொண்ட இந்நிருபத்தில் *105* வசனங்கள் உள்ளன. *5* பக்கங்களில் அடங்கியுள்ள இந்நிரு பத்தை *20* நிமிடங்களில் ஒரு முறை வாய்விட்டு வாசித்து விடலாம். அப்படி ஒரு முறை வாசித்துப் பாருங்கள்.

## அதிகாரங்களின் உள்ளடக்கம்:

1. ஜீவ வார்த்தை, ஒளியில் நடத்தல்.
2. பாவ அறிக்கை, கற்பனைகளுக்கு கீழ்ப்படிதல், உலகத்தில் அன்பு கூராதிருத்தல், அந்திக் கிறிஸ்துவைப் பற்றிய எச்சரிக்கை
3. தேவனுடைய பிள்ளைகள், ஒருவரிலொருவர் அன்புகூருங்கள்.
4. ஆவிகளைச் சோதித்தறியுங்கள். தேவனுடைய அன்பும், நம்முடைய அன்பும்.
5. தேவனுடைய குமாரனிடத்தில் விசுவாசமாயிருத்தல், நிறைவான வார்த்தைகள்.

## II யோவான்

IIயோவான், III யோவான் நிருபங்கள் புதிய ஏற்பாட்டு புத்தகங்களில் மிகச் சிறிய புத்தகங் களாகும். நம்முடைய தபால் முறையில் போஸ்ட் கார்டுகளுக்கு அவைகளை ஒப்பிடலாம். இவைகள் தனிப்பட்ட விதத்தில் எழுதப்பட்டவைகளாகும்.

II யோவான் என்ற நிருபம் வயதான அம்மாள் ஒருவருக்கு எழுதப்பட்ட நிருபமாகும். ஆதித் திருச்சபையில் அவர் முக்கியமான பொறுப்பை வகித்திருக்கலாம். ஒரு குறிப்பிட்ட சபைக்கு இந்த விதமாகப் பெயரிட்டு எழுதினார் என்று சொல்லப்படுகிறது.

**பின்னணி :**

திருச்சபையின் ஆரம்ப நாட்களில் ஊர் ஊராகப் பயணம் சென்று நற்செய்தியைப் பரப்பின சுவிசேஷகர்களும் பிரசங்கம் செய்த போதகர்களும் இருந்தனர். விசுவாச வீட்டார் இவர்களுக்கு இடமளித்து உபசரிப்புச் செய்தனர். தவறான உபதேசத்தைப் புகுத்திய கள்ளப் போதகர்கள் சிலரும் இந்த வாய்ப்பை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ள முற்பட்டனர். எனவே தான் யோவான் அதைக் குறிப்பிட்டு எழுதுகிறார். வசனம் 10 எடுத்துப் படித்துப் பாருங்கள்.

‘சத்தியம்’ என்ற வார்த்தை முதல் 4 வசனங்களில் 5 முறை வருகிறது. நீங்கள் தியானிக்க வேண்டிய

**முக்கிய வசனம் :** 9

**முக்கியச் செய்தி :** சத்தியம்

## III யோவான்

இதுவும் தனிப்பட்ட ஒரு கடிதமாகும். ‘காயு’ என்ற நண்பருக்கு அப்போஸ்தலனாகிய யோவான் இக்கடிதத்தை எழுதினார். காயு என்ற பெயரில் 3 பேர் இருந்தார்கள் என்று சொல்லப்படுகிறது. அப்போஸ்தலர் 19: 29, 20 : 4 Iகொரிந்தியர் 1:15, ரோமர் 16:23 முதலிய வசனங்களை எடுத்துப் பாருங்கள். காயுவின் நற்பண்புகளைத் தியானித்துப் பாருங்கள்.

வயது முதிர்ந்த அப்போஸ்தலன் காயுவை, பிரியமானவனே என்று கனிவோடு அழைப்பதைக் கவனியுங்கள். தியோத்திரேப்பு என்பவனைப் பற்றி அப்போஸ்தலன் வருத்தமடைகிறார். அவனுடைய குறைபாடுகளை 10ஆம் வசனத்தில் படியுங்கள். 12 ஆம் வசனத்தில் தேமேத்திரியு என்பவனை அப்போஸ்தலன் பாராட்டி எழுதுகிறார்.

**முக்கியச் செய்தி :**

அன்புடன் பாராட்டுதல், உபசரிப்பு

**முக்கிய வசனம் :** 11

இந்த இரண்டு நிருபங்களையும் 5 நிமிடங்களுக்குள் ஒரு முறை வாய்விட்டு வாசித்து விடலாம்.



புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களின் வரிசை எண் : 26

**எழுதியவர் பெயர்:** யூதா, வசனங்கள்: 25

**எழுதியவர்:**

இந்நிருபத்தை எழுதிய யூதா, என்பவர் யாக்கோபு நிருபத்தை எழுதிய யாக்கோபுவின் சகோதரர் ஆவார். இவர்கள் இருவரும் ஆண்டவராகிய இயேசுவின் சகோதரர்கள். புதிய ஏற்பாட்டில் ஒரே அதிகாரத்தையுடைய 4 புத்தகங்களில் யூதா நிருபமும் ஒன்றாகும்.

**பின்னணி :**

ஆதி கிறிஸ்தவ சபையில் வாழ்ந்த சிலர் பின்மாற்றம் அடைந்தனர். இவர்கள் தாங்கள் பக்தியற்ற வழிகளில் நடந்தது மட்டுமின்றி, தவறான பொய்யான உபதேசங்களைக் கிறிஸ்தவ சபைக்குள் புகுத்த முயற்சித்தனர். பொதுவான இரட்சிப்பைப் பற்றி முதலில் எழுத விரும்பிய யூதா, மேலே சொல்லப்பட்ட தவறான உபதேசங்களுக்கு இடங்கொடாமல் விசுவாசத்தைக் காத்துக்கொண்டு போராட வேண்டும் என்று எழுதுகிறார். (வசனம்3)

**எழுதப்பட்ட காலம்:**

கி.பி. 66 லிருந்து 70 க்குள்

**முக்கியச் செய்தி:**

யூதா நிருபத்தின் செய்தி எச்சரிப்பின் தொனியில் காணப்படுகிறது. பின்மாற்றக்காரரின் பக்தியற்ற நடத்தை, போலியான வாழ்க்கை, அவர்களுக்கு வரவிருக்கும் நியாயத் தீர்ப்பு பற்றி பழைய ஏற்பாட்டு சரித்திரத்தில் இருந்து எடுக்கப்பட்ட உதாரணங்களுடன் தெளிவாக எழுதுகிறார்.

II பேதுரு 2 ஆம் அதிகாரத்தை ஒப்பிட்டு வாசித்துப் பாருங்கள்.

**முக்கிய வசனம் :**

பிரியமானவர்களே, பொதுவான இரட்சிப்பைக் குறித்து உங்களுக்கு எழுதும்படி நான் மிகவும் கருத்துள்ளவனாய் இருக்கையில் பரிசுத்தவான்களுக்கு ஒரு விசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத் திற்காக நீங்கள் தைரியமாய் போராட வேண்டுமென்று உங்களுக்கு எழுதி உணர்த்துவது எனக்கு அவசியமாகக் கண்டது. ( வசனம் 3)

**பகுப்பாய்வு :**

| | |
|---|---|
| வசனங்கள் 1-4 | விசுவாசத்திற்காகப் போராடுதல் |
| வசனங்கள் 5-7 | தேவனுடைய நியாயத் தீர்ப்பைக் குறித்துப் பழைய ஏற்பாட்டுச் சரித்திரத்திலிருந்து எச்சரிப்புகள். |
| வசனங்கள் 8-16 | கள்ளப் போதகர்கள் பற்றிய விளக்கம். |
| வசனங்கள் 17-25 | அறிவுரைகளும் ஆசீர்வாதமும். |

**இப்புத்தகத்தை வாசிக்கும் முறை :**

ஒரு பக்கத்திற்கும் சற்று அதிகமாக இருக்கும் இப்புத்தகத்தை 5 நிமிடங் களுக்குள் ஒரு முறை வாய்விட்டு வாசித்து விடலாம். தொடர்ந்து மூன்று, நான்கு முறை வாசித்துப் பாருங்கள். மீண்டும் மீண்டும் வரும் வார்த்தைகளைக் குறித்துக் கொண்டு யோசித்துப் பாருங்கள்.



**இப்புத்தகத்தை நீங்கள் வாசிக்கும் போது:**

- ✯ மூன்று மூன்றாக வரும் வார்த்தைகள், கருத்துக்களைக் கவனியுங்கள். உதாரணம் வசனம் 2இரக்கம், சமாதானம், அன்பு, வசனம் 11 காயீனுடைய வழியில் நடந்து, பிலேயாம் கூலிக்காகச் செய்த வஞ்சகத்திலே விரைந்தோடி, கோரா எதிர்த்துப் பேசின பாவத்திற்குள்ளாகி, கெட்டுப்போனார்கள்.
- ✯ நியாயத்தீர்ப்பு, ஆக்கினை என்ற கருத்துக்கள் எந்தெந்த வசனங்களில் வருகின்றன என்று கவனியுங்கள்.

  நம்முடைய தேவன் நியாயந்தீர்க்கும் தேவன்
- ✯ ஏனோக்கு கர்த்தருடைய வருகையைப் பற்றி அறிந்திருந்தார் அறிவித்தார். வசனம் 14, 15

  நீங்கள்ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தமாக இருக்கிறீர்களா?
- ✯ 20-23 வசனங்களில் நாம் செய்ய வேண்டிய 9 காரியங்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. ஒவ்வொன்றையும் குறித்து யோசித்துப் பாருங்கள்.
- ✯ 24, 25 வசனங்களைத் தேவனைத் துதிப்பதற்குப் பயன்படுத்துங்கள்.







புதிய ஏற்பாட்டின் கடைசி புத்தகமாகிய இந்தப் புத்தகம், அப்போஸ்தலனாகிய யோவானால் எழுதப்பட்டதாகும். கால வரிசைப்படி கடைசியாக எழுதப்பட்டதும் இப்புத்தகம் தான். (கி.பி.96) அப்போஸ்தலனாகிய யோவான் தன்னுடைய முதிர்வயதில் 'பத்மு' என்ற தீவிற்கு நாடு கடத்தப்பட்டு, அங்கிருக்கையில் இந்தப் புத்தகத்தை எழுதினார். கடைசிக்கால சம்பவங்களைப் பற்றிய உண்மைகள் தீர்க்கதரிசனமாக (முன்கூற்றுகளாக) எழுதப்பட்டிருக்கின்றன.

இப்புத்தகம் தரிசன வடிவில் எழுதப்பட்டுள்ளது. ஆண்டவருடைய அடியவர்கள், தெய்வீக அருளைப் பெற்று பரலோகக் காட்சிகளைக் காண்கின்றனர். இக்காட்சிகள் 'தரிசனங்கள்' என்று அழைக்கப் படுகின்றன. அப்போஸ்தலனாகிய யோவானுக்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம்மைக் குறித்த வெளிப்பாட்டைத் தரிசனமாக அருளினார். அக்காட்சியைக் கண்ட யோவான் அவற்றை ஒரு புத்தகமாக எழுதியிருக்கிறார்.

இந்தப் புத்தகத்தில் 22 அதிகாரங்கள்
404 வசனங்கள்
உள்ளன

**முக்கியச் செய்தி :**

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மகிமையாய் வெற்றி சிறந்த ராஜாதி ராஜாவாக வெளிப்படுத்தப் பட்டிருக்கிறார்.

**ஆதார வசனம்:**

1:19 ''நீ கண்டவைகளையும், இருக்கிறவைகளையும் இவைகளுக்குப் பின்பு சம்பவிப்பவைகளையும் எழுது''

வெளி1:19 இன் அடிப்படையில் இப்புத்தகம் மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

**1. நீ கண்டவைகள் :** (கடந்த காலம்)

முதலாம் அதிகாரத்தில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை மகிமை பொருந்தியவராக யோவான் காண்கிறார்.

**2.இருக்கிறவைகள் :** (நிகழ் காலம்)

இரண்டாம், மூன்றாம் அதிகாரங்களில் 7 சபைகளுக்கு ஆண்டவர் அருளிய செய்திகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து திருச்சபைகளின் தலைவராக இருக்கிறார்.

**3.இவைகளுக்குப் பின்பு நடக்க இருப்பவைகள்:** (எதிர்காலம்)

4 ஆம் அதிகாரத்தில் திருச்சபை, (விசுவாசிகள்) ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் (இரகசிய வருகையின்) போது எடுத்துக்கொள்ளப்பட்ட பின்பு சம்பவிப்பவைகளைப் பற்றி எழுதப்பட்டிருக்கின்றன.
இப்பகுதியில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பரலோகத்தில் உன்னதமானவராக வீற்றிருக்கிறதைக் காண்கிறோம். உலகத்தின் முடிவில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எல்லோரையும் நீதியாய் நியாயந்தீர்க்கிறார். துன்மார்க்கர்கள் அழிக்கப்படுகிறார்கள். சாத்தானுடைய முடிவையும், அழிவையும் குறித்துக் காண்கிறோம். ஆயிர வருட அரசாட்சியைப் பற்றியும் புதிய வானம், புதிய பூமி, பரலோகம் பற்றிய உண்மைகளையும் கூறிவிட்டு அப்போஸ்தலனாகிய யோவான் இப்புத்தகத்தை முடிக்கிறார்.

**முக்கிய வார்த்தைகள்:**

| | |
|---|---|
| சிங்காசனம் | 44 |
| ஆட்டுக்குட்டியானவர் | 27 |
| 7 எண்ணிக்கை கொண்டவை | 20 |

7 என்ற எண் பரிபூரணத்தை அல்லது நிறைவைக் குறிக்கிறது.

| | |
|---|---|
| தூதன் /தூதர்கள் | 60 |
| கடல் / சமுத்திரம் | 26 |
| பாக்கியவான்கள் | 7 |

**இப்புத்தகத்தின் சிறப்பு அம்சங்கள்:**

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றிய பல திருப்பெயர்களை இப்புத்தகத்தில் காண்கிறோம்.

7 முத்திரைகளும், 7 எக்காளங்களும், 7 கலசங்களும் நீதியாய் நியாயந்தீர்க்கும் தேவனுடைய நியாயத்தீர்ப்புகளைக் குறிக்கிறது.

| | | |
|---|---|---|
| 7 சபைகள் | அதிகாரங்கள் | 2, 3 |
| 7 முத்திரைகள் | அதிகாரம் | 6 |
| 7 எக்காளங்கள் | அதிகாரங்கள் | 8, 9 |
| 7 கலசங்கள் | அதிகாரம் | 16 |

**இந்தப் புத்தகத்தை வாசிக்கும் முறை:**

ஒரு நாளைக்கு மூன்று அதிகாரங்கள் வீதம் வாசித்தால் ஒரு வாரத்தில் இப்புத்தகத்தை வாசித்து முடித்து விடலாம். தமிழ் வேதாகமத்தில் வெளிப்படுத்தின விசேஷத்தின் 22 அதிகாரங்கள் 22 பக்கங்களில் அடங்கியுள்ளன.

**அதிகாரங்களின் உள்ளடக்கம்:**

கீழே கொடுக்கப்பட்டிருக்கும் தலைப்புகளை உங்கள் வேதாகமத்தில் அந்தந்த அதிகாரத்தின் ஆரம்பத்தில் எழுதி வைத்துக்கொள்ளுங்கள். இந்தத் தலைப்பின் கருத்துக்கள் அந்த அதிகாரத்தில் இருக்கிறதா என்று கவனமாகப் படியுங்கள். ஒவ்வொரு அதிகாரத்திற்குமான தலைப்புகளை நீங்கள் மனப்பாடமாக படித்துக்கொள்வது புத்தகம் முழுவதையும் தெளிவாக அறிந்து கொள்ள உதவியாயிருக்கும்.

1. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை மகிமை பொருந்தினவராக யோவான் கண்ட தரிசனம்.
2. எபேசு, சிமிர்னா, பெர்கமு, தியத்தீரா சபைகளுக்கு தேவனுடைய செய்தி.
3. சர்தை, பிலதெல்பியா, லவோதிக்கேயா சபைகளுக்கு தேவனுடைய செய்தி.
4. சிங்காசனத்தின் மேல் வீற்றிருந்தவரைப் பற்றிய தரிசனம். 4 ஜீவன்கள், 24 மூப்பர்கள் ஆராதித்தல்.
5. ஆட்டுக்குட்டியானவரைப் பற்றிய தரிசனம் 7 காரியங்கள்.
6. ஆறு முத்திரைகள்.
7. தெரிந்துகொள்ளப்பட்ட 1,44,000 பேர்கள்.வெள்ளையங்கி தரித்தவர்கள்.
8. நான்கு எக்காளங்கள். ஏழாம் முத்திரை, ஏழு எக்காளங்கள், மூன்றிலொரு பங்கு.
9. ஐந்தாம், ஆறாம் எக்காளங்கள், வெட்டுக்கிளிகள்.
10. சிறு புத்தகத்தைப் பற்றிய தரிசனம் இடிமுழக்கம்.
11. இரண்டு சாட்சிகள், ஏழாம் எக்காளம்.
12. பெரிய அடையாளம், பெண்ணும், ஆண்மகனும்.
13. இரண்டு மிருகங்கள்(சாத்தான்-வலுசர்ப்பம்) கள்ளத்தீர்க்கதரிசி, அந்திக்கிறிஸ்து
14. சீயோன் மலையில் 1,44,000 பேர் (5 தூதர்கள்) அறுவடை.
15. கண்ணாடிக்கடல், பரலோகத்தில் திறக்கப்பட்ட தேவாலயத்தைப் பற்றிய தரிசனம்.மோசேயின் பாட்டு.
16. ஏழு கோப கலசங்கள் ஊற்றப்படுவது.
17. பாபிலோன்.
18. பாபிலோனின் வீழ்ச்சி.
19. 7 வருட உபத்திரவகாலம் முடிவு. ஆட்டுக்குட்டியானவரின் கல்யாண விருந்து
20. 1000 வருட அரசாட்சி வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு. சாத்தானின் அழிவு.
21. புதிய வானம், புதிய பூமி, புதிய எருசலேம்.
22. ஜீவ நதி. முடிவான வார்த்தைகள்.

வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்திலிருந்து தேவனைத் துதிப்பதற்காகத் தெரிந்தெடுக்கப் பட்ட வசனங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன. அந்த வசனங்களில் (மு) என்றால் வசனத்தின் முற்பகுதி (பி) என்றால் வசனத்தின் பிற்பகுதி / என்ற கோடிட்டால் ஆண்டவருடைய திருப்பெயர் மட்டும் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இந்த வசனங்களை உங்கள் வேதாகமத்தில் குறித்துக் கொள்ளுங்கள். வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்தை வாசிக்கும் நாட்களில் இந்த வசனங்களை வாயாரச் சொல்லி தேவனைத் துதியுங்கள்.

*1 : 5, 6, 8, 13 –18*

*2 : 1பி, 8பி, 12பி, 18பி*

*3 : 1பி, 7, 14, 4 : 8பி, 9-11*

*5 : 5/,6, 7/, 8/, 9, 12,13/, 6:10*

*7 : 2/,10, 12, 15, 10 : 7*

*11 : 17  14:7 14, 15 : 3,4*

*16 : 5/, 7,17 :14/*

*19 : 1பி, 4பி, 6பி, 7மு, 11, 13, 16*

*20 : 11, 21:22, 23/*

*22 : 6/,13, 16பி*

இந்தப் புத்தகத்தில் உள்ள சில முக்கியமான வசனங்கள் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவைகளை உங்கள் வேதாகமத்தில் குறித்து வைத்துக்கொண்டு அடிக்கடி தியானியுங்கள்.

*(1 : 3, 3 : 7, 14, 20, 5 : 9, 21 : 8)*









# வார்த்தைகளும், பொருள் விளக்கமும்

| பக்கம் | வார்த்தை | பொருள் | அதிகாரம் | வசனம் |
|---|---|---|---|---|
| | | **மத்தேயு** | | |
| 3 | வம்சவரலாறு | குடும்ப வரலாறு | 1 | 1 |
| 3 | கிறிஸ்து | அபிஷேகம் பண்ணப்பட்டவர் | 1 | 16 |
| 3 | ஜெநநம் | பிறப்பு | 1 | 18 |
| 3 | கன்னிகை | பாலுறவில் ஒருபோதும் ஈடுபடாத பெண் | 1 | 23 |
| 4 | முதற்பேறு | முதல் குழந்தை | 1 | 25 |
| 4 | அறியாதிருத்தல் | பாலுறவு இல்லை | 1 | 25 |
| 4 | சாஸ்திரிகள் | வான ஆராய்ச்சியாளர்கள்,ஞானிகள் | 2 | 1 |
| 4 | சாஷ்டாங்கம் | தரையில் விழுந்து வணங்குதல் | 2 | 11 |
| 4 | ஏரோது | இயேசுவின் காலத்தில் இஸ்ரவேலை ஆண்ட அரசனின் குடும்பப் பெயர் | 2 | 16 |
| 4 | பிராணன் | உயிர் | 2 | 20 |
| 5 | நசரேயன் | நாசரேத் ஊரைச் சேர்ந்தவர் | 2 | 23 |
| 5 | அரை | இடுப்பு , இடை | 3 | 4 |
| 5 | வார்க்கச்சை | தோல் கச்சை ( பெல்ட்) | 3 | 4 |
| 5 | வெட்டுக்கிளி | இறகுள்ள பூச்சி ( லேவி 11 : 22) | 3 | 4 |
| 5 | பாதரட்சை | செருப்பு, காலணி | 3 | 11 |
| 5 | தூற்றுக் கூடை | முறம், சுளகு | 3 | 12 |
| 5 | களம் | மைதானம், தானியம் அடிக்கும் இடம் | 3 | 12 |
| 5 | விளக்கி | பெருக்கி, சுத்தம் செய்தல் | 3 | 12 |
| 5 | பதர் | விளையாத தானியம் | 3 | 12 |
| 5 | சோதனைக்காரன் | பிசாசு | 4 | 3 |
| 6 | உப்பரிகை | மேல் மாடி | 4 | 5 |
| 6 | பரிசுத்த நகரம் | எருசலேம் (நெகேமியா 11 : 1) | 4 | 5 |
| 6 | சாஷ்டாங்கம் | தரையில் விழுந்து வணங்குதல் | 4 | 9 |
| 6 | ஆராதனை | தேவனை வணங்குதல், போற்றுதல் | 4 | 10 |
| 6 | சந்திரரோகம் | வலிப்பு, இழுப்பு நோய் | 4 | 24 |
| 6 | திமிர்வாதம் | முடக்கு (பக்க) வாதம் | 4 | 24 |
| 8 | பரிச்சேதம் | சத்தியம் பண்ணுதல் | 5 | 34 |
| 8 | ஆயக்காரர் | வரிவசூல் செய்வோர் | 5 | 46 |
| 10 | அஞ்ஞானிகள் | வேறு (மாற்று) மதத்தினர் | 6 | 32 |

| பக்கம் | வார்த்தை | பொருள் | அதிகாரம் | வசனம் |
|---|---|---|---|---|
| | | **மத்தேயு** | | |
| 10 | உத்திரம் | வீட்டைத்தாங்கும் விட்டம் | 7 | 3 |
| 10 | துரும்பு | தூசி, குப்பை | 7 | 3 |
| 12 | பந்தியிருத்தல் | சாப்பிட உட்காருதல் | 8 | 11 |
| 12 | நாழிகை | நிமிஷம் | 8 | 13 |
| 12 | அஸ்தமனம் | மாலை நேரம் | 8 | 16 |
| 12 | அமைதல் | அமைதி | 8 | 26 |
| 13 | ஆயத்துறை | வரிவசூலிக்கும் இடம் | 9 | 9 |
| 13 | துருத்தி | தோலினால் செய்த பை | 9 | 17 |
| 13 | பெரும்பாடு | இரத்தப்போக்கு நோய் | 9 | 20 |
| 13 | தாரை | ஒரு இசைக் கருவி | 9 | 23 |
| 13 | நகைத்தல் | சிரித்தல் | 9 | 24 |
| 14 | சங்கதி | செய்தி | 9 | 26 |
| 14 | தொய்ந்து | சோர்பு, களைப்பு | 9 | 36 |
| 14 | கானானியன் | தீவிரவாதி | 10 | 4 |
| 14 | அங்கி | உடை | 10 | 10 |
| 15 | வினா | விவேகம், எச்சரிக்கை | 10 | 16 |
| 15 | பெயல்செபூல் | பிசாசுகளின் தலைவன் | 10 | 25 |
| 22 | ஜென்ம நாள் | பிறந்த நாள் | 14 | 6 |
| 22 | சிரச்சேதம் | தலைவெட்டப்படுதல் | 14 | 10 |
| 22 | தாலம் | தட்டு, பாத்திரம் | 14 | 11 |
| 22 | துணிக்கை | உணவுத்துண்டு | 14 | 20 |
| 22 | புருஷர்கள் | ஆண்கள் | 14 | 21 |
| 22 | ஸ்திரீகள் | பெண்கள் | 14 | 21 |
| 22 | ஒரு ஜாமத்திலே | அதிகாலை 3-6 மணி ( 3 மணிகள்) | 14 | 25 |
| 22 | ஆவேசம் | பேய், ஆவி | 14 | 26 |
| 23 | ஆசனம் | மலத்துவாரம் | 15 | 17 |
| 25 | மூப்பர்கள் | யூத ஆலோசனை சங்கத்தில் உள்ள உறுப்பினர்கள் | 16 | 21 |
| 26 | சந்திரரோகி | வலிப்பு, இழுப்பு நோய் | 17 | 15 |
| 27 | தீர்வை | வரி | 17 | 25 |
| 28 | உபாதிக்கிறவன் | தண்டனை கொடுப்பவன் | 18 | 34 |

| பக்கம் | வார்த்தை | பொருள் | அதிகாரம் | வசனம் |
|---|---|---|---|---|
| | | **மத்தேயு** | | |
| 28 | முகாந்திரம் | காரணம், நோக்கம் | 19 | 3 |
| 29 | தள்ளுதற் சீட்டு | விவாகரத்துப் பத்திரம் மண விலக்கு | 19 | 7 |
| 29 | அண்ணகர் | அலி, திருமணத்திற்கு தகுதியற்றவர் | 19 | 12 |
| 31 | பாரிசம் | பக்கம், அருகில் | 20 | 21 |
| 31 | மறி | கழுதைக்குட்டி | 21 | 4 |
| 31 | ஓசன்னா (எபி) | விடுதலை, வாழ்க | 21 | 9 |
| 33 | குத்தகை | வாடகை | 21 | 41 |
| 33 | ஜெந்து | பிராணி, மிருகம் | 22 | 4 |
| 34 | ராயன் | ரோம் மன்னர்களின் பட்டம் | 22 | 17 |
| 34 | சுரூபம் | உருவம் | 22 | 20 |
| 35 | காப்பு நாடா | பழைய ஏற்பாட்டு வசனங்களைக் கொண்ட தோலில் செய்த சிறிய பெட்டி | 23 | 5 |
| 35 | ரபீ | போதகர், குரு | 23 | 7 |
| 40 | காசுக்காரர் | வட்டிக்குப் பணம் கொடுப்பவர்கள் | 25 | 27 |
| 41 | பரிமள தைலம் | வாசனை எண்ணெய் | 26 | 7 |
| 41 | பரணி | ஜாடி, பாட்டில் | 26 | 7 |
| 42 | நவமான | புதிதான | 26 | 29 |
| 43 | ஞானதிருஷ்டி | தீர்க்கதரிசனம் எதிர்காலம் பற்றிச் சொல்லுதல் | 26 | 68 |
| 45 | கொல்கொதா | மண்டை ஓடு நிறைந்த இடம் | 27 | 33 |
| 46 | எத்து | பொய், ஏமாற்றுதல் | 27 | 64 |
| 46 | கல்லறை | மலையைக் குடைந்து பிரேதம் அடக்கம் செய்யும் இடம் | 27 | 66 |

Phone : 89030 11350, E-mail : selwynde@gmail.com

# வார்த்தைகளும், பொருள் விளக்கமும்

| பக்கம் | வார்த்தை | பொருள் | அதிகாரம் | வசனம் |
|---|---|---|---|---|
| | | <u>மாற்கு</u> | | |
| 47 | வெட்டுக்கிளி | பறக்கும் பூச்சி | 1 | 6 |
| 47 | பாதரட்சை | செருப்பு, காலணி | 1 | 7 |
| 49 | திமிர்வாதம் | முடக்கு ( பக்க) வாதம் | 2 | 3 |
| 49 | ஆயத்துறை | வரிவசூலிக்கும் இடம் | 2 | 14 |
| 50 | உபவாசம் | உண்ணா நோன்பு, விரதம் | 2 | 18 |
| 50 | மணவாளன் | மணமகன் | 2 | 19 |
| 50 | கோடித்துண்டு | புதிய துணி | 2 | 21 |
| 50 | பீறல் | கிழிந்த, கிழித்த | 2 | 21 |
| 50 | துருத்தி | தோலினால் செய்த பை | 2 | 22 |
| 50 | கொய்தல் | பிடுங்குதல், அறுத்தல் | 2 | 23 |
| 51 | கானானியன் | தீவிரவாதி | 3 | 18 |
| 53 | அசுத்த ஆவி | பிசாசு, தீய , கெட்ட ஆவி | 5 | 2 |
| 53 | லேகியோன் | 6000 வீரர்கள் உள்ள படை | 5 | 9 |
| 54 | வைத்தியர் | மருத்துவர் | 5 | 26 |
| 54 | உதிரம் | இரத்தம் | 5 | 29 |
| 54 | வஸ்திரம் | ஆடை, துணி, உடை | 5 | 30 |
| 54 | ஸ்திரீ | பெண் | 5 | 33 |
| 54 | நகைத்தல் | சிரித்தல் | 5 | 40 |
| 55 | அங்கி | ஆடை, உடை | 6 | 9 |
| 55 | ஜென்ம நாள் | பிறந்த நாள் | 6 | 21 |
| 56 | தாலம் | தட்டு, பாத்திரம் | 6 | 25 |
| 56 | சேவகன் | வீரன் , வேலைக்காரன் | 6 | 27 |
| 57 | காவற்கூடம் | சிறைச்சாலை | 6 | 28 |
| 57 | துரிதம் | வேகம், விரைவு | 6 | 45 |
| 57 | ஆவேசம் | ஆவி, பேய் | 6 | 49 |
| 57 | பிணியாளி | நோயாளி | 6 | 55 |
| 58 | கொர்பான் | காணிக்கை | 7 | 11 |
| 61 | அவிசுவாசம் | சந்தேகம் | 9 | 24 |
| 67 | கவை | கவலை | 12 | 14 |
| 70 | நளதம் | வாசனைச் செடி ( உன் 4 :13 ) | 14 | 3 |
| 70 | நள தைலம் | வாசனை எண்ணெய் | 14 | 3 |
| 70 | பரணி | ஜாடி, பாட்டில் | 14 | 3 |
| 72 | ஆலோசனை சங்கம் | யூதர்களின் சங்கம் 70 பேர் உறுப்பினர்கள் | 14 | 55 |
| 72 | முற்றம் | வாசல் | 14 | 66 |
| 75 | சுவிசேஷம் | நல்ல செய்தி | 16 | 15 |

| பக்கம் | வார்த்தை | பொருள் | அதிகாரம் | வசனம் |
|---|---|---|---|---|
| | | **லூக்கா** | | |
| 77 | களிகூருதல் | மகிழ்ச்சி , சந்தோஷம் | 1 | 47 |
| 78 | அருணோதயம் | சூரிய உதயம் | 1 | 79 |
| 79 | முன்னணை | தொட்டில் | 2 | 12 |
| 79 | விருத்தசேதனம் | ஆண் உறுப்பின் நுனித்தோலை வெட்டுதல் | 2 | 21 |
| 79 | ஜோடு | இரட்டை , இரண்டு | 2 | 24 |
| 85 | ஆயம் | வரி | 5 | 27 |
| 86 | கொய்து | பிடுங்கி, அறுத்து | 6 | 1 |
| 86 | நிமிட்டி | தேய்த்து, நசுக்கி | 6 | 1 |
| 86 | அப்போஸ்தலர்கள் | அனுப்பப்பட்டவர்கள் | 6 | 13 |
| 86 | செலோத்தே | தீவிரவாதி | 6 | 15 |
| 99 | தசமபாகம் | ஒருவரின் வருமானத்தில் பத்தில் ஒரு பங்கு தேவனுக்கு காணிக்கை கொடுப்பது | 11 | 42 |
| 99 | வந்தனம் | வணக்கம், வாழ்த்து | 11 | 43 |
| 104 | நீர்க்கோவை | அசுத்த நீர் உடலில் சுரப்பதால் உடல் வீங்குதல் | 14 | 2 |
| 104 | நியாய சாஸ்திரிகள் | சட்ட வல்லுனர்கள் | 14 | 3 |
| 105 | அகத்தியம் | அவசியம் , கட்டாயம் | 14 | 18 |
| 105 | சீஷன் | இயேசுவைப் பின்பற்றி கற்றுக்கொள்ளுகிறவன் | 14 | 26 |
| 107 | உக்கிராணக்காரன் | மேற்பார்வையாளர் | 16 | 1 |
| 108 | சம்பிரமம் | ஆடம்பரம் | 16 | 19 |
| 108 | எந்திரக்கல் | மாவு அரைக்கும் கல் | 17 | 2 |
| 109 | ஐயர் | குரு, ஐயா | 17 | 13 |
| 112 | இரட்சிப்பு | விடுதலை, காப்பாற்றுதல் | 19 | 9 |
| 112 | திரவியம் | தங்கம், செல்வம், பணம் | 19 | 15 |
| 118 | உபகாரிகள் | மக்கள் தலைவர்கள் , தொண்டர்கள் | 22 | 25 |
| 121 | சிலுவை | கூட்டல் குறிபோல் மரத்தினால் செய்தது | 23 | 39 |

Phone: 89030 11350, E-mail : selwynde@gmail.com

| பக்கம் | வார்த்தை | பொருள் | அதிகாரம் | வசனம் |
|---|---|---|---|---|
| | | **யோவான்** | | |
| 126 | அற்புதம் | இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒரு செயல் | 2 | 11 |
| 128 | யூதர் | இஸ்ரேல் நாட்டு மக்கள் | 4 | 9 |
| 129 | போஜனம் | உணவு | 4 | 31 |
| 130 | உலக இரட்சகர் | உலகைக் காப்பாற்றுகிறவர், உலகை விடுதலை செய்கிறவர் | 4 | 42 |
| 133 | முத்தரித்தல் | அடையாளம், முத்திரை | 6 | 27 |
| 133 | மன்னா | தூதர்களின் உணவு | 6 | 31 |
| 137 | வேதபாரகர் | வேத விரிவுரையாளர் | 8 | 3 |
| 137 | ஒளி | வெளிச்சம் | 8 | 12 |
| 142 | தொழுவம் | ஆடுகள் தங்குமிடம் | 10 | 16 |
| 142 | மந்தை | ஆட்டுக் கூட்டம் | 10 | 16 |
| 143 | நித்திரை | மரணம், தூக்கம் | 11 | 11 |
| 144 | உயிர்த்தெழுதல் | செத்த பிறகு உயிருடன் வருதல் | 11 | 25 |
| 147 | அரை | இடுப்பு, இடை | 13 | 4 |
| 156 | வார் | மிருக தோலினால் செய்த சவுக்கு | 19 | 1 |
| 156 | முடி | கிரீடம் | 19 | 2 |
| 156 | சிரசு | தலை | 19 | 2 |
| 156 | அங்கி | உடை | 19 | 2 |
| 156 | ராயன் | ரோம் மன்னர்களின் பட்டம் | 19 | 12 |
| 156 | பஸ்கா | (கடந்து செல்லுதல்) யூதர்களின் பண்டிகை | 19 | 14 |
| 156 | கபால ஸ்தலம் | மண்டை (தலை) ஓடு நிறைந்த இடம் | 19 | 17 |
| 156 | நசரேயன் | நாசரேத் ஊரைச் சேர்ந்தவர் | 19 | 19 |
| 157 | கடற்காளான் | கடற்பஞ்சு , நீரை உறிஞ்சும் தாவரம் | 19 | 29 |
| 157 | ஈசோப்பு | ஒருவகை நாணல் | 19 | 29 |
| 157 | அந்தரங்கம் | இரகசியம் | 19 | 38 |
| 157 | ஆயத்த நாள் | வெள்ளிக்கிழமை | 19 | 42 |
| 158 | ரபூனி ( எபி) | போதகர் ( ஆசிரியர்) | 20 | 16 |

| பக்கம் | வார்த்தை | பொருள் | அதிகாரம் | வசனம் |
|---|---|---|---|---|
| | | **அப்போஸ்தலர் நடபடிகள்** | | |
| 160 | பிரபந்தம் | புத்தகம் | 1 | 2 |
| 160 | திருஷ்டாந்தம் | நிருபணம், சான்று, ஆதாரம் | 1 | 3 |
| 160 | ஜலம் | தண்ணீர் | 1 | 4 |
| 161 | ஆதீனம் | ஆளுகை, அதிகார எல்லைப்பகுதி | 1 | 7 |
| 161 | ஓய்வு நாள் பிரயாண துாரம் | 2 மைல் ( யோவான் 11 :18 ) | 1 | 12 |
| 161 | ஓய்வுநாள் | சனிக்கிழமை | 1 | 12 |
| 162 | பெந்தெகொஸ்தே | 50ஆவது நாள், யூதப் பண்டிகை | 2 | 1 |
| 162 | சடிதியாய் | திடீரென்று | 2 | 2 |
| 162 | பிரமித்தல் | திகைப்பு, திடுக்கிடுதல் | 2 | 7 |
| 162 | ஜென்ம பாஷை | தாய்மொழி | 2 | 8 |
| 162 | நிர்ணயம் | திட்டம், தீர்மானம், நோக்கம் | 2 | 23 |
| 163 | உபாதி | வேதனை | 2 | 24 |
| 165 | சதுசேயர் | தூதர் , அற்புதம், உயிர்த்தெழுதலை நம்பாத யூதப்பிரிவினர் (அப் 23 :8 ) | 4 | 1 |
| 165 | வேதபாரகர் | வேத விரிவுரையாளர் | 4 | 5 |
| 165 | பிரதானஆசாரியர் | யூத மார்க்கத் தலைவர் | 4 | 6 |
| 165 | உபகாரம் | உதவி | 4 | 9 |
| 165 | பேதைமை | அறியாமை | 4 | 13 |
| 165 | சொஸ்தம் | சுகம் | 4 | 14 |
| 166 | விருதா | வீண் | 4 | 25 |
| 166 | அபிஷேகம் | சிறப்பான பணிக்கு தேர்வு செய்யப்பட்ட ஒருவர் மீது எண்ணெய் ஊற்றுதல் - பூசுதல் | 4 | 28 |
| 166 | காணியாட்சி | முன்னோரின் சிறிய சொந்த நிலம் | 5 | 1 |
| 166 | வசம் | சொந்தம், உரிமை | 5 | 4 |
| 170 | திவ்ய சவுந்தர்யம் | தெய்வீக அழகு, பேரழகு | 7 | 20 |
| 170 | சாஸ்திரம் | கலை- அறிவியல் கல்வி | 7 | 22 |
| 170 | சஞ்சரித்தல் | வாழுதல், வசித்தல் | 7 | 29 |
| 170 | வனாந்திரம் | பாலைவனம் | 7 | 30 |
| 170 | திருவுளம் | தேவன் பேசுதல், தேவ திட்டம் | 7 | 32 |
| 171 | சொரூபம் | உருவம் | 7 | 43 |
| 171 | வஸ்திரம் | ஆடை, உடை | 7 | 58 |
| 172 | திமிர்வாதம் | முடக்கு (பக்க) வாதம் | 8 | 7 |

| பக்கம் | வார்த்தை | பொருள் | அதிகாரம் | வசனம் |
|---|---|---|---|---|
| | | **அப்போஸ்தலர் நடபடிகள்** | | |
| 172 | பிச்சு | கசப்பு | 8 | 23 |
| 173 | பொக்கிஷம் | பொருள், செல்வம் | 8 | 27 |
| 173 | ராஜஸ்திரீ | ராணி, அரசி | 8 | 27 |
| 173 | ஆகமம் | புத்தகம் | 8 | 28 |
| 173 | நிருபம் | கடிதம் | 9 | 2 |
| 175 | திமிர்வாதம் | முடக்குவாதம் , பக்கவாதம் | 9 | 33 |
| 175 | தரிசனம் | இயல்பான பார்வைக்கு அப்பாற்பட்டு பார்க்கப்படும் காரியங்கள் | 10 | 3 |
| 176 | ஞானதிருஷ்டி | தரிசனம் காட்சி | 10 | 10 |
| 176 | துப்பட்டி | போர்வை | 10 | 11 |
| 176 | உபசாரம் | உபசரித்தல் , விருந்து கொடுத்தல் | 10 | 23 |
| 179 | கிறிஸ்தவன் | கிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக்கொண்டு, பின்பற்றி , அவரைப் போல் வாழ்பவன் | 11 | 26 |
| 179 | அரை | இடுப்பு , இடை | 12 | 8 |
| 179 | பாதரட்சை | செருப்பு, காலணி | 12 | 8 |
| 180 | தேசாதிபதி | ஆளுநர், ஆட்சி செய்கிறவர் | 13 | 1 |
| 186 | இரத்தாம்பரம் | ஊதா நிறப்பட்டு, உயர்ந்த துணி | 16 | 14 |
| 186 | தொழுமரம் | மரத்தினால் செய்த கால் விலங்கு | 16 | 24 |
| 187 | நித்திரை | தூக்கம் | 16 | 27 |
| 187 | திருஷ்டாந்தம் | ஆதாரம், சான்று | 17 | 3 |
| 187 | அமளி | கலகம், குழப்பம் | 17 | 5 |
| 188 | ஜாமீன் | உத்திரவாதம், அபராதத் தொகை | 17 | 9 |
| 188 | மனோ வாஞ்சை | உற்சாகம் , ஆர்வம் | 17 | 11 |
| 188 | சம்பாஷனை | உரையாடல் , பேச்சு | 17 | 17 |
| 188 | ஞானிகள் | தத்துவ அறிஞர்கள் | 17 | 18 |
| 188 | நூதனம் | புதிய , நவீனம் | 17 | 20 |
| 188 | நவமான | புதிய | 17 | 21 |
| 188 | தேவ பக்தி | அதிக (தேவதை) பக்தி, மூடபக்தி | 17 | 22 |
| 189 | யுக்தி | திறமை | 17 | 29 |
| 189 | விகற்பம் | முரண்பாடு, எதிரான | 18 | 13 |
| 189 | எத்தனம் | முயற்சி | 18 | 14 |
| 190 | தலைச்சவரம் | மொட்டை அடித்தல் | 18 | 18 |
| 190 | வித்தியாசாலை | பள்ளி , கல்வி நிலையம் | 19 | 9 |

| பக்கம் | வார்த்தை | பொருள் | அதிகாரம் | வசனம் |
|---|---|---|---|---|
| | | **அப்போஸ்தலர் நடபடிகள்** | | |
| 191 | உறுமால் | தலையில் கட்டும் துணி | 19 | 12 |
| 191 | தேசாந்தரிகள் | நாடோடிகள் | 19 | 13 |
| 191 | நிருவாணி | நிர்வாணம் , உடை இல்லாத | 19 | 21 |
| 191 | நிருணயம் | நோக்கம், திட்டம், தீர்மானம் | 19 | 21 |
| 191 | அரங்கசாலை | கலையரங்கம் , மண்டபம் | 19 | 29 |
| 192 | அமளி | குழப்பம், கொந்தளிப்பு | 19 | 32 |
| 192 | சம்பிரதி | செயலர் | 19 | 35 |
| 192 | கோவிற்பரிசாரகி | ஆலயகாவலர், காவல் பட்டணம் | 19 | 35 |
| 192 | அப்பம் பிட்குதல் | திருவிருந்து, இராப்போஜனம் | 20 | 7 |
| 192 | நித்திரை | தூக்கம் | 20 | 9 |
| 192 | மரித்தல் | மரணம், இறப்பு | 20 | 9 |
| 193 | ஊர்த்துறை | தங்குமிடம் | 20 | 16 |
| 193 | கண்காணி | மேற்பார்வையாளர் | 20 | 28 |
| 194 | துறைபெயர்தல் | துறைமுகம் விட்டுப் புறப்படுதல் | 21 | 1 |
| 195 | அபத்தம் | பொய் | 21 | 24 |
| 196 | நிருபம் | கடிதம் | 22 | 5 |
| 196 | கைலாகு | கைகொடுத்தல் | 22 | 11 |
| 196 | திருவாய்மொழி | தேவ வார்த்தை, பரிசுத்த வார்த்தை | 22 | 14 |
| 197 | முகாந்திரம் | காரணம், நோக்கம் | 22 | 24 |
| 197 | வைகிறாயா ? | திட்டுகிறாயா? | 23 | 4 |
| 197 | தீது | தீமை | 23 | 5 |
| 198 | சர்ப்பனை | சதித்திட்டம் | 23 | 16 |
| 199 | நியாயசாதுரியன் | சட்ட வல்லுனர் | 24 | 1 |
| 199 | பிராது | குற்றச்சாட்டு, வழக்கு | 24 | 1 |
| 199 | பூச்சக்கரம் | பூமி, உலகம் | 24 | 5 |
| 199 | யதார்த்தம் | உண்மை | 24 | 9 |
| 200 | நியாயாசனம் | நீதிபதியின் இருக்கை ( நாற்காலி) | 25 | 6 |
| 201 | அபயம் | உதவி, அடைக்கலம் | 25 | 11 |
| 201 | நியாய ஸ்தலம் | நீதி மன்றம் | 25 | 23 |
| 202 | சமயபேதம் | மதத்தின் உட்பிரிவு | 26 | 5 |
| 203 | பட்டாளம் | ராணுவம் | 27 | 1 |
| 204 | மாலுமி | கப்பல் ஓட்டுகிறவன் | 27 | 11 |

| பக்கம் | வார்த்தை | பொருள் | அதிகாரம் | வசனம் |
|---|---|---|---|---|
| | | **அப்போஸ்தலர் நடபடிகள்** | | |
| 204 | யூரோக்கிலிதோன் | வாடைக்காற்று | 27 | 14 |
| 204 | விழுது விடுதல் | கடலின் ஆழத்தைக் கணக்கிடுதல் | 27 | 28 |
| 204 | (ஒரு) பாகம் | 6 அடி | 27 | 28 |
| 204 | பின்னணியம் | பின்புறப் பகுதி , பின்னால் | 27 | 29 |
| 204 | முன்னணியம் | முன்புறப் பகுதி , முன்னால் | 27 | 30 |
| 205 | சுக்கான் | கப்பலை ஓட்டப் பயன்படும் கருவி | 27 | 40 |
| 205 | அனலுறைத்தல் | தீயினால் சூடு பிடித்தல் | 28 | 3 |
| 205 | மிதுனம் | இரட்டைக் கடவுள் | 28 | 11 |

| பக்கம் | வார்த்தை | பொருள் | அதிகாரம் | வசனம் |
|---|---|---|---|---|
| | | **ரோமர்** | | |
| 207 | சுதன் | மகன் | 1 | 5 |
| 208 | ரூபம் | உருவம் | 1 | 23 |
| 208 | இச்சை, ரோகம் | பால்வினை நோய், பாலுறவு வியாதி | 1 | 26 |
| 208 | விரகதாபம் | காமவெறி | 1 | 27 |
| 208 | குரோதம் | மனதில் மறைந்துள்ள கெட்ட எண்ணம், கோபம் | 1 | 29 |
| 208 | வன்மம் | கசப்பான விரோதம் | 1 | 29 |
| 208 | துராகிருதம் | கெட்ட செயல் | 1 | 30 |
| 208 | இணங்காதவர் | பொறுத்து, தாழ்ந்து, ஒத்துப் போகாதவர் | 1 | 31 |
| 209 | உபாத்தியாயன் | ஆசிரியர் | 2 | 20 |
| 210 | சத்தியபரர் | உண்மை, சத்தியம் உள்ளவர் | 3 | 4 |
| 210 | நியாயப்பிரமாணம் | நீதிச் சட்டம் , சட்ட நூல் | 3 | 19 |
| 212 | அரிது | கடினம் | 5 | 7 |
| 212 | ஒப்புரவு | உறவு ஒற்றுமை | 5 | 11 |
| 213 | கிருபை | தேவன் நமக்கு கொடுக்கும் நமது தகுதிக்கு அப்பாற்பட்ட மன்னிப்பு , கருணை, இரக்கம் | 5 | 20 |
| 216 | அப்பா | தந்தையைக் குறிக்கும் அரமேய மொழி வார்த்தை | 8 | 15 |
| 216 | சுயாதீனம் | சுதந்திரம் , விடுதலை | 8 | 20 |
| 216 | சுய இஷ்டம் | சொந்த விருப்பம் | 8 | 21 |
| 216 | மாயை | மாயம் , ஒன்றுமில்லை | 8 | 21 |
| 216 | புத்திரசுவிகாரம் | குழந்தை தத்தெடுத்தல் | 8 | 23 |
| 212 | திருஷ்டாந்தம் | ஆதாரம், சான்று | 9 | 22 |
| 219 | ஐசுவரியசம்பன்னர் | பாக்கியர், ( நிறைவானவர்) | 10 | 12 |
| 220 | உடன்படிக்கை | ஒப்பந்தம் | 11 | 27 |
| 222 | பதார்த்தம் | உணவுப்பொருள் | 14 | 2 |
| 222 | புசித்தல் | சாப்பிடுதல் | 14 | 2 |
| 223 | சமுசயம் | சந்தேகம் | 14 | 23 |

| பக்கம் | வார்த்தை | பொருள் | அதிகாரம் | வசனம் |
|---|---|---|---|---|
| | | **I கொரிந்தியர்** | | |
| 226 | தேவனுடைய சபை | கிறிஸ்தவர்கள் ஆண்டவரை வணங்கும் இடம் | 1 | 2 |
| 229 | உக்கிராணக்காரன் | நிர்வாகி, அறங்காவலர் | 4 | 2 |
| 230 | உபாத்தியாயர் | ஆசிரியர் | 4 | 15 |
| 232 | கிரயம் | விலை | 6 | 20 |
| 232 | வேசித்தனம் | திருமணம் செய்தவர், திருமணம் செய்த மற்றவரோடு தவறான உறவு | 7 | 2 |
| 232 | விரதத்துவம் | சுய அடக்கம், கட்டுப்பாடு | 7 | 5 |
| 232 | கைம்பெண் | விதவை | 7 | 8 |
| 232 | விவாகம் | திருமணம் | 7 | 9 |
| 234 | தண்டிலே சேவகம் | ராணுவப் பணி | 9 | 7 |
| 235 | உக்கிராணம் | பொறுப்பு, கடமை | 9 | 17 |
| 235 | சிலம்பம் | குத்துச்சண்டை ( IIசாமு 2 : 14) | 9 | 26 |
| 235 | திருஷ்டாந்தம் | எடுத்துக்காட்டு, உதாரணம் | 10 | 6 |
| 236 | விக்கிரகாராதனை | சிலை, சிற்பங்களை வணங்குதல் | 10 | 14 |
| 240 | சுரமண்டலம் | ஒரு இசைக்கருவி | 14 | 7 |
| 242 | கேபா | பேதுரு | 15 | 5 |
| 242 | அகாலப் பிறவி | குறைப் பிரசவ குழந்தை | 15 | 8 |
| 242 | விருதா | வீண் | 15 | 14 |
| 243 | மச்சம் | மீன் | 15 | 39 |
| 244 | தர்மப் பணம் | நன்கொடை | 16 | 1 |
| 244 | உபகாரம் | உதவி, நன்கொடை | 16 | 3 |

| பக்கம் | வார்த்தை | பொருள் | அதிகாரம் | வசனம் |
|---|---|---|---|---|
| | | **II கொரிந்தியர்** | | |
| 246 | முத்தரித்தல் | முத்திரை, அடையாளம் | 1 | 22 |
| 246 | அச்சாரம் | அடையாளம், உறுதி | 1 | 22 |
| 246 | நற்கந்தம் | நறுமணம், நல்ல வாசனை | 2 | 15 |
| 247 | உபசார நிருபம் | சிபாரிசு, நற்சாட்சி, அறிமுகக் கடிதம் | 3 | 1 |
| 249 | ஸ்தானாபதி | தூதுவர், பிரதிநிதி | 5 | 20 |
| 249 | எத்தர் | வஞ்சகர், பொய்யர் | 6 | 8 |
| 249 | நிஜஸ்தர் | உண்மையுள்ளவர் | 6 | 8 |
| 250 | அவிசுவாசி | இயேசுவை விசுவாசியாதவர் | 6 | 14 |
| 250 | பேலியாள் | பிசாசு, சாத்தான் | 6 | 15 |
| 250 | லௌகீகம் | உலகப் (ரீதியான) பிரகாரமான | 7 | 10 |
| 251 | உதாரத்துவம் | தாராள மனதுடன் உதவுதல் | 8 | 2 |
| 252 | லோபத்தனம் | கஞ்சத்தனம் | 9 | 5 |
| 253 | அரண் | பாதுகாப்பு, உறுதி | 10 | 4 |
| 253 | பாரயோசனை | புரிந்துகொள்ளக் கடினமான செய்தி | 10 | 10 |
| 254 | மிலாறு | சவுக்கு | 11 | 25 |
| 256 | உபாயம் | தந்திரம் | 12 | 16 |
| 256 | பொழிவு | ஆதாயம், லாபம் | 12 | 17 |
| | | **கலாத்தியர்** | | |
| 257 | பிரபஞ்சம் | உலகம், பூமி | 1 | 4 |
| 260 | வியர்த்தம் | வீண் | 3 | 17 |
| 260 | உபாத்தியாய் | ஆசிரியர், வழிகாட்டி | 3 | 24 |
| 260 | அப்பா | தந்தையைக் குறிக்கும் அரமேயு மொழிச்சொல் | 4 | 6 |
| 262 | இச்சையடக்கம் | சுயகட்டுப்பாடு | 5 | 23 |
| | | **பிலிப்பியர்** | | |
| 271 | வர்த்தனை | பெருக்கம், வளர்ச்சி | 1 | 26 |
| 271 | மருளாதிருத்தல் | பயப்படாமல் | 1 | 27 |
| | | **I தெசலோனிக்கேயர்** | | |
| 281 | பாண்டம் | பாத்திரம், உடல் | 4 | 5 |

| பக்கம் | வார்த்தை | பொருள் | அதிகாரம் | வசனம் |
|---|---|---|---|---|
| | | **II தெசலோனிக்கேயர்** | | |
| 283 | பிரதிபலன் | பரிசு, வெகுமதி | 1 | 6 |
| 283 | ஆக்கினை | தண்டனை | 1 | 7 |
| 283 | ஜுவாலித்தல் | தீப்பிழம்பு | 1 | 8 |
| 283 | நித்திய அழிவு | முடிவில்லாத அழிவு | 1 | 10 |
| 283 | சித்தம் | விருப்பம், திட்டம் | 1 | 12 |
| 283 | கிரியை | செயல் | 1 | 12 |
| 284 | அன்றியும் | மேலும், மறுபடியும் | 2 | 1 |
| 284 | நிருபம் | கடிதம் | 2 | 2 |
| 284 | விசுவாசதுரோகம் | நம்பிக்கைக்குப் பதிலாக தீமை செய்தல் | 2 | 3 |
| 284 | உபதேசித்த முறை | கற்றுக் கொடுத்த வழிமுறை | 2 | 15 |
| 284 | நற்கிரியை | நல்ல செயல், காரியம் | 2 | 17 |
| 284 | பரம்புதல் | பரவுதல், விரிவடைதல் | 3 | 1 |
| 284 | துர்க்குணம் | கெட்ட புத்தி மனிதர்கள் | 3 | 2 |
| 285 | வீண் அலுவற்காரர் | சோம்பேறிகள் | 3 | 11 |
| 285 | அமைதல் | அமைதி | 3 | 12 |
| 285 | நிருபம் | கடிதம் | 3 | 14 |
| 285 | கலவாதிருங்கள் | பழக (அல்லது) சேர (அல்லது) உறவு கூடாது | 3 | 14 |
| 285 | சத்துரு | பகைவன், எதிரி | 3 | 15 |
| | | **I தீமோத்தேயு** | | |
| 286 | அழிவில்லாத | மரணமே இல்லை | 1 | 17 |
| 288 | மூப்பர் சங்கம் | தேவனுடைய சபை வளர்ச்சிக்காக அறிவு, அனுபவம், வயது முதிர்ந்த விசுவாசிகள் குழு | 4 | 14 |
| 289 | பிராது | குற்றச்சாட்டு | 5 | 19 |
| 290 | சமுசயம் | சந்தேகம் | 6 | 4 |
| | | **II தீமோத்தேயு** | | |
| 292 | போர்ச்சேவகன் | ராணுவ வீரன் | 2 | 3 |
| 292 | தண்டில் சேவகம் | ராணுவத்தில் வேலை | 2 | 4 |
| 292 | சேவகமெழுதிக் கொண்டவர் | வேலை கொடுத்தவர், மேலதிகாரி | 2 | 4 |
| 292 | மல்யுத்தம் | குத்துச் சண்டை | 2 | 5 |
| 292 | பாலியம் | வாலிபம் , இளமை | 2 | 22 |
| 292 | இச்சை | ஆசை , விருப்பம் | 2 | 22 |
| 292 | அயுக்தம் | முட்டாள்தனம், அறிவில்லாத | 2 | 23 |
| 293 | செவித்தினவு | காதுக்கு விருப்பமானவைகளை கேட்டல் | 4 | 3 |

| பக்கம் | வார்த்தை | பொருள் | அதிகாரம் | வசனம் |
|---|---|---|---|---|
| | | **தீத்து** | | |
| 294 | அப்போஸ்தலர்கள் | அனுப்பப்பட்டவர்கள் | 1 | 1 |
| 294 | உத்தம குமாரன் | உண்மையுள்ள மகன் | 1 | 1 |
| 294 | நித்திய ஜீவன் | மெய் வாழ்வு, முடிவில்லாப் பெருவாழ்வு | 1 | 3 |
| 295 | மூப்பர் | சபையில் உள்ள ஊழியர், திருச்சபைத் தலைவர் | 1 | 5 |
| 295 | கண்காணியானவன் | மேற்பார்வையாளர் | 1 | 7 |
| 295 | உக்கிராணக்காரன் | ஊழிய பொறுப்பாளர், அறங்காவலர் | 1 | 7 |
| 295 | இஷ்டம் | ஆசை, விருப்பம் | 1 | 7 |
| 295 | இழிவான ஆதாயம் | பிறரை ஏமாற்றிப் பணம் பெறுதல் | 1 | 7 |
| 295 | இச்சித்தல் | ஆசைப்படுதல் | 1 | 7 |
| 295 | உபசரித்தல் | விருந்து கொடுத்தல் | 1 | 8 |
| 295 | இச்சையடக்கம் | கட்டுப்பாடு | 1 | 8 |
| 295 | விருத்தசேதனம் | ஆண் உறுப்பின் தோல் வெட்டுதல் | 1 | 10 |
| 295 | தகாதவை | பயனற்றது, ஏற்றுக்கொள்ள முடியாதவை | 1 | 11 |
| 295 | உபதேசித்தல் | கற்றுக்கொடுத்தல் | 1 | 11 |
| 295 | முகாந்திரம் | நோக்கம் , காரணம் | 1 | 13 |
| 295 | கிரியை | செயல்கள் | 1 | 16 |
| 295 | புருஷர்கள் | ஆண்கள் | 2 | 2 |
| 295 | ஸ்திரீகள் | பெண்கள் | 2 | 3 |
| 295 | அவதூறு | புறங்கூறுதல் | 2 | 3 |
| 295 | தூஷித்தல் | பழிச்சொல் | 2 | 4 |
| 295 | பாலியஸ்திரீகள் | இளம்பெண்கள் | 2 | 4 |
| 295 | படிப்பித்தல் | கற்றுக்கொடுத்தல் | 2 | 5 |
| 295 | நற்கிரியை | நல்ல செயல் | 2 | 7 |
| 295 | விகற்பம் | வேறுபாடு, எதிரான முரண்பாடு | 2 | 8 |
| 296 | பிரசன்னம் | வருகை, வெளிப்பாடு | 2 | 11 |
| 296 | அவபக்தி | பக்தி இல்லாத | 2 | 12 |
| 296 | லௌகீக இச்சை | உலகப்பற்று , ஆசை | 2 | 12 |
| 296 | ஜீவனம் | வாழ்க்கை | 2 | 12 |
| 296 | துரைத்தனம் | அதிகாரம், அதிகாரி, அரசு | 3 | 1 |
| 296 | மறுஜென்ம முழுக்கு | புதுபிறப்பு, திருமுழுக்கு , மறுபிறப்பு | 3 | 5 |
| 296 | சம்பூரணம் | நிறைவாக, அதிகமாக | 3 | 7 |

| பக்கம் | வார்த்தை | பொருள் | அதிகாரம் | வசனம் |
|---|---|---|---|---|
| | | **தீத்து** | | |
| 296 | அப்பிரயோஜனம் | பயன் இல்லாத, வீண் | 3 | 9 |
| 296 | வேதப்புரட்டன் | தேவ வார்த்தையை தவறாகப் போதிப்பவன் | 3 | 10 |
| 296 | புத்தி | அறிவுரை , எச்சரிக்கை | 3 | 10 |
| 296 | ஆக்கினைத் தீர்ப்பு | கடுந்தண்டனை | 3 | 11 |
| 296 | மாரிக்காலம் | மழைக்காலம் | 3 | 12 |
| 296 | நியாயசாஸ்திரி | வழக்கறிஞர் | 3 | 13 |
| 296 | நற்கிரியை | நல்ல செயல், நல்ல காரியம் | 3 | 14 |
| | | **பிலேமோன்** | | |
| 297 | போர்ச்சேவகன் | ராணுவ வீரன் | 1 | 2 |
| 297 | அந்நியோந்நியம் | நட்புறவு , பகிர்ந்து கொள்ளுதல் | 1 | 6 |
| 297 | கட்டப்பட்டவர்கள் | கைதி, கைவிலங்கு மாட்டப்பட்டவர்கள் | 1 | 8 |
| 297 | மன்றாடுதல் | வேண்டுகோள், விண்ணப்பம் | 1 | 9 |
| 297 | பிரயோஜனம் | பயன், உதவி | 1 | 11 |
| 297 | சம்மதி | அனுமதி , விருப்பம் | 1 | 14 |
| 297 | ஐக்கியம் | நட்புறவு , ஒற்றுமை | 1 | 17 |
| 297 | இணங்குதல் | ஒப்புக்கொள்ளுதல், ஏற்றுக்கொள்ளுதல் | 1 | 21 |
| 298 | அநுக்கிரகம் | நன்மை , உதவி | 1 | 22 |
| | | **எபிரெயர்** | | |
| 299 | உத்தரித்தல் | ருசித்தல், அனுபவித்தல் | 2 | 9 |
| 300 | அரோசித்தல் | வெறுத்தல் | 3 | 10 |
| 301 | ஆசாரியன் | தலைமை குரு,தேவாலயத்தில் பணி செய்கிறவர் | 5 | 10 |
| 301 | ஞானேந்திரியம் | காரியங்களை தெளிவாக அறிதல் | 5 | 14 |
| 303 | பிணையாளி | உத்திரவாதி | 7 | 22 |
| 305 | மத்தியஸ்தர் | நடுவர், இடையீட்டாளர் | 9 | 15 |
| 305 | மரண சாதனம் | உயில், இறுதி விருப்பம் | 9 | 16 |
| 308 | பார்வோன் | எகிப்து நாட்டு மன்னர்களின் பட்டப் பெயர் | 11 | 24 |
| | | **யாக்கோபு** | | |
| 313 | ஜநிப்பித்தார் | பிறக்கச் செய்தார் | 1 | 18 |
| | | **I பேதுரு** | | |
| 319 | பிரீதி | அங்கீகாரம், நன்றி ஒப்புக்கொள்ளுதல் | 2 | 19 |
| | | **I யோவான்** | | |
| 326 | அந்திக்கிறிஸ்து | கிறிஸ்துவுக்கு எதிரி | 2 | 18 |

| பக்கம் | வார்த்தை | பொருள் | அதிகாரம் | வசனம் |
|---|---|---|---|---|
| | | **II யோவான்** | | |
| 330 | சத்தியம் | உண்மை | | 1 |
| 330 | நேசித்தல் | அன்புகாட்டுதல் | | 1 |
| 330 | தெரிந்துகொள்ளப்பட்ட | தேர்வுசெய்யப்பட்ட | | 2 |
| 330 | அம்மாள் | அம்மா, அம்மையார், பெண்மணி | | 2 |
| 330 | மூப்பன் | திருச்சபைத் தலைவர் | | 2 |
| 330 | கற்பனை | கட்டளை | | 4 |
| 330 | மாம்சத்தில் | மனிதனாக | | 7 |
| 330 | வஞ்சகர் | ஏமாற்றுகிறவர்கள், தந்திரக்காரர்கள் | | 7 |
| 330 | அந்திக்கிறிஸ்து | கிறிஸ்துவுக்கு எதிரி | | 7 |
| 330 | செய்கை | செயல் , உழைப்பு | | 8 |
| 330 | உபதேசம் | போதனை, அறிவுரை | | 9 |
| 331 | துர்க்கிரியை | தீய செயல், கெட்ட செயல் | | 11 |
| 331 | மை | எழுதும் ( வண்ணம்) திரவம் (இங்க்) | | 12 |
| 331 | முகமுகமாய் | நேரில் | | 12 |
| | | **III யோவான்** | | |
| 331 | மூப்பன் | திருச்சபைத் தலைவர் | | 1 |
| 331 | சத்தியம் | உண்மை | | 1 |
| 331 | நேசம் | அன்பு | | 1 |
| 331 | பிரியமானவனே | அன்புள்ளவனே | | 2 |
| 331 | ஆத்துமா | ஆன்மா, ஆத்மா | | 2 |
| 331 | அந்நியர் | அறியாத மக்கள் | | 5 |
| 331 | நலம் | நல்லது | | 6 |
| 331 | புறஜாதியார் | இயேசுவை நம்பாதவர்கள், புற இனத்தார் | | 7 |
| 331 | உடன் வேலையாட்கள் | ஒன்றாக வேலை செய்கிறவர்கள் | | 8 |
| 331 | கடனாளிகள் | கடமையைச் செய்ய வேண்டியவர்கள் | | 8 |
| 331 | முதன்மை | முதல்வர், தலைவர் | | 9 |
| 331 | கிரியை | செயல், காரியம் | | 10 |
| 331 | மனதாயிருத்தல் | விருப்பம், ஆசை | | 10 |
| 331 | மெய் | உண்மை | | 12 |
| 331 | நற்சாட்சி | நற்சான்று, நன்னடத்தைச் சான்று | | 12 |
| 331 | இறகு | பறவை இறக்கையினால் செய்த எழுதுகோல் | | 13 |
| 331 | சினேகிதர் | நண்பர் | | 14 |
| 331 | பேர்பேராக | பெயர்கள் வரிசை | | 14 |

| பக்கம் | வார்த்தை | பொருள் | அதிகாரம் | வசனம் |
|---|---|---|---|---|
| | | **யூதா** | | |
| 332 | காமவிகாரம் | காமவெறி பாலியல் (ஒழுக்கேடு) கொடுமை | | 4 |
| 332 | புரட்டி | திரித்து, மாற்றி, தவறாகச் சொல்லுதல் | | 4 |
| 332 | ஒன்றான | ஒரே ஒரு தேவன் | | 4 |
| 332 | மறுதலித்தல் | மறுத்தல் | | 4 |
| 332 | பக்கவழி | குறுக்குப் பாதை | | 4 |
| 332 | ஆக்கினை | தண்டனை | | 4 |
| 332 | பூர்வம் | ஆரம்பம் | | 4 |
| 332 | முன்னமே | முன்பாகவே , ஏற்கனவே | | 5 |
| 332 | நினைப்பூட்டுதல் | நினைவுபடுத்துதல், ஞாபகப்படுத்துதல் | | 5 |
| 332 | ஆதி மேன்மை | அதிகாரப் பொறுப்பு | | 6 |
| 332 | வாசஸ்தலம் | இருப்பிடம் | | 6 |
| 332 | தூதர்கள் | மேல்வானத்தில் வாழ்கிறவர்கள் | | 6 |
| 332 | மகா நாள் | பெரிய (தண்டனை) நாள் | | 6 |
| 332 | நியாயத்தீர்ப்பு | நீதிமன்றத் தீர்ப்பு | | 6 |
| 332 | நித்திய | நிரந்தரமான | | 6 |
| 332 | அந்தகாரம் | இருள் | | 6 |
| 332 | விபசாரம் | திருமணம் ஆன ஒருவர் வேறு ஒருவருடன் பாலுறவு தொடர்பு வைத்தல் | | 7 |
| 332 | அந்நிய மாம்சம் | இயற்கைக்கு எதிரான பாலியல் உறவு | | 7 |
| 332 | நித்திய அக்கினி | ஒரு போதும் அணையாத நெருப்பு, அக்கினி | | 7 |
| 332 | ஆக்கினை | தண்டனை | | 7 |
| 332 | திருஷ்டாந்தம் | எடுத்துக்காட்டு | | 7 |
| 332 | மாம்ச அசுசி | உடல் அசுத்தம் | | 8 |
| 332 | கர்த்தத்துவம் | ஆண்டவரின் அதிகாரம், ஆளுகை, ஆட்சி | | 8 |
| 332 | அசட்டை | புறக்கணிப்பு , அஜாக்கிரதை | | 8 |
| 332 | மகத்துவம் | மாட்சிமை | | 8 |
| 332 | தூஷித்தல் | திட்டுதல் | | 8 |
| 332 | பிரதான தூதன் | பிரதம, முதன்மையான தூதன் | | 9 |
| 332 | தர்க்கம் | வாதம், வழக்காடுதல் | | 9 |
| 332 | தூஷணம் | நிந்தனை, குற்றம், பழித்தல் | | 9 |
| 332 | சுபாவம் | இயல்பு (சொந்த புத்தி) | | 10 |
| 332 | வஞ்சகம் | ஏமாற்றுதல் | | 11 |

| பக்கம் | வார்த்தை | பொருள் | அதிகாரம் | வசனம் |
|---|---|---|---|---|
| | | **யூதா** | | |
| 332 | கறைகள் | தீட்டு | | 12 |
| 332 | அமளி | கொந்தளிப்பு | | 13 |
| 332 | மார்க்கம் | பாதை, வழி | | 13 |
| 332 | நியாயத்தீர்ப்பு | நீதித்தண்டனை தீர்ப்பு | | 14 |
| 332 | விரோதம் | எதிர்ப்பு | | 15 |
| 332 | அவபக்தி | பக்தி இல்லாத | | 15 |
| 333 | கண்டித்தல் | தண்டனை | | 15 |
| 333 | இச்சை | ஆசை | | 16 |
| 333 | இறுமாப்பு | பெருமை | | 16 |
| 333 | தற்பொழிவு | சுயலாபம் | | 16 |
| 333 | முகஸ்துதி | பிறரை பொய்யாகப் புகழ்தல் | | 16 |
| 333 | அப்போஸ்தலர் | அனுப்பப்பட்டவர்கள் | | 17 |
| 333 | நினைவு கூருங்கள் | நினைத்தல், ஞாபகம் | | 17 |
| 333 | துன்மார்க்கம் | தீய செயல், வழி | | 18 |
| 333 | இச்சை | ஆசை | | 18 |
| 333 | பரியாசக்காரர் | ஏளனம், கேலிசெய்வோர் | | 18 |
| 333 | பிரிந்துபோகிறவர்கள் | பிரிவினைவாதிகள் | | 19 |
| 333 | ஜென்ம சுபாவம் | பிறவிக்குணம் | | 19 |
| 333 | நித்திய ஜீவன் | மெய்வாழ்வு, தீர்க்காயுசு, அழிவில்லாத மெய்வாழ்வு | | 21 |
| 333 | அக்கினி | பெருநெருப்பு, நரகத்தீ | | 22 |
| 333 | மாம்சகறை | பாவத்தீட்டு | | 23 |
| 333 | வஸ்திரம் | ஆடை, உடை, துணி | | 23 |
| 333 | வழுவாதபடி | விழுந்துவிடாதபடி, வழுக்கி விடாதபடி, சறுக்கிவிடாதபடி | | 24 |
| 333 | மகிமை | மாட்சிமை, புகழ் | | 24 |
| 333 | சந்நிதானம் | பரிசுத்த இடம் | | 24 |
| 333 | மாசற்றவர் | பாவமற்ற, பரிசுத்தர் | | 24 |
| 333 | ஞானமுள்ளவர் | எல்லாம் அறிந்தவர் | | 25 |
| 333 | இரட்சகர் | காப்பாற்றுகிறவர், விடுதலை செய்கிறவர் | | 25 |

Phone : 89030 11350, E-mail : selwynde@gmail.com

| பக்கம் | வார்த்தை | பொருள் | அதிகாரம் | வசனம் |
|---|---|---|---|---|
| | | **வெளிப்படுத்தின விசேஷம்** | | |
| 333 | திருவுளம் | சொல்லுதல், பேசுதல் | 1 | 8 |
| 333 | அல்பா | கிரேக்க மொழியின் முதல் எழுத்து | 1 | 8 |
| 333 | ஓமெகா | கிரேக்க மொழியின் கடைசி எழுத்து | 1 | 8 |
| 334 | உறைந்த மழை | பனிக்கட்டி | 1 | 14 |
| 334 | உலைக்களம் | கொல்லன் பட்டரை (சூளை) | 1 | 15 |
| 335 | குறிக்கல் | அடையாளக்கல் | 2 | 17 |
| 335 | உள்ளிந்திரியங்கள் | ஆழ்மனதின் நினைவுகள் உணர்ச்சிகள், நோக்கங்கள் | 2 | 23 |
| 336 | ஆமென் | ஆம் நிச்சயமாக, உண்மையாக , உறுதியாக, அப்படியே நடக்கட்டும் | 3 | 14 |
| 337 | திரவியசம்பன்னர் | செல்வந்தர், பணக்காரர் | 3 | 17 |
| 338 | வஸ்து | பொருள் | 5 | 13 |
| 341 | எட்டி | கசப்பு | 8 | 11 |
| 343 | இரட்டு | ஆட்டுமயிரினால் செய்த முரட்டுத் துணி | 11 | 3 |
| 347 | ஞானார்த்தம் | ஆவிக்குரிய விளக்கம் | 11 | 8 |
| 348 | ஒரு ஸ்தாதி | 200 அடிகள் நீளம் | 14 | 20 |
| 348 | தாலந்து | 50 கி.கி (கிலோ கிராம்) | 16 | 21 |
| 350 | வர்த்தகர் | (சிறு) வியாபாரிகள் | 18 | 3 |
| 350 | விளம்புதல் | சொல்லுதல் | 18 | 3 |
| 350 | கைம்பெண் | விதவை | 18 | 7 |
| 350 | வர்த்தகம் | (சிறு) வியாபாரம் | 18 | 15 |
| 351 | அல்லேலூயா | தேவனைத் துதிப்போம் | 19 | 1 |

Phone : 89030 11350, E-mail : selwynde@gmail.com